
கல்கி
KALKI 1.4.90 ரூ. 2.50
இரட்டையர்கள்:
சந்தோஷங்களும்
சங்கடங்களும்



ட்ரை-வீவ் பிளாட்டிங் பேப்பர் சோதனை:

1. ஒரு மேஜைக் கரண்டி அளவு நீர் மையை விஸ்ப்பர் மீதும், ஒரு மேஜைக் கரண்டி அளவை வேறு ஏதாவது நாப்கின் மீதும் விடவும்.
2. இரண்டின் மீதும் பிளாட்டிங் பேப்பரை வைக்கவும்.
3. விஸ்ப்பர் மீது வைக்கப்பட்ட தான் மிக சுத்தமாகவும் மிக உலர்ந்ததாகவும் தோன்றும்.

வேறு எந்த நாப்கினையும்விட மிக சுத்தமாகவும் மிக உலர்ந்ததாகவும் வைத்துக்கொள்கிறது

ஏனெனில், விஸ்ப்பரில் மட்டுமே 'ட்ரை-வீவ்' என்ற ஒப்பற்ற உறை உள்ளது. இந்த உறை, உங்களிடமிருந்து ஈரத்தை, நாப்கினின் உள்அடுக்கிற்குள் இழுத்துக் கொள்கிறது. ஆகவே அதன் மேற்புறம், எப்போதும் உலர்ந்ததாக இருக்கும். இப்போதுதான் நீங்கள் நாப்கினை மாற்றியது போலத்தோன்றும்.

விஸ்ப்பர், உங்கள் உள்ளாடைக்குள் கச்சிதமாகப் பொருந்திக் கொள்கிறது. நழுவாது, நகராது. காரணம், அதில், அதிக-விரிவான ஒட்டும்பட்டி உள்ளது. அது, நாப்கினை வசதியாக உரிய இடத்தில் வைத்துக் கொள்கிறது.

விஸ்ப்பர் பற்றி ஏதாவது விளக்கம் தேவையா?


எங்களிடம் ஒரு விசேஷ மிஸ் விஸ்ப்பர் ஸர்வீஸ் உள்ளது. இது, விஸ்ப்பர் பற்றியோ பெண்ணின் சுகாதாரம் பற்றியோ உங்கள் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு விளக்கம் தரத் தயாராக உள்ளது. தொடர்பு கொள்ளவும் இம் முகவரிக்கு:



Ms. Whisper* Service, P.O. Box No. 6276, Bombay 400 011.

பாதுகாப்பின் மிக சுத்தமான மிக உலர்ந்ததான உணர்விற்கு - விஸ்ப்பர்.

CLARION/B/PG/53/203 TAM



பட்ஜெட்
இடுக்கண் வருங்கால் நகுக!
'பெர்த்' கட்டண உயர்வால் மெத்தை இந்த உணர்வைத் தான் தரும்!
ரயில் விபத்துலே இறந்தவங்களுக்கு நஷ்டஈடு ரெண்டு லட்சம்......! உங்களுக்கும் அது கிடைக்கலாம்! ..உங்கம்மா போற ட்ரெய்ன் விபத்துக்குள்ளாகி உங்கம்மா...
• என்ன சங்கீதம் நாராசமா இருக்கே!
• சார், அது சங்கீதம் இல்லே! மந்திரியின் ரயில்வே பட்ஜெட் உரையைப் படிக்கிறாங்க!
முந்தி டிக்கெட் வாங்காமெ ட்ராவல் பண்ணா நாப்பது ரூபா லாபம்... இப்ப இருபது ரூபா அதிகம் லாபம்!.. ஆக மொத்தம் அறுபது ரூபாய் லாபம்!

புதியவள்

ஒரு நாள் காலை 10 மணியளவில் டீக்கடையிலிருந்து திரும்பிய நேரம், தெரு நடையில் புதிதாய் ஒரு பெண்ணின் காலணி. பூஜையில் இருக்க வேண்டிய அப்பாவின் குரல் ஆர்பாட்டமாய்க் கேட்கிறது. நான் புதியவள் முன் அப்பா என்னை கிழிக்க ஆரம்பித்து விடப்போகிறார் என்ற அச்சத்தில் சப்தமின்றிச் செருப்பை உதறி நடந்தேன். ''டேய் முக்கேஷ்!'' அப்பாவின் குரல். பவ்யமாய் ஹாலுக்குள் பிரவேசித்தேன். ''யார் தெரியுதாடா?'' என்றார்



முகம் நிறைந்த சிரிப்புடன், ''சத்தியமாய்த் தெரியவில்லை'' என்று கூறாமல் மையமாய்ப் புன்சிரித்தேன்.

''கிருஷ்ணையா பொண்ணுடா...! நான் சொல்வேனே..... என் பெஸ்ட் ஃப்ரண்டுனு...''சரமாரியாய்ப் பிரதாபம் பேச ஆரம்பித்த அப்பாவை திசை திருப்ப, ''ஆங்... ஆமாமா.... வணக்கங்க!'' என்று கூறிவிட்டுக் கழன்று கொள்ளப் பார்த்தேன்.

''ஏய்! எங்கடா போறே.... இந்தப் பொண்ணு பேரு உத்பலா... இவன் மை ஒன்லி ஸன் முக்கேஷ்.... வெரி வெரி ப்ரில்லியண்ட்... C.A. பண்றான். நான் குளிச்சுட்டு வந்துர்றேன் பேசிக்கிட்டிருங்க...'' என்று விட்டு எழுந்தார். வழக்கமாய் ''யேய்.... கய்தே....'' என்று செல்லமாகக் கூப்பிடும் என் அம்மாவை.... ''மனோ'' என்று அழைத்தபடி உள்ளே போனார்.

பெரிசாய்ப் 'பேசிக்கிட்டிருங்க'வாம்... இவளோடு என்னத்தைப் பேச... இவள் பெயரைப் போலவே... இவள் எண்ண ஓட்டமும் புரிபடவில்லை. பப்ளிமாஸ் முகம், வளைவு, நெளிவு இல்லாத ரோட்ரோலர் தனமான உருவம். இதில் சோடாபுட்டி கண்ணாடி வேறு!

இன்றைய நாகரிகத்துக்கு நான் அப்டுடேட். கெண்டைக்கால் தெரிய லுங்கி, தொள தொள காட்டன் சட்டை, கழுத்தில் கறுப்புக் கயிறு, பின்னோக்கிக் கோதப்பட்ட தலை முடி... துருத்தும் கன்ன எலும்புகள், கையில் எவர்சில்வர் காப்பு....

கேசவன் பங்கருகில் ஜமாவுடன் நிற்கையில் கையில் சிகரட் இருந்து விட்டால் போதும், பூலன் தேவியே வந்தாலும் என் கமெண்டுக்குத் தப்ப முடியாது.

என்றாலும்... இப்போது எப்படிப் பேச? ''ஹாய்!'' என்றால் படக்கென்று அழுதாலும் அழலாம். இதில் பேசியாக வேண்டும்! மறுபடி சங்கடமாய்ப் புன்னகைத்தேன்.

''ஸி.ஏ. பண்றதா அப்பா சொன்னார்... உங்க ஃப்யூச்சர் ப்ளான் என்ன?'' என்ற வண்ணம்... கால்மேல் கால் போட்டு கன்னத்துக்குக் கை தந்து பெரிய மனிதப் பார்வை வீசினாள்.

'பி. காம். முடிக்க வழியில்லை... இதில்.. ஸி.ஏ. ஒரு கேடா?' என்று பொரிய முற்பட்டபோது அப்பா நுழைந்தார். பின்னாலேயே அம்மா. மேற்படி உத்பலா யூனிவர்ஸிட்டியில் தீஸிஸ் சப்மிட் செய்ய வேண்டுமாம். நான் துணைக்குப் போக வேண்டுமாம். இந்தப் பூனையை எவன் சட்டை செய்யப் போகிறான். அப்பா என்னைத் தனியே அழைத்து ''ஏய்! உன் வால்தனமெல்லாம் காட்டாம ஒழுங்கா இரு. என் மரியாதையைக் காப்பாத்து, ஊர்சுத்தப் போயிராத!'' என்று எச்சரித்தார்.

அம்மாவின் டிஃபனை, அப்பாவின் 19ஆம் நூற்றாண்டு ஆங்கிலத்தை, அடாசு கிராமஃபோனைப் புகழ்ந்து தள்ளினோம்.

ஒரு வழியாய்த் தயாராகி ஆட்டோவில் குலுங்குகையில்... சதிப்பார்வையுடன் ''முக்கேஷ்! நம்பிட்டீங்களா... யூனிவர்ஸிட்டி போறது தீஸிஸ் சப்மிட் பண்ற துக்கில்ல... லவ் காரணமா டிஸ்கன்டினியூ ஆன டிகிரியைத் தொடரத்தான்.'' என்றாள். அப்பாவின் ஆங்கிலத்தை, அம்மாவின் டிஃபனை, அடாசு கிராம ஃபோனைப் புகழ்ந்ததெல்லாம் உத்பலாவின் அப்பா தந்த உத்தரவுகளின்படிதானாம்!

நான் டிஸ்கன்டினியூ ஆகிப்போன பி.காமைச் சொல்ல, கண்ணாடியைக் கழற்றிவிட்டு கண்ணில் நீர் வரச் சிரித்தாள். கண்ணாடியில்லாமல் அழகாகவே இருந்தாள்.

சித்தார்·எஸ்·முருகேசன்



முகமூடி அணிந்தவர் யார்?

ஏப்ரல் 1 ஸ்பெஷல்

கணுக்காலைத் தொடும்படி வெள்ளை அங்கி அணிந்திருந்தார் அவர். அரேபிய ஷேக் போல தலையிலும் ஒரு வெள்ளைத் துணி. அதன் மேல் ஒரு கறுப்புத் தொப்பி. முகத்திலே 'அபாய சிக்னல்' போல மண்டை ஓடு டிசைனில் அட்டை முகமூடி.

இவரைக் காரில் ஏற்றிக் கொண்டு அசோக் நகரில் உள்ள அசோக் விகார் அபார்ட்மெண்ட்டுக்குப் போய்ச் சேர்ந்த போது மாலை மணி ஆறு நாற்பது. குழந்தைகள், பெரியவர்கள் என எல்லாத் தரப்பினருமாய் ஆண்களும், பெண்களுமாகச் சுமார் முப்பத்தைந்து பேர் கூடியிருந்தார்கள்.

''ஆறரை மணிக்கு முகமூடியணிந்து ஒருவர் வருவார்! கண்டுபிடித்தால் பரிசு!'' என்று சொன்னீர்கள். ஆறரைக்கு யாரும் வராததால், இது ஏதோ ஏப்ரல் ஃபூல் வேலை'' என்று நினைத்து விட்டோம்!'' என்றார் ஒரு பெண்மணி.

''ஹலோ! சௌக்கியமா?'' என்று நாம் அழைத்துச் சென்ற முகமூடிக்காரர் கையை நீட்டினார், ஒரு குழந்தையிடம். அது 'வீல்' என்று அலறியபடி, அம்மாவிடம் ஒட்டிக் கொண்டது.

''ஐ' ஆம் ஸ்ரீதர். நீங்கள் யார் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்றார் ஒருவர்.

''அதைக் கண்டுபிடித்துப் பரிசு பெறுவது தானே உங்கள் வேலை?'' என்றார் முகமூடி.

''யாராவது ஒரு பிரபலமான ஆணுக்குப் பெண் வேஷம் போட்டு அழைத்துக் கொண்டு வருவீர்கள் சுலபமாய்க் கண்டு பிடித்து விடலாம் என்று எதிர்பார்த்தேன்!'' என்றார் ஒரு வயதானவர்.

''ஏதாவது 'க்ளு' கொடுத்தால்தான் கண்டுபிடிக்க முடியும். இல்லையெனில் நோ சான்ஸ்'' என்று நாலைந்து பேர் கோரசாய் வேண்டுகோள் விடுக்க, முகமூடிக்காரர், ''எனக்கும் தமிழ்நாடு சட்டசபைக்கும் தொடர்பு உண்டு'' என்று முதல் 'க்ளு'வைச் சொன்னார்.

''ஸ்டாலின்! அவர்தான் தொகுதி மக்களிடையே மிகவும் சகஜமாய்ப் பழகுகிறார்!'' என்றார் ஒருவர்.



''என் அப்பா முதலமைச்சருமில்லை! நான் ஸ்டாலினுமில்லை'' என்றார் முக மூடிக்காரர்.

''இரா. அன்பரசு! அவர்தான் சமீபத்திய ரயில் மறியலின் போது முஸ்லிம் போல வேடமணிந்து வந்தார்'' என்று இன்னொரு வர் சொல்ல, பக்கத்திலிருந்தவர் ''ஐயோ! அன்பரசு எம். பி.! இவர் சட்டசபையைச் சொல்கிறார்'' என்று ஒரு குட்டு குட்டினார்.

''இன்னொரு 'க்ளு' சொல்லுங்களேன்...''

''நானும் ஒரு சிறிய நடிகன்தான்.''

''குள்ள மணியா? தவக்களையா? அவர்கள் இத்தனை உயரமில்லையே....?''

''சிறிய நடிகன் என்றேனே தவிர உருவில் இல்லை.''

''உடலமைப்பைப் பார்த்தால் எஸ். வி. சேகர் மாதிரி இருக்கிறதே!''

''ஆமாம்! அவர் கூட எலெக்ஷனில் நின்றாரே! எஸ். வி. சேகர்தான்!''

''நான் சேகர் இல்லை!''

''சார்! அப்போ இன்னொரு க்ளு?''

''எனக்கும் கல்யாணத்துக்கும் சம்பந்தமுண்டு.''

''சினிமா நடிகர்! கல்யாணம்! சார் நீங்க குண்டு கல்யாணமா?''

''ஏன் சார்! இண்டலா!''

''விகாரப் பல் கொண்ட முகமூடி... கல்யாணம்... அப்படியென்றால்... கல்யாணராமன் கமல்! என்ன, என் யூகம் சரிதானே?''

''சின்ன நடிகன் என்றுதானே சொன்னேன்!''

''எனக்கென்னவோ, ம. வி. சம்பந்த மாணவர்கள் யாராவது இருக்கும் என்றுதான் படுகிறது!''

''இன்னொரு க்ளு ப்ளீஸ்!''

''உங்கள் காலை உணவு எனக்கு டின்னர்!''

''ஊகூம். ஒண்ணும் புரியலை. கொஞ்சம் விளக்கமாய்...''

''நீங்கள் காலையில் செய்கிற காரியத்தை நான் இரவில் செய்வேன்!''

''ஏன் சார்! நீங்க தினமும் ராத்திரிதான் தூங்கி எழுந்து பல் தேய்த்து, காப்பி குடித்து....''

''அப்புறம்....?''

''நியூஸ் பேப்பர் படித்து....''

''எஸ்..... எஸ்.....''

''அப்படின்னா நீங்க ஒரு நியூஸ் வாசிப்பவர். ஆனால் நிச்சயம் ஷோபனா ரவி, சந்தியா ராஜகோபால், ஃபாத்திமா இல்லை. என்று ஒருவர் சொல்ல, தொடர்ந்து.

''உங்களுக்குக் கவிதை எழுத வருமா? அப்படியென்றால் தமிழன்பன்!''

''வங்கியில் வேலை பார்ப்பவரா? அப்படியென்றால் வரதராஜன்!''

''இல்லை, செந்தமிழ் அரசு!'' என்று சரமாரியான யூகங்கள் வெளிப்பட்டன.

''முகமூடியணிந்தவரைச் சரியாக யூகித்தவர் திருமதி அருணா. அவருக்குக் கல்கி சார்பில் ரூ. 50 பரிசு அளிக்கப்பட்டது.

முகமூடியணிந்து வந்தவர் யார் எனத் தெரிய வேண்டுமா?

பார்க்க 60ம் பக்கம்!



அடுத்த இதழில்...

சினிமாவில் கலெக்டராய் ஜொலித்தவர் சென்னை கலெக்டரைச் சந்திக்கிறார்.

+

டென்ஷனைக் குறைக்க...

இலவச இணைப்பு

தெரியாத்தனமாய்ச் சொல்லப் போய்...











அசோக்

— எஸ். டி. அரசு

சந்தோஷங்களும் சங்கடங்களும்

"சுமார் முப்பது வருடங்களுக்கு முன் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தேன். ஒரு பெண்; ஒரு பையன்" என்று கூறும் ராஜம்மாள், தொடர்ந்து தம் அனுபவத்தைச் சொல்லுகிறார்: "எங்கள் பரம்பரையில் வேறு யாருக்குமே இரட்டைக் குழந்தைகள் கிடையாது. தென்னாற்காடு மாவட்டத்தில் கோட்டை மருதூர் என்ற குக்கிராமம். அங்கேதான் என் அம்மா வீட்டுக்குப் பிரசவத்துக்குப் போயிருந்தேன். வயிறு மிகப் பெரியதாய் இருந்ததால், 'குழந்தை நல்ல வளர்த்தி' என்றுதான் ஊரார் பேசிக்கொண்டிருந்தார்களே தவிர, இரட்டை என்று தெரியாது. வலி எடுத்து, அரை மணி நேர இடைவெளியில் முதலில் பெண்ணும், அடுத்து பையனுமாய்ப் பிறந்தார்கள். கிராமத்து ஜனங்கள் இரட்டைக் குழந்தை பிறந்ததை ரொம்ப அதிசயமாய் வந்து வந்து பார்த்து விட்டுப் போனார்கள். அந்தச் சமயத்தில் எனக்குப் பெருமிதமாயும் சந்தோஷமாகவும் இருந்தாலும், ஒரே சமயத்தில் இரு குழந்தைகளையும் சமாளிப்பது கஷ்டமாய்த்தான் இருந்தது. நல்லவேளையாக அம்மா வீட்டிலும் சரி, மாமியார் வீட்டிலும் சரி, கூட்டுக் குடும்பம். நிறையச் சொந்தக்காரர்கள் இருந்ததால், உதவிக்கு மாறி மாறி யாரையாவது அழைத்துக் கொள்ள முடிந்தது. அவர்களும் சந்தோஷமாய் உதவினார்கள். இந்தக் காலம் மாதிரி இல்லை.

இரட்டைக் குழந்தை என்று ஸ்கேன் செய்து பார்த்ததில் ஊர்ஜிதமானதும், பெற்றோரின் மனநிலை எப்படி இருக்கும்? சைதாப்பேட்டையைச் சேர்ந்த உமா மயூரநாதன் சொல்கிறார்: "எனக்கு மிகவும் பயமாய்த்தான் இருந்தது. அதுவும் முதல் பிரசவம் என்பதால், இரண்டென்று நினைத்துக் கொண்டு, பயத்தில் உறைந்து போய் உட்கார்ந்து கொண்டிருப்பேன். என் மாமியார்தான் எனக்கு ஆறுதல் சொல்லுவார். என் கணவர், "மனத்தை வீணாகப் போட்டு அலட்டிக் கொள்ளாதே! இந்தக் காலத்தில் மருத்துவத்துறை எவ்வளவோ முன்னேறியிருக்கிறது. தைரியமாய் இரு!" என்பார். உரிய நேரத்தில் இரண்டும் பெண் குழந்தைகளாகப் பிறந்த போது அண்டை வீட்டுக்காரர் ஒருவர், "ஆனாலும் ஆண்டவன் உன்னை இப்படிச் சோதித்திருக்க வேண்டாம்!" என்று கூறின போது எனக்கு மிகவும் வேதனையாய் இருந்தது. எனக்கு ஆறுதல் கூறித் தேற்றினார் என் கணவர். உற்சாகப்படுத்தா விட்டாலும் நண்பர்கள், உறவினர்கள் உள்ளத்தைப் புண்படுத்தாமலாவது இருக்கலாமே!"

"இரட்டைக் குழந்தைகள் என்றால் இரு மடங்கு கஷ்டம்தான்" என்று கூறுகிறார் வங்கி அதிகாரியான டேவிட். "என் தாய் மாமனின் மனைவிக்கு மூன்று குழந்தைகள் ஒரே சமயத்தில் பிறந்து, இரண்டு



* சஞ்சய் — விஜய்: இரட்டிப்பு மகிழ்ச்சி



* ரோஷிணி — சாந்தினி: பத்து நிமிடமே வித்தியாசப் பட்டாலும் அக்காதான்!

குழந்தைகள் உயிர் பிழைத்தன. தவிர உறவுக் காரர்கள் இரண்டு மூன்று பேர்களுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கின்றன. ஆனாலும் எங்களுக்கு இரட்டை என டாக்டர் கூறிய போது எனக்கு வியப்பும் கவலையும் ஏற்படத்தான் செய்தன. இரண்டு குழந்தைகளையும் கவனித்துக் கொள்ள இவள் பட்ட பாடு...''



* உமா — மயூரநாதன் தம்பதிகள்: இரண்டும் பெண்கள்.

டேவிட்டின் மனைவி பிரதிபாவும் வேலைக்குப் போகிறவர்தான். சொல்கிறார்: ''இரண்டு பேருக்கும் பால் கொடுத்து, தூங்க வைத்து, துணி மாற்றி... அப்பப்பா, ரெஸ்ட்டே இல்லாமல் ரொம்பவும் திண்டாடிப் போய் விட்டேன். முதலில் பிறந்த சாந்தினி கொஞ்சம் ரிசர்வ்டு. பத்து நிமிட இடைவெளியில் அடுத்துப் பிறந்த ரோஷிணி கொஞ்சம் நோஞ்சான். ஆனாலும் கலகல டைப். ரோஷிணி, சாந்தினியை 'அக்கா' என்றே குறிப்பிடுவாள்.''

"இப்போது கூட என் மகன்கள் சஞ்சய், விஜய் இரண்டு பேருடைய குரலுக்கும் இடையே எங்களால் வித்தியாசம் கண்டு பிடிக்க முடியாது'' என்று சொல்கிறார் கோண்டாஸ். ''பிறந்தவுடன் இரண்டு பேருமே அச்சாய் ஒரே மாதிரியாய் இருப்பார்கள். யாருக்குப் பால் கொடுத்தோம்? யாருக்குக் கொடுக்கவில்லை என்று அடையாளம் தெரியாது. அதற்கென சஞ்சய்யின் கையில் கறுப்பு நூல் ஒன்றைக் கட்டி வைத்திருப்போம்! பிறந்தவுடன் இரண்டு பேரும் ஆறு பவுண்டு எடை இருந்தனர். ஒவ்வொரு பிறந்த நாளன்றும் இரண்டு பேரையும் எடை பார்ப்போம். ஒரே எடை இருப்பார்கள்.



* அருண் — அருணா: ஆணும் பெண்ணுமாய்...

ஆனால் இப்போது ஒருவன் ஆறு அடி ஒரு அங்குலம். இன்னொருவன் ஐந்தடி பதினோரு அங்குலம். சஞ்சய், இஞ்சினியரிங் டிப்ளமா முடித்து விட்டான். விஜய் பி. டி. எஸ். படிக்கிறான். ஆரம்பத்தில், இரண்டு பேருடைய ஆர்வங்களும் ஒரே மாதிரி இருந்தாலும் வயது ஆக, ஆக, முற்றிலுமாய் மாறுபட்டுப் போய் விட்டன. சஞ்சய்க்குக் கார், பைக் என்று ஆட்டோமொபைல் சமாசாரங்களில் ஆர்வம் அதிகம். விஜய்க்கு வனவிலங்கு, போட்டோகிராபி ஆகியவற்றில் விருப்பம் அதிகம். சஞ்சய், விஜய் இரண்டு பேரும் எங்கள் மகிழ்ச்சியைத்தான் இரட்டிப்பாக்கியிருக்கிறார்கள்.''

கொரட்டூர்வாசியான நாராயணனுக்கு ஜெய் ஆனந்த், விஜய் ஆனந்த் என்று இரட்டைப் பையன்கள். ''பையன்களாய்ப் பிறந்ததில் எங்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியே! இரண்டில் ஒன்று பெண்ணாக இருந்

இருக்கலாம் என்று என் மனைவிக்குச் சிறிதளவு ஏமாற்றம். ஆனால் எனக்கு அப்படியெல்லாம் இல்லை. ஜெய், விஜய் இரண்டு பேரும், பார்க்க ஏறத்தாழ ஒரே மாதிரியாய் இருப்பதால், விஷயம் தெரியாதவர்கள், குழப்பமடைந்த சம்பவங்கள் நிறைய உண்டு.''

நாராயணன் வீட்டுக்கு சமீபத்தில் வசிக்கும் திருமதி. பத்மா ராஜேந்திரன் கூறுகிறார்:

''ஒரு விஷயத்தைக் கூறி 'உன் அம்மாவிடம்போய்ச் சொல்லு' என்று கேட்டுக்கொள்வேன். சற்று நேரம் கழித்து, மறுபடி பார்க்கும் போது, 'உன் அம்மாவிடம் சொன்னாயா?' என்று கேட்டால், 'என்னத்தை அம்மாவிடம் சொன்னேனா என்கிறீர்கள்?' என்பான். அப்புறம்தான் குழப்பம் நிகழ்ந்தது புரியும்!''

சைக்கிள் கற்றுக் கொண்ட போது, ஒருவன் குழந்தை மீது மோதி விட, அடுத்தவனுக்குத் தர்ம அடி விழுந்தது. ஒருவன் திருட்டுத்தனமாய்ச் சினிமாவுக்குப் போனதை நண்பர் மூலமாய் அறிந்து, அப்பா, அடுத்தவனை அடித்தது. ஒரு கல்யாணத்தில் ஒருவன் முதல் பந்தியிலும் அடுத்தவன் இரண்டாம் பந்தியிலும் சாப்பிட்ட போது, ''என்னடா! போன பந்தியில்தானே சாப்பிட்டாய்?'' என்ற தர்ம சங்கடக் கேள்வியைச் சந்திக்க நேர்ந்தது என்று பல சுவாரசியமான சம்பவங்களை நினைவு கூர்கிறார்கள் கொரட்டூர் இரட்டையர்கள்.

"ஆணும் பெண்ணுமாக இரட்டைக் குழந்தைகள் பிறக்கப் போவது தெரிந்த போது எங்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி, சில நண்பர்கள், 'ஒரு ஆண், ஒரு பெண்ணாய் இருந்தால் ஒன்று பிழைக்காது' என்று பயமுறுத்திய போது இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய் விட்டது. நாங்கள் அடைந்த வருத்தத்துக்கு அளவில்லை. ஆனால் ஆண்டவன் கிருபையில் அருண், அருணா இரண்டு பேரும் நன்றாய் இருக்கிறார்கள். பிறந்த ஒரு வருடம் வரை நான் வீட்டை விட்டு வெளியே எங்கும் போனதில்லை. குழந்தைகளுக்குப் பணிவிடை செய்வதற்கே நேரம் சரியாய்ப் போய் விட்டது. இதனால் உடல் ரீதியாய்ச் சோர்வு சில சமயம் தோன்றினாலும், மனத்தளவில் உற்சாகமாய் இருக்கப் பழகிக் கொண்டு விட்டேன். இரட்டையரால் எங்களுக்கு இரட்டிப்புச் சந்தோஷமே!'' என்கிறார் சாவித்ரி யோகா.

— எஸ். சந்திரமௌலி

அட்டை வண்ணப்படம் மற்றும்
படங்கள்: **யோகா**

டாக்டர் பேட்டி:



• டாக்டர் ருக்மிணி சௌரிராஜன்

“இரட்டையர் என்று தெரிந்தால் சிசேரியனுக்குத் தயாராவோம்!”

கேள்வி: இரட்டைக் குழந்தைகள் ஏன் உருவாகின்றன?

டாக்டர் ருக்மணி சௌரிராஜன்: பெரும்பாலான கேஸ்களில், இது பரம்பரையான விஷயம்தான். கணவன் வழியிலோ, மனைவி வழியிலோ இரட்டைக் குழந்தைகள் பிறந்திருந்தால், அவர்களுக்கும் இரட்டை பிறக்க சாத்தியமுண்டு. அதுவும் தவிர, சமீப காலமாய், செயற்கை முறையில் கருத்தரிப்பை ஊக்குவிக்கச் சாப்பிடப்படும் மாத்திரைகளாலும் இரட்டைக் குழந்தைகள் பிறக்க வாய்ப்பு உண்டு.

கே: இரட்டைக் குழந்தைகள் பிறப்பது

அபூர்வமா?

டாக்டர்: இல்லை என்றுதான் கூற வேண்டும். புள்ளி விவரப்படி, உலகில் பிறக்கும் குழந்தைகளில் சராசரியாய் 1.1 சதவிகிதம் இரட்டையர்தான். உலகிலேயே அதிக அளவில் இரட்டையர்கள் மங்கோலிய மக்களுக்கும், நீக்ரோ இனத்தவருக்கும்தான் பிறக்கின்றனர்.

கே: இரட்டைப் பிரசவம் சிக்கலானதா?

டாக்டர்: எல்லா கேஸ்களிலும் அப்படியென்று சொல்ல முடியாது. பிறக்கும் போது இரண்டு குழந்தைகளுமே அல்லது ஒன்றாவது கொஞ்சம் எடை குறைவாய், சோனியாய் இருக்கும். சில சமயங்களில் இரண்டும் ஒட்டிக் கொண்டே பிறக்கலாம். அந்த மாதிரி சந்தர்ப்பங்களில், ஆபரேஷன் செய்து பிரிக்க வேண்டும். ஆபரேஷன் எல்லா கேஸ்களிலும் வெற்றியடையும் என்று கூற முடியாது.

கே: இரட்டைக் குழந்தைகளைக் கருவுற்ற பெண்ணுக்கு உங்கள் அறிவுரை என்ன?

டாக்டர்: இவர்கள் வயிறு சராசரியை விடப் பெரியதாய் இருக்கும். அடிக்கடி வயிற்றைக் குமட்டும். சிறிது நேரத்திலேயே களைத்துப் போய் விடுவார்கள். கால்களில் வீக்கம் கூட இருக்கலாம். இவர்களுக்கு அதிகமாய் ஓய்வு தேவை. மனத்தில் இதைப் பற்றியே நினைத்து பயந்து கொண்டிருக்கக் கூடாது. கவனத்தை வேறு திசைகளில் திருப்புவதுடன் இரட்டைக் குழந்தைகள் பிறப்பதில் நல்ல அம்சங்களை எண்ணி மகிழ்ச்சி அடைய வேண்டும். நிறைய பளு தூக்கி வேலை செய்யக் கூடாது.

கே: இரட்டைக் குழந்தைகள் என்று கருவுற்ற பின் சீக்கிரமாய்க் கண்டுபிடிக்க வழி உண்டா?

டாக்டர்: கருவுற்றிருப்பது ஊர்ஜிதமாகி விட்டால், நாற்பத்தி இரண்டாம் நாளே ஸ்கேன் செய்து கண்டுபிடித்து விடலாம்.

கே: இரட்டைப் பிரசவங்களில், இரண்டு குழந்தைகளுமே நார்மல் டெலிவரியாய் இருக்குமா?

டாக்டர்: ஒரே குழந்தையைப் பிரசவிப்பதென்றால் கூட தேவைப்படும் போது சிசேரியன் செய்கிற நாள் இது. இரட்டையர் விஷயத்தில் இரண்டுமே நார்மல் டெலிவரியில் இருப்பது ரொம்பவும் அரிது. முதல் குழந்தைக்கும், அடுத்த குழந்தைக்கும் அதிக பட்சம் அரைமணி நேரம் இடைவெளி இருக்கலாம். அதை விட அதிகமானால் பிள்ளை பெறும் தாய்க்குச் சில சிக்கல்கள் தோன்றும். எனவே, சிசேரியன் செய்து இரண்டாவதை வெளியே கொண்டு வந்து விடுவோம்.

கே: இரட்டைக் குழந்தைகளில், ஒன்றுக்கு உடம்பு சரியில்லையெனில், அடுத்ததற்கும் உடம்புக்கு வரும் என்பதெல்லாம் மருத்துவ ரீதியில் உண்மையா?

டாக்டர்: இரண்டு குழந்தைகளுக்கும் ஒரே சமயத்தில் உடம்புக்கு வரும் என்பதற்கு மருத்துவ ரீதியான ஆதாரம் இல்லை. ஆனாலும், ஒன்றாய் வளர்வதால் இருமல், ஜலதோஷம், தோல் சம்பந்தப்பட்ட நோய்கள் போன்றவை ஒரு குழந்தையிடமிருந்து, இன்னொரு குழந்தைக்குப் பரவக்கூடும்.

கே: இரட்டைக் குழந்தைகளில், முதலாவதாய்ப் பிறக்கிற குழந்தை, இரண்டாவதாய் உருவானது என்றும், இரண்டாவதாய்ப் பிறக்கும் குழந்தை முதலில் உருவானது என்றும் அதனால் இரண்டாவது பிறக்கும் குழந்தைதான் மூத்தது என்றும் சொல்லப்படுவது குறித்து...

டாக்டர்: அது சரியில்லை. கருப்பைக்குள் இரண்டு குழந்தைகளும் ஒரே நேரத்தில்தான் உருவாகின்றன. முதலில் பிறக்கும் குழந்தைதான் மூத்தது.

பேட்டி: **மௌஷ்மி**

"தினமும் நம்ம கடையில அல்வா வாங்கிட்டுப் போறியே, எதுக்கு?"

"திருடப் போகிற இடத்துல, துணிக்குப் பதிலா உங்க கடை அல்வாவைத்தான் வெச்சு அடைப்பேன்... யாரும் வாயைத் திறக்கவே மாட்டாங்க!"

— வி. ரேவதி.





"ரஞ்சித் விலாஸ் வேண்டாம், மங்கள விலாஸ் போகலாம்; அங்கேதான் இட்லி பஞ்சாட்டமா இருக்குங்கறீங்களே, எப்படிச் சொல்றீங்க?"

"நேத்து சாயந்திரம் மாவாட்டி வெச்சிட்டு வந்திருக்கற எனக்கு இது கூடவா தெரியாது?"

— க. ரத்னம்.



கல்கி

1990 ஏப்ரல் 1
மலர்: 48 இதழ்: 35
சுக்ல பங்குனி 19



கிராமப்புற பட்ஜெட்


பட்ஜெட் என்பது அரசாங்கத்தின் வரவு செலவுக் கணக்கு மட்டுமல்ல, அரசின் பொருளாதார சிந்தனையைப் பிரதிபலித்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டும் ஓர் ஆவணம் என்பது உண்மையானால், வெகு காலத்துக்குப் பிறகு தண்டவதே ஒரு நல்ல பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருக்கிறார் என்று சொல்லலாம். பட்ஜெட், தேசிய முன்னணியின் தேர்தல் வாக்குறுதிகளையும் தெளிவான பொருளாதாரக் கொள்கைகளையும் நிச்சயமாகப் பிரதிபலிக்கிறது.


எழுபது சதவீத மக்கள் கிராமப்புறங்களில் வசிக்கும் போது, அவர்கள் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டுதான் எந்த பட்ஜெட்டும் உருவாக வேண்டும். அவர்கள் வேலையின்மை, வறுமை காரணமாக நகர்ப்புறங்கள் நோக்கிக் குடி பெயர்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இந்த நோக்கில்தான், ''அரசின் முதலீடுகளில் ஐம்பது சதவீதத்தைக் கிராமப்புறங்களுக்கு ஒதுக்குவோம்'' என்று தேசிய முன்னணித் தலைவர்கள் தேர்தலின் போது கூறினார்கள். அதைச் செய்து காட்டியிருக்கிறார் தண்டவதே. விவசாயம், குடிசைத் தொழில்கள் என்று கிராமப்புற வளர்ச்சி, வேலை வாய்ப்புக்குத் தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். இந்த ஒதுக்கீட்டில் நூறு சதம் இல்லாவிட்டாலும், 85 சதமாவது மெய்யாலுமே மக்களுக்குப் பயன் தரத்தக்க வகையில் செலவானால் பட்ஜெட்டின் நோக்கம் நிறைவேறும். அதாவது, பண விரயமும், இடைத்தரகரின் கொள்ளையும் தவிர்க்கப்பட வேண்டும். தேசிய முன்னணி அரசு இந்த விஷயத்திலும் கண்டிப்புக் காட்டும் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம்.

கடன் ரத்து என்பது எந்தக் கட்சியுமே, எந்த ஆட்சியுமே பேசக் கூடாத ஒன்று. சொல்லித் தொலைத்து விட்டார்கள். இதனால் வங்கிகள் அடையப் போகும் நஷ்டத்தை ஈடுகட்ட ஓர் ஆரம்பமாக ஆயிரம் கோடி ஒதுக்கியிருக்கிறார் நிதி அமைச்சர். 'இந்தக் கடன் ரத்து, வசதி இருந்தும் வேண்டுமென்றே திருப்பித் தராமல் இருப்பவருக்குப் பொருந்தாது' என்றும், 'எதிர்காலத்தில் இந்தக் கடன் ரத்து விவகாரம் தொடர்கதையாகாது' என்றும் கொடுக்கப்பட்டுள்ள உறுதிமொழிகள் ஆறுதல் அளிப்பன. இந்த யதார்த்தப் போக்கு நீடிக்கட்டும்.

கம்பெனிகளுக்கு இருந்து வரும் ஒரு முதலீடு சலுகையை ரத்து செய்தாலும் கூடவே, வரிச் சுமையைத் தண்டவதே கணிசமாகக் குறைத்திருப்பதால் மொத்தத்தில் தொழில் துறை ஊக்கம் பெற்றுள்ளது.

தனிநபர் வருமான வரி விலக்கு வரம்பை எதிர்பார்த்த அளவுக்கு இல்லாவிட்டாலும்





ஓரளவுக்குக்கூட உயர்த்தியிருப்பது, மாதச் சம்பளம் வாங்குவோருக்கு ஒரு பரிசுதான் என்றாலும், இந்த மகிழ்ச்சி சீக்கிரமே விலைவாசி உயர்வு காரணமாக இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகும்! ரயில்வே பட்ஜெட்டின் சரக்குக் கட்டண உயர்வும், தண்டவதே அனுமதித்துள்ள டீசல், பெட்ரோல் விலை உயர்வுகளும்; டெலிஃபோன், தபால் கட்டண உயர்வுகளும் விலைவாசி உயர்வைத் துரிதப்படுத்தும். ஆக, காசிக்குப் போயும் கர்மம் தொலையவில்லை என்ற கதைதான்!

தனிநபர் சேமிப்புக்காகத் தரப்பட்டு வந்த ஊக்கங்களில் செய்யப்பட்டுள்ள மாறுதல்கள் நடுத்தர வர்க்கத்தினருக்கு உதவினாலும் நிறைய சம்பாதிப்பவர்தான் நிறைய சேமிக்க முடியும். எனவே அவரைத்தான் அதிகம் இதில் ஊக்குவிக்க வேண்டும் என்பது நினைவில் கொள்ளப்படவில்லை. வரி விகிதங்களும் அதிகம், சேமிப்பதிலும் பயனில்லை என்னும் போது, சம்பாதிப்பதில் காட்டப்படும் புத்திசாலித்தனம், வரி ஏய்ப்பிலும் செயல்படத் தொடங்கும்!

கார், ஃப்ரிஜ், வி. ஸி. ஆர்., என்று பல ரக ஆடம்பரப் பொருள்கள் மீதும் உடல் நலத்தைப் பாதிக்கும் சிகரெட் மீதும் வரிகளை உயர்த்தி வருவாய் தேடியிருக்கிறார் நிதி அமைச்சர். பாதுகாப்புச் செலவினம் உயர்ந்திருப்பதற்குச் சூழ்நிலையே காரணம் என்ற சமாதானம் யதார்த்தமானாலும் முடிவான வாதமாகாது. சூழ்நிலையை மாற்றி, அமைதி நிலவச் செய்து, ராணுவச் செலவைக் குறைக்க முயற்சி எடுக்க வேண்டிய கடமை அரசுக்கு உண்டு.

'பற்றாக்குறை' என்பதுதான் பட்ஜெட்டின் மிகப் பெரிய வில்லன். காகித நோட்டு அச்சாகவும், பணவீக்கமும் விலைவாசி உயர்வும் உருவாகவும் வழிவகுப்பது இதுதான். ராஜீவ் ஆட்சியில் சென்ற ஆண்டு பட்ஜெட் பற்றாக்குறையை விட, அசல் பற்றாக்குறை மிக அதிகமாக இருந்தது. இவ்வாண்டு பட்ஜெட் பற்றாக்குறையே சென்ற வருஷ பட்ஜெட்டை விடக் குறைவாக இருப்பதுடன், "இதனை அதிகரிக்க விடமாட்டோம்; சிக்கனத்தைக் கடைப்பிடிப்போம்" என்ற உறுதிமொழியும் அளித்திருக்கிறார் தண்டவதே. இந்த ஓர் அம்சத்தில் அவர் வெற்றி கண்டாலே போதும், சுபிட்சம் கலபமாகா விட்டாலும் மக்களின் துயரம் தொலைவிலேயே நிற்கும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



ஆராய்ச்சிக் கூடத்தில் அறுநூறு வைரங்கள்!

●● அறுநூறுக்கும் அதிகமான எண்ணிக்கையில், பல்வேறு வகையான வைரக் கற்களைச் சேர்த்து வைத்திருந்தார், சர். சி. வி. ராமன். அத்தனை வைரங்களையும், தம் விஞ்ஞான ஆராய்ச்சிக்காகவே அவர் பயன்படுத்தினார். அவற்றைத் தனித் தனியே பெட்டிகளில் போட்டு, அழகாய் வைத்திருப்பார். *1935* — இல் மைசூர் மகாராஜா அறுபத்து மூன்று வைரங்கள் பதித்த ஆபரணமொன்றை சி. வி. ராமனுக்குப் பரிசாய் அளித்தார். அதுவும் ராமனின் ஆய்வுக்கூடத்தையே சென்றடைந்தது!

●● *1929* — ஆம் ஆண்டு, நோபெல் பரிசுக்கு ராமனின் பெயர் சிபாரிசு செய்யப்பட்டாலும், அவ்வாண்டு அவருக்குப் பரிசு கிடைக்கவில்லை. *1930* — இல்தான் அப்பரிசு அவருக்கு வழங்கப்பட்டது. வழக்கமாக நோபெல் பரிசு டிசம்பர் மத்தியில் வழங்கப்படும். பரிசு பெற்றோர் விவரம் ஒரு மாதம் முன்புதான் வெளியிடப்படும். ஐரோப்பாவிலிருந்து, கப்பல் வழியே, அச்செய்தி இந்தியாவில் ராமனை வந்தடைந்து, அதன் பின் அவர் புறப்பட்டு ஸ்டாக்ஹோம் சென்று, பரிசைக் குறிப்பிட்ட தினத்தில் பெறுவது, போக்குவரத்து வசதியில்லாத அக்காலத்தில் சிரம சாத்தியமானது. ஆனால், அந்த வருடம், தமக்கு நோபெல் பரிசு நிச்சயம் என்று மிக உறுதியாக இருந்த ராமன், அதிகாரபூர்வமான தகவல் வந்தடையுமுன்பே மனைவியுடன் ஸ்டாக்ஹோம் புறப்பட்டு விட்டார்! அப்போது அவருக்கு வயது 42.

●● ராமனின் கார் டிரைவர் பார்த்தசாரதி, மிகவும் நம்பிக்கைக்குரியவர். அவர்தான் ராமனுக்கு டைம்கீப்பர்! ராமனிடம் நிறையக் கைக்கடிகாரங்கள் இருந்தாலும், ஒன்று கடிகாரத்தைக் கொண்டு வர மறந்து போய் விடுவார்; அல்லது, ஞாபகமாய்க் கட்டிக் கொண்டிருந்தாலும், அதற்குச் சாவி கொடுக்காததால் நின்று போயிருக்கும்! எனவே, பார்த்தசாரதியைத்தான் மணி கேட்டுத் தெரிந்து கொள்வது வழக்கம். பார்த்தசாரதியின் கைக்கடிகாரத்தில் நிமிட முள் இருக்காது. மணிகாட்டும் முள்தான் இருக்கும். அந்த முள்ளின் நிலையைப் பார்த்தே மிகச் சரியாய் மணியைச் சொல்லுவார் பார்த்தசாரதி!

●● ஒரு முறை சி. வி. ராமனுக்குக் கடுமையான இருமல். ஒரு மருந்தைச் சொல்லி, அதைச் சாப்பிட்டால் உடனடி நிவாரணம் கிடைக்கும் என்று நான் கூற, இருவருமாய் மருந்துக் கடைக்குப் போய் அதை வாங்கிக் கொண்டு, காரில் திரும்பிக் கொண்டிருந்தோம். மருந்து பாட்டிலின் மேல் அச்சிடப்பட்டதைப் படித்துக் கொண்டே வந்தார், ராமன். திடீரென "இந்த மருந்து எனக்கு வேண்டாம்! நான் சாப்பிட மாட்டேன்" என்று கூற, எனக்கு ஒன்றும் புரியவில்லை. ராமன் கூறிய காரணம்: "இதில் உள்ள ஆல்கஹால் அளவைப் பார்! எவ்வளவு அதிகம்! ஆகவே நான் இதைத் தொட மாட்டேன்!"

●● "ராமன் சினிமாவுக்கே போகாதவர். ஆனால் தமது ஆராய்ச்சி நிலையம் பற்றிய டாகுமெண்டரி திரைப்படம் பெங்களூர் அரங்கம் ஒன்றில் திரையிடப்பட்ட போது, பத்மநாபன் என்ற நண்பருடன் ராமனும் நானும் அப்படத்தைக் காணச் சென்றோம். ராமன் சினிமா பார்க்க வந்திருக்கிறார் என்று அறிந்த தியேட்டர் மானேஜர், மகிழ்ச்சியுடன் வந்து வரவேற்றார். டிக்கெட்டுக்கு அவசியம் பணம் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று பிடிவாதமாய்க் கூறி மூவருக்கும் டிக்கெட் வாங்கினார் ராமன். டாகுமெண்டரியை மிகவும் ரசித்தார் ராமன். அது முடிந்ததும், ராமனுக்குச் சினிமா பிடிக்காது என்று நினைத்து, நாங்கள் வெளியே போக எழுந்த போது, "சினிமாவுக்கும் சேர்த்துத்தான் டிக்கெட் வாங்கியிருக்கிறோம்," என்று சொல்லி, உட்கார வைத்துவிட்டார். பத்து நிமிடங்கள் படம் ஓடியிருக்கும். ராமனுக்குப் பொறுமை போய்விட்டது! "என்ன நான்சென்ஸ் படம்!" என்று கூறி எழுந்து விட்டார். நாங்களும் அவரைப் பின் தொடர்ந்தோம்.

ஏ. ஜெயராமன் எழுதிய C.V. Raman— A Memoir என்ற புத்தகத்திலிருந்து. (Affiliated Eastwest Press, Madras-10.)

தொகுப்பு: எஸ். சந்திரமௌலி

“ஒவ்வொரு ஸ்பூனிலும் ஒப்பற்ற சக்தி”



உங்களது கடுமையான உழைப்புக்கும், மூளையின் வேலைக்கும் செறிவான ஊட்டமும் வலிமையுமே அடிப்படை. வெறும் நெல்லிக்காய் லேகியங்களும், சாதாரண டானிக்குகளும் இவற்றை நிறைவாகத் தர முடியாது.

ஒப்பற்ற சக்தியைத் தினந்தோறும் உங்களுக்கு அளிக்கக் கூடிய அரிய மூலிகை டானிக் கிரௌன் காய கல்பம். இது பல்லாண்டு ஆராய்ச்சிக்குப் பின், சித்த வைத்திய முறையில் தயாரிக்கப்படும் சிறந்த மூலிகை டானிக்.

கிரௌன் காயகல்பம் ரெகுலர்:
கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்ப மூலிகைகளான வல்லாரை, தாதுவளை, கரிசலாங்கண்ணி, பொற்சீந்தில், கடுக்காய், தான்றிக்காய், அஸ்வகந்தா, நெல்லிக்கனி ஆகியவற்றுடன் சுத்தமான தேன் மற்றும் முறையாகப் பாடம் செய்யப்பட்ட செந்தூரம், துத்தநாக பஸ்பங்களும் சேர்த்து இயற்கை முறையில் விசேஷமாகத் தயாரிக்கப்படுகிறது.

இது இரத்தத்தைச் சுத்தமாக்கி, உணவு எளிதில் ஜீரணம் ஆகவும், ஊட்டச் சத்துக்கள் இரத்தத்தில் சேரவும் உதவுகிறது. குடலைச் சுத்தம் செய்து வாயுக்கோளாறுகளை நிவர்த்தி செய்கிறது.

பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் நிறைய சக்தியும் ஊட்டமும் அளிக்க இரும்புச்சத்து நிறைந்தது.

கிரௌன் காயகல்பம் ஸ்பெஷல்:
கல்ப மூலிகைகள், தேன் ஆகியவற்றுடன் விசேஷ முறையில் பாடம் செய்யப்பட்ட தங்க பஸ்பம், வெள்ளி பஸ்பம், செந்தூரம், துத்த நாகம் உட்பட நவலோக பஸ்பங்கள் யாவும் சேர்க்கப்பட்டுள்ளன.

இதில் பல இயற்கை வைட்டமின்களும், தாது உப்புகளும் நிறைந்திருப்பதால் அதிகப்படியான வலிமையும் சுறுசுறுப்பும் எப்போதும் உங்களிடம் நிறைந்திருக்கும்.

ரெகுலர்	ஸ்பெஷல்
இரும்புச்சத்து நிறைந்தது	தங்க பஸ்பம் அடங்கியது
160 கி: ரூ. 18	150 கி: ரூ. 35
500 கி: ரூ. 54	500 கி: ரூ. 105
(வரிகள் உட்பட)	(வரிகள் உட்பட)



CROWN

கிரௌன் காயகல்பம்

ஓயாமல் உழைத்திட ஒப்பற்ற சக்தி.

தயாரிப்பாளர்:
கிரௌன் ஹெர்பல் ப்ராடக்ட்ஸ், சென்னை-2.

Insight 739

பம்பாய் விற்பனையாளர்: லக்ஷ்மி ஸ்டோர்ஸ், தாராவி மெயின் ரோடு, தாராவி, பம்பாய் — 17.
பெங்களூர் விற்பனையாளர்: ஜெயின் பிரதர்ஸ், 146, O. K. ரோடு, கும்பார்பேட், பெங்களூர் — 2.

சிறுசேமிப்புத்துறை




இலவச பரிசுக்கூப்பன் திட்டம்

ரூ. 1000/- முதலீடு செய்து ஒரு காண்டசா கார் பரிசு பெறுங்கள்

சிறுசேமிப்புத் திட்டங்களில் செலுத்தும் ஒவ்வொரு ஆயிரம் ரூபாய் முதலீட்டிற்கும் ஒரு பரிசு கூப்பன் இலவசமாகப் பெற்றிடலாம். எல்லா தனி நபர்களும் முதலீடு செய்யலாம்.

தேசிய சேமிப்பு பத்திரம் 8வது வெளியீடு, தேசிய சேமிப்பு திட்டக் கணக்கில் ரூ. 1000/- அதற்கு மேலும் முதலீடு செய்து 1% ஊக்கத் தொகை பெறுவீர். இச்சலுகை 31.3.90 வரை முதலீடு செய்யும் முதலீட்டிற்கு மட்டுமே வழங்கப்படும்.

வரிவிலக்கு	உங்கள் முதலீடு
வருமான வரிச்சட்டம் 80CCA பிரிவின் கீழ் ரூ. 10,000/- வரை வரிவிலக்கு பெற.	தேசிய சேமிப்புத் திட்டக் கணக்கு-87ல் ரூ. 10,000/- முதலீடு செய்யுங்கள்.
வருமான வரிச்சட்டம் 80CCA பிரிவின் கீழ் ரூ. 20,000/- வரை வரிவிலக்கு பெற.	தேசிய சேமிப்புத் திட்டக் கணக்கு-87ல் ரூ. 20,000/- முதலீடு செய்யுங்கள்.
வருமான வரிச்சட்டம் 80CCA பிரிவின் கீழ் ரூ. 30,000/- வரை வரிவிலக்கு பெற.	தேசிய சேமிப்புத் திட்டக் கணக்கு-87ல் ரூ. 30,000/- முதலீடு செய்யுங்கள்
வருமான வரிச்சட்டம் 80CCA மற்றும் 80C பிரிவின் கீழ் ரூ. 40,000/- வரை வரிவிலக்கு பெற.	தேசிய சேமிப்புத் திட்டக் கணக்கு-87ல் ரூ. 30,000/- தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீடு/15 ஆண்டு PPFல் ரூ. 14,500/- வரை முதலீடு செய்யுங்கள்.
வருமான வரிச்சட்டம் 80CCA மற்றும் 80C பிரிவின் கீழ் அதிகபட்சமாக ரூ. 50,200/- வரை வருமான வரிவிலக்கு பெற	தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு-87ல் ரூ. 30,000/- மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீடு/15 ஆண்டு PPFல் ரூ. 40,000/- முதலீடு செய்யுங்கள்.



பரிசுப் பொருட்களின் விவரம்:

1 சூப்பர் பம்பர் பரிசு	- காண்டஸா கார்
1 முதல் பரிசு	- மாருதி கார்
5 இரண்டாவது பரிசுகள்	- ஹீரோ ஹோண்டா மோட்டார் சைக்கிள்
10 வது மூன்றாவது பரிசுகள்	- கலர் டி.வி.
20 நான்காவது பரிசுகள்	- 165 லிட்டர் ரெப்ரிஜிரேட்டர்
100 ஐந்தாவது பரிசுகள்	- 7½ லிட்டர் பிரஷர் குக்கர்
500 ஆறுதல் பரிசுகள்	- குவார்ட்ஸ் சுவர் கடிகாரம்

மேலும் விபரங்களுக்கு:

அனைத்து அஞ்சலகங்களில் சேமிப்பு பத்திரங்கள் பெறலாம்.

மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திலுள்ள மாவட்ட சேமிப்பு அலுவலர்கள்

இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 846209/840223.

நைட் ஷிப்டு முடிந்து, சைக்கிளை ஸ்டாண்டிலிருந்து எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கி அழுத்தினேன். ஒரே அசதி; வீட்டில் போய் நன்றாகக் குளித்துவிட்டு, ஒரு தூக்கம் போட வேண்டும்.

இந்த மில்லிலே எனக்கு மெகானிக் வேலை கிடைக்கக் காரணமாக இருந்த ஏ.பி.எஸ். மேல்நிலை மற்றும் பொறியியல் பள்ளி தூரத்தில் தெரிந்தது. ஐந்து வயதில் உள்ளே அடியெடுத்து வைக்கும் சிறுவனை முழு மனிதனாக்கி, தொழிற்கல்வியும் கொடுத்து வெளியே அனுப்பும் திருக்கோயில் அது. பள்ளிக்கு அருகாமையிலேயே என் வீடு!

பள்ளியைச் சமீபித்ததும் 'கும்' என்ற துர்நாற்றம் என் மூக்கைத் துளைத்தது. பள்ளி மெயின் 'கேட்' அருகே நகரசபையினரால் வைக்கப்பட்டிருந்த குப்பைத் தொட்டிதான் அந்தச் சேவையைச் செய்து கொண்டிருந்தது. பாவம்! அதுதான் என்ன செய்யும்? தன் வயிறு கொள்ளும் மட்டும் குப்பைகளைத் தின்றுவிட்டு மீதியைத் தன்னைச் சுற்றி வீதியை அடைத்து விரித்திருந்தது.

மாணவச் செல்வங்கள் பயிலும் பள்ளியின் முன்னால் நிலவும் இந்தச் சுகாதாரச் சீர்கேடு குறித்து எத்தனை தடவை நகர சபை சுகாதார அதிகாரிக்கு மனு அனுப்பியாகிவிட்டது! ஒரு பயனுமில்லை. நான் வேலை பார்க்கும் மில்லில் நற்பணி மன்றச் செயலர் என்ற முறையிலும், பத்து தினங்களுக்கு முன்னால், இந்தப் பகுதி சுகாதாரக் கேடு குறித்து மாநில சுகாதார அமைச்சருக்கு மனு அனுப்பினேன். அதற்கும் எவ்விதப் பயனும் இல்லை. பள்ளியின் உள்ளே ஒழுக்கம், சுத்தம், சுற்றுப்புறச் சூழல் என்று ஆசிரியர் பாடம் கற்பிக்கிறார். ஆனால் பள்ளியின் வெளியில் அசுத்தம்... அசுத்தம்... அசுத்தம்!

சைக்கிளைத் தூக்கி வீட்டின் முன் வராந்தாவில் வைத்துவிட்டுத் திரும்பிய என்னை, "பேரப்புள்ளே! பேரப்புள்ளே" என்ற குரல் உசுப்பியது. திரும்பி வாசலைப் பார்த்தேன். மீனாட்சிப்பாட்டி நின்று கொண்டிருந்தாள்.

"என்ன பாட்டி! என்ன வேணும்? உள்ளே வா."

"மில்லிலேயிருந்து இப்பத்தான் வந்தியரப்பா!" என்று பீடிகை போட்டு ஆரம்பித்தாள் பாட்டி. "காலையிலே எட்டு மணிக்கே ரேசன் கடையிலே போய்க் கியூவிலே நின்னேன்! இன்னிக்கு யாரோ ஒரு மவராசனுக்குப் பொறந்த நாளாம். இந்த ரேசன் கார்டுக்கு அஞ்சு கிலோ அரிசி சும்மா கொடுத்தாங்க. காசே வாங்கிக்கல..." என்றாள்.

"சரி, பாட்டி... இதைக் கொண்டு ஒரு வாரமாவது நீயும் உன் பேத்தியும் சந்தோஷமாப் பொங்கிச் சாப்பிடலாமில்லே!"

பாட்டி சற்று நிதானமாக,

"நாலு நாளா அரிசி வாங்கக் காசு இல்லாததாலே முறுக்கு வியாபாரம் எதுவும் பண்ணலே; இன்னிக்கு இந்த அரிசி கிடைச்சதாலே இதைக் கொண்டு வழக்கம் போல் முறுக்கு பண்ணி வித்தா நாலு காசு தேறும். அதுதான் புள்ளே! முறுக்கு சுட, எண்ணெய் வாங்கக் கையிலே காசு இல்லே. ஒரு இருபத்தஞ்சு ரூபா கொடுத்தேன்னா வியாபாரம் பண்ணி நாளைக்கே கொடுத்திடறேன். இல்லேன்னு மட்டும் சொல்லிடாதேப்பா" என்று கூறி என் முகத்தை ஏக்கத்துடன் பார்த்தாள்.

பாட்டியைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. மில்லில் போனஸ் கொடுத்த நானூறு ரூபாய் பேண்ட் பையில் இருந்தது. சற்றும் யோசிக்காமல் அதிலிருந்து ஐந்து ஐந்து ரூபாய்த் தாள்களை அவளிடம் கொடுத்தேன்.

"நல்லா இரு புள்ளே!" என்று வாழ்த்தி, நான் கொடுத்த ரூபாயை வாங்கிக் கண்

பிள்ளையார் பிடிக்கப் போய்...

நல் - ஆறுமுகம்

ணில் ஒத்திக் கொண்டு, முந்தானை முடிச் சில் வைத்துக் கொண்டாள்.

மாலை மணி மூன்று இருக்கும்.

''ராமலிங்கம் வீடு இதுதானே?'' என்ற அதட்டலான குரல் கேட்டு விழித்து வெளி யில் வந்தேன்.

''சார் சுகாதார அதிகாரி வந்திருக்காரு. ஸ்கூல் முன்னாலே நிற்கிறாரு. உங்களைக் கூப்பிடறாரு.''

அவசர அவசரமாகச் சட்டையை எடுத் துப் போட்டுக் கொண்டு அவர் பின்னால் சென்றேன்.''

பள்ளி முன்னால் இருந்த குப்பைத் தொட்டியின் முன் சுகாதாரத் துறை வேன் நின்று கொண்டிருந்தது. ''அதில் சுத்தம் சோறு போடும்'' என்ற வாசகம் பெரிதாக எழுதப்பட்டிருந்தது. வேன் . அருகில் சுகா தார அதிகாரி, சானிட்டரி இன்ஸ்பெக்டர், அவர் கீழ் உள்ள இரதகஜதுரகபதாதிகள் என்று ஒரு கூட்டமே கூடி நின்றது.

''வணக்கம் சார்.''

''நீங்கதான் இராமலிங்கமா? என்ன! இங்கே குப்பைத் தொட்டி இருக்கிறதாலே பள்ளி மாணவர்கள் நோய்வாய்ப்படறாங்க. சாவுறாங்க அப்படி, இப்படின்னு மந்தி ரிக்குக் கதை எழுதி அனுப்பியிருக்கீங்க போலிருக்கே!''

''கதை இல்லே சார்! நீங்களே இப்ப நேரிலே பார்க்கிறீங்களே, எத்தனை கொசுக்கள் மொய்த்துக் கொண்டு... இங்கே என்ன துர்நாற்றம் பாருங்க. இதெல்லாம் பல தடவை நகராட்சிக்கு எழுதியும் எந்த நடவடிக்கையும் எடுக்கலே...''

''அதனாலே மந்திரிக்கு எழுதினீங் களோ? மந்திரிக்கு எழுதினா மந்திரி வந்து தெரு கூட்டுவாரா? அவங்க எல்லாம் வரு ஷத்துக்கு ஒரு முறை தெரு கூட்டறதா பத்திரி கைக்குப் போஸ்தான் கொடுப்பாங்க... இதைப் பாருங்க, நீங்க மந்திரிக்கு எழுதின பெட்டிஷன். எங்கெல்லாமோ சுத்தி இப்ப என் கையிலேதான் வந்திருக்கு'' என்று கோபத்தோடு கர்ஜித்தார் சுகாதார அதி காரி.

''சாரு, 'தண்ணீர் தண்ணீர்' சினிமா பார்க்கலே, போலிருக்கு...'' பக்கத்திலே நின்ற சானிட்டரி இன்ஸ்பெக்டர் என்னைப் பார்த்து நையாண்டி செய்தார்.

''சரி, சரி. இப்ப நாங்களென்னதான் செய்ய ணும்னு எதிர்பார்க்கிறீங்க?''



''சார்! இந்தக் குப்பையையெல்லாம் தினசரி. லாரி மூலமா அப்புறப்படுத்தினாலே போதும் சார்! வாரத்துக்கு ஒரு முறையோ. பத்து நாளுக்கு ஒரு முறையோ தான் குப்பையை எடுக்கிறாங்க. அதனால கொசு உற்பத்தியாகிப் பெரிய பெரிய நோயெல்லாம் உண்டாகி...''

''அதெல்லாம் நடக்காதுப்பா! நகர சபையிலே இருக்கிறதே மொத்தம் இரண்டே லாரி தான். இந்த ஏரியா எல்லாம் இது கவர் பண்ணணும். இதுல டிரைவர் மெடிக்கல் லீவிலே போவார். டீசலுக்கு அலாட்மெண்ட் இல்லாம இருக்கும்; லாரி ரிப்பேருக்கு. எஃப். சிக்குப் போகும் குப்பையெல்லாம் அன்னன்னிக்கு உடனுக்குடன் எடுக்க முடியாது... ஏம்பா, ஊரு உலகம் எல்லாம் சுத்தமா இருந்திட முடியுமா? நீ முதல்ல உன் வீட்டைச் சுத்தமா வச்சுக்கப் பாரப்பா'' என்று எனக்கு அறிவுரை கூறத் தொடங்கிய சுகாதார அதிகாரி, சானிட்டரி இன்ஸ்பெக்டரைப் பார்த்து, ''ஸ்பாட் இன்ஸ்பெக்டட்! சுத்தமாகவே உள்ளது. புகார் உண்மைக்குப் புறம்பானது'' என்று ஒரு ரிப்போர்ட் எழுதி நாளை சர்க்காருக்கு அனுப்பிடலாம்'' என்று கூறினார். நான்



விக்கித்து நின்றேன்.

இதற்குள், சுகாதார அதிகாரி தம்முடன் வந்திருந்த சானிட்டரி இன்ஸ்பெக்டரைப் பார்த்துக் காதில் ஏதோ கிசுகிசுத்துக் கொண்டிருந்தார். அவர் அதனைப் புரிந்து கொண்டவர் போல், ''இந்தப் பக்கம் பெரிசா ஒண்ணும் கிடைக்காது சார்; ஆனா அந்தச் சந்திலே ஒரு கிழவி முறுக்கு வியாபாரம் பண்றா! ரொம்ப டேஸ்டா இருக்கும்...'' என்றார்

''சரி, அப்போ அங்கே போவோம்!''

மீனாட்சிப் பாட்டியைத்தான் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று புரிந்து கொண்ட எனக்குத் 'திக்'கென்றது. நானும் அவர்களைப் பின்தொடர்ந்தேன்.

''**பா**ட்டி! ஹெல்த் ஆபீசர் வந்திருக்கார்.''

''யாரப்பா அது! என்ன வேணும் இன்னிக்குப் போட்ட முறுக்கு! எத்தனை வேணும்?''

''முறுக்கு வாங்க வரலை பாட்டி! நீ போடற முறுக்கு சுகாதார முறைப்படி சுத்தமாத் தயாரிக்கப்பட்டிருக்கான்னு 'செக்' பண்ண வந்திருக்காங்க.''

''என்னப்பா சொல்றீங்க?''

''ஆமா பாட்டி! நீ செய்யற முறுக்கை இந்தப் பள்ளிக்கூடத்திலே படிக்கிற புள்ளைங்க வாங்கிச் சாப்பிடறதாலே அதுகளுக்கு நோவு வர்றதாப் புகார் வந்திருக்கு! அதனாலே உன் முறுக்கை டெஸ்ட் பண்ண எடுத்துக்கிட்டுப் போறோம்.''

சுகாதார அதிகாரி கூட வந்திருந்த பட்டாளம் (சிப்பந்திகள்) உடனே பாட்டியின் வீட்டுக்குள் நுழைந்து பாட்டி செய்து வைத்திருந்த முறுக்குகளை வேனில் ஏற்றினர்.

''சார், இவ்வளவு போதுமா?''

''நாளை இன்ஸ்பெக்ஷனுக்கு மண்டல அலுவலர் வருகிறார். அவர் சம்சாரத்துக்கு முறுக்குன்னா உயிர் என்று கேள்வி...''

''சரி, அப்ப உள்ளே இருக்கிற அந்தக் கூடையையும் எடுத்து வேனில் வை.''

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த நான் இடைமறித்து ''சார் டெஸ்ட் பண்ணுவதா இருந்தால் சேம்பிளுக்கு ஒன்றிரண்டு முறுக்குகள் எடுத்தால் போதுமே'' என்றேன். ஈனஸ்வரத்தில் ஒலித்த என் குரல் அந்த அதிகார வர்க்கத்தின் செவிகளில் விழவில்லை.

'சுத்தம் சோறு போடும்' என்ற போர்டைத் தாங்கிய அந்த வேன், மீனாட்சிப் பாட்டியின் வியர்வையில் உருவான உன்னதமான முறுக்குகளை ஏற்றிக் கொண்டு பறந்தது.

''பாவி மகராசனுக, அரிசியைச் சும்மா கொடுத்துட்டு முறுக்காத் தூக்கிக்கிட்டுப் போயிட்டானுகளே!''. என்று மீனாட்சிப் பாட்டி புலம்பினாள்.

படம் பார்த்துக் கதை கேட்ட பரமாச்சாரியார்!

திருமணம் முடிந்து, ராஞ்சி அருகே கோமியா என்ற இடத்திற்குக் கணவருடன் குடித்தனம் போன போது பெற்றோரைப் போலவே கணவரும் அளித்த ஊக்கத்தில், பல ஓவியப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெற்ற போது, தன்னம்பிக்கை பிறந்தது யுவதி ஜெயாவுக்கு. ஓவிய வகுப்புகள் நடத்திப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்த போதோ தன்னம்பிக்கை வலுப்பட்டது.

இரு குழந்தைகளுக்குத் தாயாகி சென்னைக்கு மாற்றல் பெற்ற கணவருடன் தெற்கே திரும்பிய போது, காஞ்சி பரமாச்சாரியாரை வணங்கி ஆசி பெறும் எண்ணம் ஏற்பட்டது ஜெயாவுக்கு. தமது கைப்பட உருவாக்கிய இரண்டு 'பாடிக்' வேலைப்பாடு செய்த துணிகளைப் பரமாச்சாரியாருக்குக் காணிக்கையாக வழங்கிய போது அவர் அவற்றை உற்றுப் பார்த்தார். இரு பனை மரங்களுக்கிடையே கிருஷ்ணன் உரலை உருட்டி இழுத்துச் செல்லும் படம் ஒரு துணியில் பொறிக்கப்பட்டிருந்தது. "இந்தக் கதை தெரியுமா உனக்கு?" என்று கேட்டார் பரமாச்சாரியார். அந்தக் கேள்வியால் ஒரு ஞானோதயம் பிறந்தது ஜெயாவுக்கு!

கிருஷ்ணர் படத்தின் பின்னணியில் இருந்த கதை தெரியாது என்று ஜெயா ஒப்புக் கொள்ள, பரமாச்சாரியார் தாமே அக் கதையை அவருக்குக் கூறினார். புராணக் கதைகளைப் படித்துத் தெரிந்து கொண்டு படம் போடும்படி அருளுரை கூறி அனுப்பினார். குறிப்பாக **Gordon Woodrofe** எழுதிய **Garland of Letters** என்ற நூலைக் கட்டாயம் படிக்கும்படி சொல்லியனுப்பினார்.

பெரியவர் தம்மிடம் காட்டிய அன்பான ஈடுபாட்டில் மெய்சிலிர்த்த ஜெயா சந்திரசேகர், தெய்விகப் படங்களையே இனி வரைவது, அவற்றின் மூலம் கிட்டும் வருமானத்தை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்துவது என்ற உறுதியுடன் பரமாச்சாரியாரை வணங்கி, விடைபெற்றார்.

சென்னை திரும்பி தஞ்சாவூர் பாணி ஓவியங்கள் வரைவதில் பயிற்சி எடுத்துக் கொண்டு, அவற்றை மட்டுமே வரையலானார் ஜெயா. பதினாறு அபூர்வ விநாயகர் வடிவங்களைக் கொண்ட இவரது பெரிய ஓவியம் ஒன்று கர்நாடக அரசின் சித்ரகலா பரிஷத் விருதைப் பெற்றது. பல்வேறு தோற்றங்களில் பராசக்தியைச் சித்திரிக்கும் மற்றொரு தஞ்சாவூர் ஓவியம் **All India Fine Arts and Crafts Society** நடத்திய அனைத்திந்திய பாரம்பரியக் கலைகள் கண்காட்சியில் இடம் பெற்று, தேசிய விருதைப் பெற்றுத் தந்தது.

"காஞ்சிப் பெரியவர்தான் என் கண்களைத் திறந்து விட்டார்" என்று கூறும் ஜெயாவின் ஓவியங்கள் ஆரம்பத்தில் நூறு ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருந்தன. "அப்போது அவற்றுக்குக் கூடுதல் விலை கேட்கலாம் என்று எனக்குத் தோன்றியதே இல்லை. இப்போதோ, நான் ஒரு ஓவியத்தை வரைந்து முடிப்பதற்குள்ளாகவே அதற்குப் பணம் கொடுத்துப் பதிவு செய்து கொள்ளக் காத்திருக்கிறார்கள். சமீபத்தில் ஒரு ஓவியம் இருபதாயிரம் ரூபாய்க்கு விற்ற போது, காஞ்சி பெரியவர் 'உனக்குச் சுமாரா வருமானம் வருகிறதா?' என்று பரிவோடு கேட்டதுதான் ஞாபகம் வந்தது. அந்தக் கேள்வி மூலமே அவர் அருளாசி எனக்குக் கிடைத்திருக்கிறது" என்கிறார் ஜெயா.

ஓவியங்கள் விற்பனையில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தங்கத் திருமாங்கல்யங்கள் செய்வித்து காஞ்சி மடத்தின் மூலம் எளியவர் வீட்டுத் திருமணங்களுக்கு உதவி வருகிறார் ஜெயா.

"ஒரு சமயம் என் மனச் சாந்திக்காக ஒரு திருமாங்கல்யம் செய்து தருவதாக வேண்டிக் கொண்டேன். அதை நிறைவேற்ற சிரமப்பட்டுத்தான் போனேன். ஆனால் இப்போதோ 108 திருமாங்கல்யங்கள் செய்து தர வேண்டும் என்ற எனது இலக்கு, காஞ்சி முனிவர் ஆசியால் சீக்கிரமே நிறைவேறி விடும் போலிருக்கிறது." என்று மன நிறைவோடு கூறும் ஜெயா, தெய்வப் படங்களை வரையும் போது சுலோகங்கள் கூறியபடியே வரைகிறார்.

சந்திப்பு: எஸ். ஆர்.

வண்ணப்படம்: யோகா





பெண்கள் வீட்டின் கண்கள்

கல்யாணத்துக்காக அமைதியாகக் காத்திருக்கும் முதல் பெண்.

''காதலன் கட்டும் கயிறு என் கழுத்தில் தொங்க வேண்டும். அல்லது வேறொரு கயிற்றில் என் கழுத்து தொங்க வேண்டும்'' என்று முரண்டு பிடிக்கும் இரண்டாவது பெண்.

''அரண்மனை போன்ற வீடு. ஆடம்பரமான வெளிநாட்டுக் கார். கோடீசுவரனான கணவன்'' என்று கற்பனையில் உலாவரும் மூன்றாவது மகள்.

அக்காக்களின் வாழ்க்கையில் ஏற்பட்டு விட்ட சிக்கல்கள் தீரும் வரையில் தன் கல்யாணம் நடக்க முடியாது என்று கூறிக் காதலனைக் காத்திருக்க வேண்டிக் கொள்ளும் நாலாவது பெண்.

ஐந்து பெண்கள் என்கிற எண்ணிக்கைக்காகச் சேர்க்கப்பட்டுள்ள கடைக் குட்டிப் பொடிசு.

இவர்களை வைத்துக் கொண்டு பெண்களின் பிரச்னைகளைக் கூறுபோட முயன்றிருக்கிறார் கதாசிரியர் — இயக்குனர் கஜேந்திரன். இடைச்செருகலாகக் குடிசை வாழ் மக்களுக்கு நிலப்பட்டா, அந்த நிலத்தைக் கபளீகரம் செய்ய நினைக்கும் — மேலிடத்தில் செல்வாக்குள்ள பெரிய மனிதர், குடிசை நிலத்தை வலுக்கட்டாயமாக அபகரிக்கும் முயற்சிகள், தீ வைப்பு, டுஷ்யூம், டுஷ்யூம், அங்கங்கே சுவர்களில் மாட்டப்பட்டிருக்கும் இந்திரா காந்தி, கலைஞர் புகைப்படங்கள்.

'மனைவியின் வருமானத்தில் மசமசவென்று வாழ்க்கை நடத்துகிறார்' என்கிற குற்றச்சாட்டு அடிக்கடி எழுந்து அவர் நெஞ்சைக் குத்திக் கிளறி விட, தன் பெண்களுக்கு மனைவியின் தயவு இல்லாமல் அவர்கள் விருப்பப்படியே கல்யாணம் செய்து வைப்பதாக எஸ். எஸ். சந்திரன் விடும் சவால் கதை விரிப்புக்கு அஸ்திவாரம் என்றால் —

அதற்காக அவர் மேற்கொண்ட நாடகங்களே அவருக்கெதிராகப் போய், சொல்லி வைத்தாற்போல மூன்று பெண்களும் பிறந்த வீடு திரும்பி விடுவது முக்கிய திருப்பம்.

தன்னைத் திரும்பவும் உசுப்பி விட்டுக் கொண்டு அவர்களை மீண்டும் கணவன்மார்களிடம் சேர்த்து விட அவர் மேற்கொள்ளும் முயற்சிகள் சென்னை சபாக்களில் நடைபெறும் நாடகங்களை நினைவுபடுத்துகின்றன.

மத்தியில் அமைந்துள்ள தேசிய முன்னணி அரசைப் போலவே இந்தப் படத்துக்கும் பக்கபலம் இரண்டு. ஒன்று எஸ். எஸ். சந்திரனின் நடிப்பு என்றால், மற்றது வாலியின் வசனங்கள். நறுக்குத் தெறித்தாற் போலத் துல்லியமாக வந்து விழுந்துள்ள வார்த்தைகள். சமயங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக விரசம் போர்த்திய விஷமத்தனமான சொற்கள் இடம் பெற்றாலும், அந்தச் சந்தர்ப்பங்கள் தோற்றுவிக்கும் சிரிப்பலைகளில் அவை அடிபட்டுப் போய் விடுகின்றன.

சோகத்தில் ஆழ்ந்து விட்ட பெண்கள் அனைவரும் சாப்பிட மறுக்க, அதே நேரத்தில் மூத்தவளின் குழந்தை பசியால் வீறிட, சூழ்நிலையின் கனத்தால் அழுத்தப்படும் கே. ஆர். விஜயா அக் குழந்தையை எடுத்துத் தோளில் சாத்திக் கொண்டு துயரத்தோடு பாட, குடும்பத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஜன்னல் அருகிலும் கதவு அருகிலும் வந்து நின்று அவரையே வேதனையோடு பார்ப்பது ஏற்கெனவே நமக்குப் பழக்கப்பட்டுப் போய் விட்ட இன்னொரு கதாசிரியர் — இயக்குனரின் பாணி.

பொதுவாகப் படம் முழுதுமே அவருடைய நிழல் படர்ந்திருப்பதை உணர முடிகிறது.

அவருக்கு இவர் சரியான வாரிசு.

— சி. ஆர். கே.

மழை பெய்ய அல்லது





பெருவெள்ளத்தைத் தடுக்க

மகரிஷி ஆத்ரேயர் கூறும் வழி

ஒரு தேசத்திற்கோ அலலது கிராமத்திற்கோ தலைவராய் உள்ளவர் தர்ம நெறியில் ஜனங்களை நடத்தினால் அவனை அனுசரித்து தேசத்தினர், நகரத்தினர், அல்லது கிராமத்தினர் அந்த தர்மத்தையே பெருக்கி வருவார்கள். அந்த தர்மம் அதர்மத்தை மறைத்துவிடும். அதர்மம் மறைந்துவிடவே பிராணிகள் தேவர்களால் காப்பாற்றப்படுவார்கள். அப்பொழுது ருதுக்கள் முதலிய காலங்கள் மாறாமல் இருக்கும். அதனால் மழை சரியாக பெய்யும். காலந்தவறாமல், இடந் தவறாமல் அளவு தவறாமல் பெய்யும்.

பருவக்காற்று சரியாக வீசும். ஆகையால் பூமி கெடாது. செடி கொடிகள் தங்கள் குணங்களில் மாறுதல் அடையாது. அப்பொழுது தேசமே நல்ல காற்று முதலியவற்றாலும் சாப்பிடும் பதார்த்தங்கள் தோஷம் இல்லாமல் செழிப்பு அடையலாம்.

ஆகையால் தேவர்களைத் திரும்பவும் நமக்கு அனுகூலமாக இருக்கும்படி நல்ல காரியங்களை செய்து வருவதே நாம் க்ஷேமத்தை அடைய சரியான வழியாகும். உண்மை பேசுதல், பிராணிகளிடத்து தயைத் தானம், தேவர்களின் பூஜை, தர்ம சாஸ்த்திரங்களை படித்து அதன்படி நடப்பது பெரியோர்களோடு இணங்குதல், முதலிய நல்ல காரியங்களே சர்வேஸ்வரனுடைய அனுக்கிரகம் பெற வழியாகும்.

ஆகையால் கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ் வாங்கி நல்லோருக்கு விநியோகம் செய்யுங்கள்.

திருமண வைபவங்களுக்கு: சீர் முறுக்கு, சீர் அதிரசம், முள்ளு தேன்குழல், பருப்பு தேங்காய் வகைகள், திரட்டுப்பால், அப்பம் முதலியவை செய்து தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24 2வது மெயின் ரோடு
காந்தி நகர் அடையாறு
சென்னை-20 போன்: 412557

வேலிகள் தகர்கின்றன

உமாகல்யாணி

வாயிற்படியில் நின்று கொண்டு பள்ளி குழந்தைகள் வீடு திரும்புவதை ரசித்துக் கொண்டிருந்த மீனாட்சி, 'சடக்'கென்று வீட்டிற்குள் போய் விட்டாள். இன்னும் சிறிது நேரம் வேடிக்கை பார்க்கலாம் என்கிற ஆசைதான். ஆனால், இனிமேல் அது முடியாது.

''என்னடி இது கண்றாவியாய் இருக்கு! குடும்பப் பெண்ணாய்த் தெரியலையே. என்னவோ சதுராடப் போறவள் போல் சிவிச் சிங்காரிச்சு வாசப்படியிலே வந்து நின்னா தெருவிலே போகிற வருகிற கழுதைங்க எல்லாம் முறைச்சுத்தான் பார்க்கும். போடி உள்ளே'' என்று விசுவநாதன் கத்துவார்.

கல்யாணம் ஆன புதிதில் இப்படி வந்து நின்ற ஒரு மாலைப் பொழுதில் இதே வசனத்தைத்தான் அமிலம் தோய்த்து மீனாட்சியின் முகத்தில் வீசியிருக்கிறார். அதனால் அப்போது கருகிப் போன முகம், இதுவரையிலும் தன்னிலைக்கு வந்திருக்கவில்லை.

இன்னமும் நடுக்கம்தான்!

கல்யாண வயதில் மகள் நிற்கிறாள் என்றபோதும் அவரிடம் பொறுமை வந்து சேர்ந்திருக்கவில்லை. சிடுசிடுப்பையும் கடுகடுப்பையும் உடன்பிறப்புக்களாகவே வைத்துக் கொண்டிருந்தார்.

இதன் நிமித்தமாக மீனாட்சியின் சின்னச் சின்ன ஆசைகளும் விருப்பங்களும் கூட முளைத்தபோதே அமுக்கப் பெற்று விட்டன. ஓர் இயந்திரமாகவே ஆகி விட்டாள்.

அவளின் ஒரே பொழுது போக்கு, விசுவநாதன் ஆபீஸ் போயிருக்கும் வேளையில், எப்போதாவது இப்படி வந்து நின்று வீதியின் இயக்கத்தை வேடிக்கை பார்ப்பதுதான்.

இன்றும் அப்படித்தான். கல்லூரி விட்டு வரப் போகும் மகள் அமுதாவுக்காக உப்புமா பண்ணி வைத்து விட்டு, மகளை எதிர்நோக்கிய படியே வாயிற்படியில் நின்று கொண்டிருந்தாள். எதிர்பாராத விதமாய் விசுவநாதன் சீக்கிரமே வந்து அவளின் அற்ப மகிழ்வையும் கெடுத்து விட்டார்.



'இன்று இத்தனை சீக்கிரமாய் அலுவலகம் விட்டுத் திரும்பியிருக்கிறாரே ஏன்?'

அவரிடம் கேட்டு விட முடியாது!

அவராக முன்வந்து சொன்னால் கேட்டுக் கொள்ளலாம்.

வருகிறபோதே, 'தடக், படக்' என்கிற காலணி ஓசையுடன் வரும் விசுவநாதனிடம் இன்று ஒரு மாறுதல் தெரிவதை மீனாட்சி உணர்ந்தாள்.

காலணிகள் நயமோடு தடம் பதிக்கின்றன.

முகம் கூட இளகித் தெரிகிறது.

நுழைகிறபோதே குரலில் குழைவு சேர்த்து ''மீனாட்சி, மீனாட்சி... அமுதா காலேஜ் விட்டு வந்துட்டாளா?'' என்று கேட்டுக் கொண்டே நுழைந்தார்.

''வர்ற நேரம்தான். ஏதாச்சும் ஸ்பெஷல் கிளாஸ், ஷாப்பிங்னு இருந்தால்தான் கொஞ்சம் லேட்டாய் வருவாள். இன்னிக்கு எதுவும் இல்லை. சீக்கிரமே வந்துருவாள். ஆமாம், ஏன் கேட்கிறீங்க?'' என்று பயம் விலகிக் கேட்டாள்.

இப்போது சுமுக முகம் காட்டுவதால் இந்தப் பயம் விலகல்!

''போன வாரம் நம்ப அமுதாவைப் பெண் பார்த்துட்டுப் போனாங்களே,

அவங்க ஒரு தகவல் அனுப்பியிருக்காங்க."

''என்னவாம்?''

''அன்னிக்குப் பையனோட சித்தப்பா ஒருத்தர் பெண் பார்க்க வரலியாம். பம்பாய் போயிருந்தாராம். இப்ப வந்தவர் அமுதாவைப் பார்க்கணும்கிறாராம். அவர் சம்மதம் சொல்லி விட்டால், எல்லோரும் ஓ.கே.ன்னுடுவாங்களாம். அதான் அவர் இன்னிக்குப் பார்க்க வர்றார். அமுதா வந்ததும் தயாராய் இருக்கச் சொல்லு. அவர் வந்து பார்த்துட்டுப் போகட்டும்'' என்றார் விசுவநாதன்.

''அதான் அன்னிக்கு ஒரு கூட்டமே வந்துச்சே! அப்புறமும் என்னவாம்?''

"நமக்கென்ன மீனாட்சி, நம்ம அமுதாவை வேண்டாம்ன்னா சொல்லிட்டுப் போறாங்க. அன்னிக்கு வந்தவங்க அத்தனை பேருக்கும் திருப்திதான். இவரும் பார்த்துட்டுப் போறார். பையன் கறுப்புன்னாலும் பார்க்க நல்லாத்தானே இருக்கான். நல்ல வேலை. கை நிறைய ஊதியம். இந்த வரன் அமைந்தால் நமக்கு யோகம் இல்லியா?''

மீனாட்சி இதற்குப் பதில் கூற வில்லை.

''ஸ்வீட், காரமெல்லாம் கடையிலேயே வாங்கிட்டு வந்துட்டேன். காப்பி மட்டும் தயார் பண்ணிக்க. அமுதா வந்தால் ரெடியாகச் சொல்லு'' என்றவர் பாத்ரூமில் நுழைந்தார்.

மீனாட்சி குழம்பலானாள்.

அமுதாவிற்கு இந்தத் திருமணத்தில் விருப்பமே கிடையாது. தவிரவும் கல்லூரிப் படிப்பை இடையில் முறித்துக் கொண்டு கல்யாணத்துக்கு என்ன அவசரம் என்று முணுமுணுக்கிறாள்.

அப்பாவிடம் வாயே திறக்க முடியாது. மீனாட்சிக்கே இந்தப் பாடு என்றால், அமுதா எம்மாத்திரம்?

அமுதா மறுப்பதற்கான காரணம் இது மட்டும் என்று கூறி விட முடியாது. அவளின் மனோபீட ஆரோகண நாயகன் கோபி அல்லவா!

கோபி, விசுவநாதனின் தங்கை மகன். அமுதாவின் முறைப் பையன். குறைந்த ஊதியத்தில் தனியார் நிறுவனமொன்றில் பணி





தமது கிரிக்கெட் வாழ்க்கையில் ஒரே ஒரு முறை மட்டும் காவஸ்கர் பூஜ்ஜியத்திலேயே அவுட்டாகாமல் இருந்துள்ளார். இந்தியாவிற்கும் — இங்கிலாந்திற்குமிடையே 1972 — 73 — ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற போட்டியில் காவஸ்கர் ஒன்பதாவது ஆட்டக்காரராகக் களத்தில் இறங்க, அந்த டெஸ்ட்டில் இந்தியா வென்று விட்டது அவர் தம் கணக்கைத் துவங்கும் முன்பே!

— என். விக்னேஷ்.

மார்க்டுவெய்னை ஒரு நிருபர் பேட்டி கண்ட போது, ''நான் இளைஞனாக இருந்த போது ஜனாதிபதி மேடிசன் என்னிடம் சொன்னார்...'' என்று எதையோ கூற வாயெடுத்தார் டுவெய்ன்.

நிருபர் இடைமறித்து, ''மேடிசன் ஜனாதிபதியாக இருந்த போது நீங்கள் பிறந்திருக்கவே மாட்டீர்களே?'' என்று கேட்க, ''அச்சுக்குப் போகுமுன் தவறைத் திருத்திய முதல் நிருபர் நீங்கள்தான் என்று நினைக்கிறேன்!'' என்றார் மார்க் டுவெய்ன்.

— எஸ். முகம்மது யூசுப்.



யாற்றுகிறவன். பார்க்க நன்றாக இருப்பான். நல்ல இயல்புகள் கொண்டவன். மீனாட்சிக்கும் அமுதாவின் விருப்பம் உடன்பாடுதான்.

ஆனால், விசுவநாதன் விட மாட்டார்.

எப்போதும் தங்கையின் கணவனைக் குடிகாரப் பிச்சைக்காரன் என்று திட்டிக் கொண்டே இருப்பார். அவனைத் தமது சம்பந்தியாக்கிக் கொள்வதா என்று கூச்சலிடுவார். தமது செல்வ நிலைக்கும் தங்கையின் செல்வ நிலைக்கும் ஒத்து வராது என்று சுலபமாய் விலக்குவார்.

இப்போது பெண் பார்க்க வந்த குடும்பம் அத்தனை நல்ல இடம் இல்லை என்பது மீனாட்சியின் கணிப்பு. விசுவநாதன் பணத்தை மட்டுமே பார்க்கிறார்.

அவரின் விருப்பம் போலவே விட்டு விட்டால், கடைசியில் தனக்கு அமைந்தது போன்றதொரு சிறை வாழ்க்கையே மகளுக்கும் அமையலாமோ என்று பயப்பட்டாள்.

அதனால் அமுதாவின் எண்ணம் போலவே மணவாழ்வு அமைய வேண்டும் என்று விரும்பினாள்.

தாய் மனம் ஆயிற்றே!

அதிலும் அனுபவிக்கின்ற மனைவி மனம்!

ஆனால் விசுவநாதன்....?

'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' என்பது வழக்குச் சொல்.

இவர் மூர்க்கன்!

விடுவாரா?

விட வேண்டும்?

இல்லை எனில் அமுதாவின் வாழ்க்கை பாழாகி விடும்.

மீனாட்சியினுள் ஒரு புதிய மீனாட்சி உருவானாள்.

வருகிறவர் பார்த்து விட்டுப் போகட்டும்

பார்த்து விட்டே போனார்.

"மீனாட்சி! அப்பவே நான் சொல்லலே, பையனோட சித்தப்பாவுக்கு நம்ப அமுதாவைப் பிடிச்சுப் போச்சு. அடுத்தாப்புல முகூர்த்த நாள் குறிச்சுட வேண்டியதுதான்'' என்றபடி, மகிழ்ச்சி காட்டும் முகத்துடன் வந்தார் விசுவநாதன்.

மீனாட்சியோ வறட்சி முகம் காட்டி நின்றாள்.

''ஏன் மீனாட்சி என்னவோ போல இருக்கிறே?'' என்றபடி வெற்றிலை போட ஆயத்தம் பண்ணலானார்.

''பின்னே, எல்லோருக்கும் பிடிச்சு என்னங்க பிரயோஜனம்? முக்கிய நபரான அமுதாவுக்குப் பிடிக்கலியே'' என்றாள்.

பாக்கை வாயில் போட்டவர்,

''என்ன சொல்கிறே மீனாட்சி நீ?'' என்றபடி, கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் வெற்றிலைக்குச் சுண்ணாம்பு தடவலானார்.

இப்படி மனைவியை அலட்சியம் பண்ணு



ஆயத்தமாகிவிட்டார் ஆனந்தமான நேரத்தை அனுபவித்திட.


அலுவலகத்தில் ஓயாத உழைப்பு, பதற்றம். ஆனால் இப்போதோ அது ஓடி ஒளிந்து விட்டது. குழந்தைகளோடு குழந்தையாய் அளவற்ற சக்தியுடன் விளையாடுகிறார்.

ஊட்டச் சத்துமிக்க ஒரு கோப்பை ஹார்லிக்ஸ் கொடுத்து நாள் முழுவதும் அவருக்கு வேண்டிய வலிமையும் ஆற்றலும் அளிக்கும் உங்களுக்கே நன்றி.



"ஹார்லிக்ஸில், வலிமைக்கும், ஆற்றலுக்கும், நல்ல உடல் ஆரோக்கியத்துக்கும் தேவையான- புரோட்டீன்ஸ், விட்டமின்ஸ், மினரல்ஸ், கார்போஹைட்ரேட்ஸ் —ஆகிய முக்கிய ஊட்டச்சத்துக்கள் அடங்கியுள்ளன.

அதுவே, நாள் முழுவதும் ஆரோக்கியம் தரும் ஹார்லிக்ஸின் மேன்மை."



சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

HTA 6224TAM

கிறாராம்!

"ஆமாம், இதென்ன வெள்ளை அடிக்கிற சுண்ணாம்பைக் கொணாந்து வச்சிருக்கே? வாசனைச் சுண்ணாம்பு வாங்கலியா? எனக்கு அதுதான் பிடிக்கும்னு தெரியும்ல. அப்புறம் எதுக்கு இப்படிப் பண்ணியிருக்கே! — இப்போது நிஜமாய்க் கோபம் வந்திருந்தது அவருக்கு.

"வாங்குறதுக்கு மறந்து போச்சு. வாங்கலே. இப்ப என்ன ஆயிடுச்சு? போடுங்களேன். அடுத்த முறை போடுறதுக்குள்ள வாங்கி வச்சிர்றேன்."

"ஓ! அத்தனை அலட்சியம் வந்தாச்சா? என்ன... என்ன... துளிர் விடுதா? கொழுப்பு வந்திருச்சா? எதிர்ப் பேச்சு அலட்சியமாய் வருது. என்ன சொன்னே, அமுதாவுக்குப் பிடிக்கலியா? எங்கே, இன்னொரு வாட்டி சொல்லு, நாக்கை இழுத்து வச்சு அறுத்திடுறேன். ஏண்டி... ஆள் தெரியாமக் கொஞ்சுறியா?"

"எல்லாம் தெரிஞ்சுதான் சொல்றேன். அமுதாவுக்கு இந்த மாப்பிள்ளை வேணாமாம். அவ மனசிலே கோபி இருக்கான். அதனாலே..."

"வாயை மூடுடி சனியனே! அந்தக் குடிகாரப் பயலா என் சம்பந்தியா வரணும்? அந்தப் பிச்சைக்காரப் பயலா என் சம்பந்தியா வரணும்? என்னை என்ன இளிச்சவாயன்னு நினைச்சியா? கண்டவனோட சம்பந்தம் பண்ணிக்க நான் தயார் இல்லே."

"மனசுக்குப் பிடிக்காதவனைப் பண்ணிக்க அமுதாவும் தயார் இல்லே."

"என்னடி சொன்னே?"

"மறுபடியும் சொல்றேன். அமுதா உங்க தங்கை மகன் கோபியைத்தான் பண்ணிக்குவா?"

"தாயும் மகளுமாய்த் திட்டமே போட்டுட்டீங்களாடி?"

"தீர்மானம் பண்ணியிருக்கோம்."

"அது நடக்காது. நடக்க விட மாட்டேன்."


"ஏன் நடக்காது? தாராளமாய் நடக்கும். என் மகளாவது என்னைப் போல அக்னி வேலிக்குள்ளே அகப்பட்டுக்காம, இஷ்டப்பட்டவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷத்தை அனுபவிக்கட்டும். நான் வாயில்லாப் பூச்சியாய் ஆகி, ஒரு முழம் பூவைக் கூட என் இஷ்டப்படி வாங்கி வச்சிக்க முடியாத நிலைக்கு வந்துட்டேன். இப்படி ஒரு நிலை அமுதாவுக்கும் வந்துடக் கூடாது. கோபி நல்ல-பையன். பூவாய் வச்சுப்பான். எவனாவது இசகுபிசகாய் அகப்பட்டால்..."

"நான் பார்த்தவன் ஒண்ணும் மோசமானவன் இல்லே. அதனாலே என் முடிவை மாத்த முடியாது."

"ஆமாம். உங்களாலே முடியாது. மாத்திக்க மாட்டீங்க. கேவலம், போட்டுத் துப்புற சுண்ணாம்பு, அதை ஒருவேளை மாத்திக்கக் கூட உங்களாலே முடியலியே! அமுதா பாவம்ங்க! காலமெல்லாம் கோபியோட சந்தோஷமாய் வாழலாம்னு கனவு காண்கிற பொண்ணுங்க. அவ மனசை மட்டும் மாத்திக்கச் சொல்றீங்களே! இது நியாயம்தானா? விருப்பத்தோட ஒருத்தன் கைநிழல்ல வாழுறதுக்கும், விருப்பமில்லாமல் ஒரு அக்னி வேலிக்குள்ளே வாழுறதுக்கும் வித்தியாசம் உண்டுங்க. இப்ப நான் பேசலைங்க, என் அனுபவம் பேசுது... இதோ பாருங்க, அமுதா இப்ப மேஜர்! நானும் பழைய மீனாட்சி இல்லே. அமுதா என்ன தப்பா பண்ணுகிறாள், தடை போட்டுக் குறுக்குச் சுவர் எழுப்ப? அத்தை மகனை உரிமையோட பண்ணிக்கப் போறேன்னு சொல்றா. உங்களுக்குரிய மரியாதை இப்ப போலவே எப்பவும் இருக்கணும்னால், பேசாமல் ஒத்துக்கங்க. இல்லே..."

மீனாட்சியே ஆச்சர்யப்படும் வண்ணம், வெகு சாதுவான முகத்துடன் வெற்றிலைக்குச் சுண்ணாம்பு தடவலானார் விசுவநாதன்.

அந்த, வெள்ளை அடிக்கிற சுண்ணாம்பை!



"மேடையிலே தலைவர் பேசும் போது ஒரு கூடை தக்காளிப் பழத்தை எதிர்க்கட்சிக்காரங்க எறிஞ்சுட்டாங்க!"

"ஐயையோ, தலைவர் என்ன செய்தார்?"

"ஒண்ணு பாக்கி விடாம விழுந்த தக்காளி எல்லாத்தையும் பொறுக்கி வீட்டுக்குக் கொண்டு போய் ஜூஸ் பிழிஞ்சு சாப்பிட்டார்!"

— எஸ். முகம்மது யூசுப்.

பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 68

"ஒரு நாள் இளவரசர்"

சேந்தன் அமுதனின் கட்டிலுக்கு அடியிலிருந்து வந்த முனகல் சத்தத்தைக் கேட்டதும், ஆழ்வார்க்கடியான், "ஆகா! அப்படியா சமாசாரம்? சிவ பக்த சிகாமணிகளே! பழைய பரமசிவனைப் போல் மோசம் செய்ய ஆரம்பித்து விட்டீர்களா?" என்று சொல்லிக் கொண்டே மேலே போகத் தொடங்கினான்.

பூங்குழலி தன் இடையில் செருகியிருந்த கத்தியைச் சட்டென்று எடுத்துக் காட்டி, "வைஷ்ணவனே! சிவபெருமானைப் பழித்த பாதகனாகிய நீ இந்த உலகில் இனி ஒரு கணமும் இருக்கலாகாது. மேலே ஒரு அடி எடுத்து வைத்தாயானால், உடனே வைகுண்டம் போய்ச் சேருவாய்!" என்றாள்.

"தாயே! மகா சக்தி! உன்னுடைய வார்த்தைக்கு மறு வார்த்தை உண்டா? வைகுண்ட பதவி கிடைப்பது எளிதன்று. உன் கையால் என்னை அங்கே அனுப்பி விட்டாயானால், அதைக் காட்டிலும் பெரிய பாக்கியம் எனக்கு வேறு என்ன கிடைக்க கூடும்?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

இச்சமயத்தில் சேந்தன் அமுதன் கட்டிலிலிருந்து எழுந்து வந்து, "பூங்குழலி! வேண்டாம்! கத்தியை இடுப்பில் செருகிக் கொள்! இந்த வைஷ்ணவன் சிவனைத் தூஷித்ததினால் சிவ பெருமானுக்குக் குறைவு ஒன்றும் வந்து விடாது. பொய்மையினாலும் மோசத்தினாலும் நன்மை எதுவும் கிட்டாது. இந்த வைஷ்ணவனிடம் உண்மையைச் சொல்லி உதவி கேட்போம். இவனும் வந்தியத்தேவனுக்குச் சிநேகிதன்தானே!" என்றான்.

"அப்படி வாருங்கள் வழிக்கு! கபட நாடக சூத்திரதாரியான கிருஷ்ண பரமாத்மாவின் அடியார்க்கு அடியேனைக் கேவலம் சிவபக்தர்களால் ஏமாற்ற முடியுமா? கருணாமூர்த்தியான ஸ்ரீமந் நாராயணனைச் சரணாகதி என்று அடைந்தால், அவர் அவசியம் காப்பாற்றி அருளுவார். ஆதிமூலமே என்று கதறிய கஜேந்திரனை முதலை வாயிலிருந்து காப்பாற்றிய பெருமான் அல்லவோ எங்கள் திருமால்?......"

"ஆமாம், ஆமாம்! உங்கள் திருமால் வைகுண்டத்திலிருந்து வந்து சேருவதற்குள் உங்கள் சிநேகிதர் இந்த மண்ணுலகிலிருந்தே போய் விடுவார்!" என்று பூங்குழலி சொல்லி விட்டுக் கட்டிலை நோக்கி விரைந்து சென்றாள்.

மற்றவர்களும் அவளைப் பின்பற்றிச் சென்றார்கள். கட்டிலின் கீழே துணிக் குவியலினால் மறைக்கப்பட்டுக் கிடந்த வந்தியத் தேவனைத் தூக்கிக் கட்டிலின் மேலே கிடத்தினார்கள்.

வந்தியத் தேவன் நினைவற்ற நிலையில் இருந்தான். எனினும் அவ்வப்போது வேதனைக் குரலில் முனகிக் கொண்டிருந்தான். அதனாலேயே அவன் உடலில் உயிர் இருக்கிறது என்று அறிந்து கொள்ளக்

அமரர் கல்கி

கூடியதாயிருந்தது.

வாணி அம்மை மூலிகைகளை வேக வைத்து மஞ்சள் பொடி சேர்த்துக் காயத்தில் வைத்துக் கட்டுவதற்காகக் கொண்டு வந்தாள். ஆழ்வார்க்கடியானும் சேந்தன் அமுதனும் வந்தியத் தேவனுடைய கைகால்களை இறுக்கிப் பிடித்துக் கொண்டார்கள். பூங்குழலியும்வாணி அம்மையும்அவனுடைய காயத்தில் வேக வைத்த மூலிகைகளைச் சுடச் சுட வைத்துத் துணியைப் போட்டுக் கட்டினார்கள்.

அப்போது ஏற்பட்ட வேதனையினால் வந்தியத் தேவன் கண் விழித்தான். எதிரில் ஆழ்வார்க்கடியானைப் பார்த்ததும், "வைஷ்ணவனே! இப்படி வஞ்சகம் செய்து விட்டாயே! இங்கே என்னை வரச் சொல்லி விட்டு, பின்னோடு என்னைக் கொல்லுவதற்கு ஆள் அனுப்பி விட்டாயா?" என்று குழறி விட்டு மறுபடியும் நினைவு இழந்தான்.

ஆழ்வார்க்கடியான் முகத்தில் மனச் சங்கடத்தின் அறிகுறி தென்பட்டது. அரை நினைவான் நிலையில் வந்தியத் தேவன் கூறிய வார்த்தைகள் சேந்தன் அமுதன் — பூங்குழலி இவர்களுக்குத் தன்னைப் பற்றி மறுபடியும் ஐயத்தை உண்டாக்கியிருக்கும் என்று எண்ணி அவர்கள் முகத்தைப் பார்த்தான்.

பூங்குழலியின் முகத்தில் பூத்திருந்த புன்னகை அவனுக்குச் சிறிது தைரியத்தை உண்டாக்கியது.

"வைஷ்ணவரே! வந்தியத் தேவரை நீர் தான் இங்கே அனுப்பி வைத்தீரா?" என்று கேட்டாள்.

"ஆம், தாயே! ஆனால் இவனைக் கொல்லுவதற்குப் பின்னோடு நான் யாரையும் அனுப்பி வைக்கவில்லை."

"அது இருக்கட்டும்; இங்கு எதற்காக இவரை அனுப்பினீர்?"

"தப்பி ஓடிச் செல்வதற்காக அனுப்பினேன். இந்த நந்தவனத்துக்குப் பக்கத்தில் அவனுக்காகவும் அவன் நண்பனுக்காகவும் இரண்டு குதிரைகளும் தயாராய் வைத்திருந்தேன்....."

"பின்னே, அவர் தப்பி ஓடவில்லை என்று எப்படித் தெரிந்தது? இக் குடிசையில் இருப்பதை எப்படி அறிந்தீர்?"

"அவனுக்காக நான் விட்டிருந்த குதிரையில் வேறொருவர் ஏறிக் கொண்டு போவதைப் பார்த்தேன். அதனாலேதான் சந்தேகம் உண்டாயிற்று..."

"திருமால் ஒன்று நினைக்கச் சிவன் வேறொன்று நினைத்து விட்டார்!"

"இது என்ன புதிர், தாயே? இவன் எப்படிக் காயம் அடைந்தான்?"

"வைஷ்ணவரே! நீர் என்ன உத்தேசத்துடன் இவரை இங்கே அனுப்பினீரோ, தெரியாது. ஆனால் இவர் சரியான சமயத்துக்கு இங்கே வந்து நான் கல்யாணம் செய்து கொள்வதற்குள் கைம்பெண் ஆகாமல் காப்பாற்றினார்!"

இவ்வாறு பூங்குழலி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ஆழ்வார்க்கடியான், சேந்தன் அமுதன் இருவரும் "என்ன? என்ன? என்ன?" என்று அதிசயத்துடன் கேட்டார்கள்.

பூங்குழலி அமுதன் பக்கம் திரும்பி, "ஆமாம்; உங்களிடம் கூட நான் சொல்லவில்லை. வெளியே ஒருவன் நின்று ஈட்டியினால் தங்களைக் குத்துவதற்குத்தான் குறி பார்த்தான். அப்போது இவர் வந்து குறுக்கிட்டு ஈட்டியைத் தான் ஏற்றுக் கொண்டு தங்களைக் காப்பாற்றினார்!" என்றாள்.

சேந்தன் அமுதன் கண்களில் நீர் ததும்பியது. "ஐயோ! எனக்காகவா என் நண்பர் இந்த ஆபத்துக்கு உள்ளானார்?" என்றான்.

"அதனால் என்ன? தாங்கள் இவரைத் தப்புவிப்பதற்காக எவ்வளவு ஆபத்துக்கு உள்ளாகியிருக்கிறீர்கள்!" என்றாள் பூங்குழலி.

"அம்மணி! இந்த உலகத்தில் ஒருவர் செய்த உதவிக்கு உடனே பதில் உதவி செய்வதென்பது மிக அபூர்வமானது. நல்லது செய்தவர்களுக்குக் கெடுதல் செய்யாமலிருந்தாலே பெரிய காரியம். வந்தியத் தேவன் இங்கு சரியான சமயத்துக்கு வந்து, சேந்தன் அமுதனைக் காப்பாற்றியது அதிசயமான காரியந்தான்! ஆனால், கலியாணத்தைப் பற்றி ஏதோ சொன்னீர்களே? அது என்ன? கைம்பெண் ஆகாமல் காப்பாற்றியதாகவும் சொன்னீர்கள்!"

"ஆம், வைஷ்ணவரே! சிறிது நேரத்துக்கு முன்னாலேதான் நானும் இவரும் மணந்து கொள்வது என்று முடிவு செய்தோம். செம்பியன் மாதேவியின் ஆசியையும் பெற்றோம். பெரிய பிராட்டி திரும்பிச் சென்று கால் நாழிகைக்குள் இவர் மேல் ஈட்டி பாய்வதற்கு இருந்தது. என்னால் கூட அதைத் தடுத்திருக்க முடியாது. அதனால் இவர் உயிருக்கு ஆபத்து வந்திருந்தால், என் கதி என்ன? கலியாணம் ஆவதற்கு முன்பே கைம்பெண் ஆகி விடுவேனல்லவா?"

"கருணா மூர்த்தியான திருமாலின் அருளினால் அப்படியொன்றும் நேராது. செம்பியன் மாதேவியின் ஆசியும் வீண் போகாது. தாங்கள் இந்த உத்தம புருஷரை மணந்து கொண்டு நெடுங்காலம் இனிது

வாழ்ந்திருப்பீர்கள். ஆனால் இந்தப் பரம சாதுவான பிள்ளையை ஈட்டியால் குத்திக் கொல்ல முயன்ற பாதகன் யாராயிருக்கும்? அவனைத் தாங்கள் பார்த்தீர்களா? அடையாளம் ஏதேனும் தெரிந்ததா?''

''பார்க்காமல்' என்ன? தெரியாமல் என்ன? அந்த வைத்தியர் மகனாகிய பினாக பாணி என்னும் சண்டாளன்தான்! என் அத்தை மந்தாகினியைக் கோடிக்கரையிலிருந்து அக்கிரமமாகப் பிடித்துக் கொண்டு வந்து கொலைகாரனுக்குப் பலியாகச் செய்தவன்தான்! சோழ ராச்சியத்தில் இப்படியெல்லாம் அக்கிரமங்கள் நடக்கின்றன....''

''இது என்ன அக்கிரமத்தைக் கண்டு விட்டீர்கள்? இதை விட ஆயிரம் மடங்கு நடக்கப் போகிறது. சோழ நாட்டில் இன்றிரவு அராஜகம் ஆரம்பமாகப் போகிறது. சிற்றரசர்களுக்குள் பெரிய சண்டை மூளப் போகிறது. நாடெங்கும் மக்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொண்டு மடியப் போகிறார்கள்! ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் அருளினால் ஒரு பெரிய அற்புதம் நடந்தாலன்றி இந்த நாட்டுக்கு வரப் போகும் விபத்துக்களைத் தடுக்க முடியாது!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''வைஷ்ணவரே! இது என்ன இப்படிச் சாபங் கொடுப்பது போலப் பேசுகிறீர்? சோழ நாடு செழிப்படைய ஆசி கூறலாகாதா?'' என்றான் அமுதன்.

''நாடு எப்படியாவது போகட்டும்! நாங்கள் கோடிக்கரைக்குப் போய் விடுகிறோம்!'' என்றாள் பூங்குழலி.

''நாம் போய்விடலாம்; என் உயிரைக் காப்பாற்றிய இந்த உத்தம நண்பனை என்ன செய்வது?'' என்று சேந்தன் அமுதன் கேட்டான்.

''இவனை உங்களால் எப்படியும் காப்பாற்ற முடியாது. இங்கேயே நீங்கள் இருந்தாலும் பயனில்லை. சிறையிலிருந்து தப்பி ஓடியவர்களைப் பிடிப்பதற்கு இப்போதே நாலாபக்கமும் சேவகர்கள் தேடி அலைகிறார்கள். விரைவில் இங்கேயும் வருவார்கள். வாசலில் நிற்கும் காவலர்களுக்கு நானே என்ன சமாதானம் சொல்லி அழைத்துப் போகிறது என்று தெரியவில்லை!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''ஐயா! வைஷ்ணவரே! நீர் எவ்வளவோ கெட்டிக்காரர். முதன் மந்திரி அநிருத்தருக்கே யோசனை சொல்லக் கூடியவர். கொலைகாரனால் படுகாயம் பட்டிருக்கும் இந்த வாணர் குல வீரரைக் காப்பாற்ற ஒரு யோசனை சொன்னால் உமக்குப் புண்ணியம் உண்டு. நாங்கள் இருவரும் என்றென்றைக்கும் உமக்கு நன்றிக் கடன் பட்டிருப்போம்!''

''தேவி! அது அவ்வளவு சுலபமன்று!''

''ஐயா! நிமிஷத்துக்கு நிமிஷம் எனக்கு மரியாதை அதிகரித்துக் கொண்டு வருகிறதே! நேற்றுவரை என்னை 'ஓடக்காரி' என்று அழைத்தீர். சற்று முன்னால் 'அம்மணி' என்றீர். இப்போது 'தேவி' என்று அழைக்கிறீர். சற்றுப் போனால் 'இளவரசி!' என்றே அழைத்து விடுவீர் போலிருக்கிறதே!''

''ஆம், இளவரசி! இதோ நினைவற்றுக் கிடக்கும் இந்த வீர வாலிபனைக் காப்பாற்ற வேண்டுமானால், அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. தங்களை மணந்து கொள்ளப் போகும் இந்தப் பாக்கியசாலி ஒரு நாளைக்கு இளவரசராக வேண்டும்! அவர் இளவரசர் என்றால், தாங்களும் இளவரசிதானே?''

''வைஷ்ணவரே! இது என்ன பரிகாசம்? நானாவது, ஒரு நாள் இளவரசனாக இருப்பதாவது? எதற்காக?'' என்று கேட்டான் அமுதன்.

''என் ஒருவனுக்கு மட்டும் தெரிந்த இரகசியத்தை இப்போது உங்கள் இருவருக்கும் சொல்லப் போகிறேன். கேளுங்கள்; — இல்லை, முதலில் இதைப் பாருங்கள்!'' என்று கூறிவிட்டு ஆழ்வார்க்கடியான் தன்னுடன் கொண்டு வந்திருந்த மூட்டையை அவிழ்த்து அவர்களுக்குக் காட்டினான்.

மதுராந்தகர் அணிந்திருந்த கிரீடமும் முத்து மாலைகளும் வாகுவலயங்களும் ஜாஜ்வல்யமாய் ஜொலித்தன.

''ஆகா! இவை இளவரசர் மதுராந்தகர் தரித்திருந்தவை அல்லவா? சற்று முன்பு இங்கேயே நாங்கள் பார்த்தோமே?'' என்றான் அமுதன்.

''இவை எங்கிருந்து கிடைத்தன?'' என்றாள் பூங்குழலி.

''இந்த நந்தவனத்தின் வேலி ஓரத்தில் கிடந்து கிடைத்தன. இன்னும், நான் சொல்ல வந்த இரகசியத்தையும் கேளுங்கள். வடவாற்றங் கரையோடு நான் வந்து கொண்டிருந்த போது இரண்டு குதிரைகளின் மீது இரண்டு பேர் விரைவாகப் போய்க் கொண்டிருந்ததைக் கண்டேன். அவை நான் இந்த வந்தியத் தேவனுக்காகவும் இவனுடன் சிறையிலிருந்து தப்பிய பைத்தியக்காரனுக்காகவும் இங்கே விட்டுப் போன குதிரைகள். அந்தப் பைத்தியக்காரனைத் தங்களுக்குக் கூடத் தெரியுமே?''

''ஆமாம்; தெரியும். பாண்டிய வம்சத்து மணி மகுடத்தையும் இரத்தின ஹாரத்தை



யும் பற்றி யாரைப் பார்த்தாலும் உளறிக் கொண்டிருந்தவன்."

"அவனேதான்! வடவாற்றங் கரையோடு அதிவேகமாகச் சென்ற குதிரைகளில் ஒன்றின் மீது அந்தப் பைத்தியக்காரன் இருந்தான். இன்னொரு குதிரை மேலிருந்தவர் இளவரசர் மதுராந்தகர் போலத் தோன்றியது. இங்கு வந்த பிறகு அது நிச்சயமாயிற்று.

"இது என்ன விந்தை? மதுராந்தகர் எதற்காகத் தம்து ஆபரணங்களைக் கழற்றி எறிந்து விட்டு ஓட வேண்டும்?"

"அதுதான் எனக்கும் தெரியவில்லை. முதன் மந்திரியிடம் சொல்லி ஓடியவர்களைத் தொடர்வதற்கு ஆள்கள் அனுப்பப் போகிறேன். ஆனால் அதற்குள்ளே இங்கு பெரிய விபரீதங்கள் நடந்து விடும் என்று அஞ்சுகிறேன்."

"என்ன விபரீதம் நடந்து விடும்?"

"பழுவேட்டரையர்களும் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த சிற்றரசர்களும் இதோ தஞ்சைக் கோட்டை வாசலை அணுகிக் கொண்டிருக்கிறார்கள். கொடும்பாளூர் வேளாரும் முதன் மந்திரியும்

மலையமானும் அவர்களை வரவேற்கக் கோட்டை வாசலில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இராஜ்ய உரிமை பற்றிச் சமாதானமாகப் பேசி முடிவு செய்ய வேண்டுமென்பது சக்கரவர்த்தியின் விருப்பம், கட்டளை. ஆனால் பழுவேட்டரையர்கள் சமாதானப் பேச்சுத் தொடங்குவதற்கு முன்பு 'மதுராந்தகர் எங்கே?' என்று கேட்பார்கள். அவரைக் காணோம் என்றதும், கொடும்பாளூர் வேளார் மீது பாய்வார்கள்! சேநாதிபதிதான் பொன்னியின் செல்வருக்குப் பட்டத்தை நிச்சயம் செய்து கொள்வதற்காக மதுராந்தகரைக் கொன்று விட்டார் என்பார்கள். பெரிய வேளார் அதற்கு மறுப்புச் சொன்னாலும், அவரால் நிரூபிக்க முடியாது. உடனே பயங்கரமான உள்நாட்டு யுத்தம் ஏற்படும்; சோழ நாடு வெகு விரைவில் சீர்குலையும்.''

''அதற்குள்ளே நாம் இங்கிருந்து புறப்பட்டுப் போய் விடுவோம்!''

''தேவி! அது முடியாத காரியம்!''

''பின்னே, என்ன சொல்கிறீர்?''

''இந்தக் கிரீடத்தையும் ஆபரணங்களையும் சற்று நேரம் சேந்தன் அமுதன் அணிந்து கொள்ளட்டும். பொன்னியின் செல்வரை ஏற்றிக் கொண்டு வந்த யானையை நான் அழைத்துக் கொண்டு வருகிறேன். அதில் இவர் ஏறிக் கொள்ளட்டும். என்னுடைய ஆட்களை 'மதுராந்தகர் வாழ்க!' என்று கோஷித்துக் கொண்டு யானைக்கு முன்னும் பின்னும் போகச் சொல்லுகிறேன். மதுராந்தகர் ஏறி வந்த பல்லக்கும் அருகில் இருக்கிறது. அதில் வந்தியத்தேவனைப் போட்டுத் திரையை விட்டு விடுவோம். தேவி! தாங்கள் பல்லக்கின் பக்கமாக நடந்து வாருங்கள். மற்றதையெல்லாம் என்னிடம் விட்டு விடுங்கள்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''இது என்ன பைத்தியக்கார யோசனை?'' என்றான் சேந்தன் அமுதன்.

''இவர் கிரீடத்தை வைத்துக் கொண்டால் அடையாளம் தெரியாமல் போய் விடுமா?'' என்றாள் பூங்குழலி.





''இராத்திரி வேளையில் யானைமேல் உட்கார்ந்திருப்பவரை யார் அடையாளம் கண்டு பிடிக்க முடியும்? சந்தேகம் ஏற்பட்டால் அல்லவோ கூர்ந்து பார்க்கப் போகிறார்கள்! உங்களுடனேயே நானும் வரப் போகிறேன். உங்கள் எல்லாரையும் கோட்டைக்குள் முதன் மந்திரியின் வீட்டில் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்ப்பது என் பொறுப்பு. இந்த வாணர் குலத்து வீரனைக் காப்பாற்றுவதற்கு வேறு வழி ஒன்றுமில்லை!''

இன்னும் சிறிது நேரம் விவாதம் செய்த பிறகு சேந்தன் அமுதனும் பூங்குழலியும் ஆழ்வார்க்கடியானுடைய யோசனைக்கு இணங்கினார்கள்.

அத்தியாயம் 69

''வாளுக்கு வாள்!''

பழுவேட்டரையர் – சம்புவரையர் கோஷ்டி தஞ்சைக் கோட்டை வாசலை அணுகிய போது கடலும் கடலும் மோதிக் கொள்வது போலிருந்தது.

''சோழ நாட்டுத் தனாதிகாரி, இறை விதிக்கும் தேவர், முப்பத்தாறு போர்க்களங்களில் அறுபத்து நாலு விழுப் புண் பெற்ற வீராதி வீரர் பெரிய பழுவேட்டரையர் விஜய மாகிறார்!'' என்பது போன்ற விருதுகளை ஒவ்வொரு சிற்றரசருக்காகவும் கட்டியங் கூறுவோர் கர்ஜித்து முழங்கினார்கள். அவ்விதமே கொடும்பாளூர் வேளார், திருக்கோவலூர் மலையமான் முதலியோருக்கும் விருதுகள் முழங்கப்பட்டன. இடையிடையே முரசங்களும் சங்கங்களும் முழங்கின. கோட்டைச் சுவர்கள் எதிரொலி செய்தன.

கோட்டை வாசலில் நின்ற சேநாதிபதி பெரிய வேளார், மலையமான், முதன் மந்திரி முதலியோர் கீழே நின்று கொண்டிருந்தபடியால், பழுவேட்டரையர்களும் தத்தம் வாகனங்களின் மீதிருந்து இறங்க வேண்டிய தாயிற்று.

தங்களை வாகனங்களிலிருந்து இறங்கச் செய்து கோட்டைக்குள் நடத்தி அழைத்துப் போவதற்காகவே அவ்வாறு சேநாதிபதி முதலியவர்கள் வரவேற்கும் பாவனையில் கோட்டை வாசலில் நின்றதாகச் சின்னப் பழுவேட்டரையர் எண்ணினார். அவ்வாறே மற்றவர்களிடமும் கூறினார். சேநாதிபதி கோஷ்டியாருடன் பேசும் பொறுப்பைத் தம்மிடமே விட்டுவிடும்படி கேட்டுக் கொண்டார்.

பெரிய வேளாரும் மற்றவர்களும் வருகிறவர்களுடன் சிறிது நேரம் பேசவேண்டியிருக்கலாம் என்று எதிர்பார்த்தார்கள். ஆகையால் கோட்டை வாசலை மறித்து நில்லாமல், சற்று அப்பாலிருந்த கொடி மரத்து மைதானத்தில் நின்று கொண்டிருந்தார்கள்.

சிற்றரசர்கள் வாகனங்களிலிருந்து அவர்களை அணுகி வந்ததும், சேநாதிபதி பெரிய வேளார் ''வருக! வருக! சோழ ராச்சியத்தைத் தாங்கி நிற்கும் அஷ்டதிக்குக் கஜங்களையொத்த சிற்றரசர்களே! வருக! உங்கள் வரவினால் சோழ ராச்சியத்துக்கும் சோழ குலத்துக்கும் நன்மை உண்டாகுக!'' என்றார்.

உடனே சின்னப் பழுவேட்டரையர், ''ஆம், ஐயா! எங்கள் வருகையினால் சோழ ராச்சியத்துக்கு நன்மை உண்டாகுக! அது போலவே தங்கள் போகையினாலும் நன்மை விளைக!'' என்றதும், பெரிய வேளாரின் கண்கள் சிவந்தன.

''ஐயா! சோழ ராச்சியத்தின் செழிப்புக்காகவும் சோழ குலத்தின் புகழுக்காகவும் நானா திசைகளிலும் போவதுதான் கொடும்பாளூர் வேளார் குலத்தின் வழக்கம். என் அருமைச் சகோதரன் பராந்தகன் சிறிய வேளான் ஈழத்துப் போர்க்களத்தில் உயிர் நீத்ததை உலகமெல்லாம் அறியும். நானும் சில நாளைக்கு முன்பு வரை ஈழ நாட்டிலேதான் இருந்தேன். குண்டு சட்டியில் குதிரையோட்டும் கலையை எங்கள் குலத்தார் அறியார்கள். கோட்டைச் சுவர்களுக்குள்ளே பத்திரமாக இருந்து கொண்டு அரண்மனை அந்தப் புரங்களையும் பொக்கிஷ நிலவறைகளையும் காத்துக் கொண்டிருக்கும் வழக்கத்தையும் நாங்கள் அறியோம். உங்கள் வருகையினாலும் என்னுடைய போகையினாலும் சோழ குலம் நன்மையுறுவது உறுதியானால், பின்னர் ஒரு கணமும் இங்கு நிற்க மாட்டேன்!'' என்று பெரிய வேளார் கர்ஜித்தார்.

இச்சமயம் முதன் மந்திரி அநிருத்தர் தலையிட்டு, ''மன்னர் குலத் தோன்றல்களே! உங்கள் எல்லோருடைய வரவும் சோழ நாட்டிற்கு நன்மையே தரும் என்பதில் ஐயம் என்ன? நீங்கள் ஒவ்வொருவருமே

சோழ ராச்சியத்தின் மேன்மை கருதித் தலைமுறை தலைமுறையாகப் பாடுபட்டவர்கள். சோழ குலத்துக்கு உயிரைக் கொடுத்தவர்கள் உங்கள் ஒவ்வொருவருடைய பரம்பரையிலும் உண்டு. இப்போதும், இனி எப்போதும், சோழ நாட்டுக்கு உங்கள் கூட்டுறவும் சேவையும் தேவையாயிருக்கும். இதனாலேயே பராந்தக சுந்தர சோழ சக்கரவர்த்தி உங்களுக்குள் நேர்ந்துள்ள வேற்றுமையைக் குறித்து வருந்துகிறார். தமது அருமைப் புதல்வர், வீர பாண்டியன் தலை கொண்ட வீராதி வீரர், ஆதித்த கரிகாலர் அகால மரணமடைந்த பெருந்துயரத்தையும் மறந்து உங்களையெல்லாம் ஒருமிக்க அழைத்திருக்கிறார். பட்டத்து உரிமை பற்றியும் மற்ற எல்லாப் பிரச்னைகளைப் பற்றியும் சக்கரவர்த்தியின் முன்னிலையில் சமாதானமாகப் பேசி முடிவு செய்து கொள்ளலாம். மன்னர் பெருமக்களே! உங்களையெல்லாம் பெரிதும் வேண்டிக் கொள்கிறேன். மூத்த புதல்வரைப் பறி கொடுத்துத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் சக்கரவர்த்தியின் உள்ளத்தை உங்கள் பூசல்களினால் புண்படுத்தாதீர்கள்!'' என்று கேட்டுக் கொண்டார்.

இந்த வார்த்தைகள் அங்கே கூடியிருந்த எல்லோருடைய மனத்திலும் தைத்தன. தங்களுடைய சொந்தக் கோப தாபங்களையெல்லாம் வெளிப்படுத்திக் கொள்வதற்கு அது தக்க சமயமல்ல என்பதை உணர்ந்தார்கள்.

உடனே, சின்னப் பழுவேட்டரையர், ''முதன் மந்திரி! சக்கரவர்த்தியின் விருப்பத்தின்படியே நாங்கள் நடந்து கொள்ளச் சித்தமாயிருக்கிறோம். சக்கரவர்த்தியின் தரிசனம் எங்களுக்கு எப்போது கிடைக்கும்? இன்று இரவே பார்க்க முடியுமா? சக்கரவர்த்தியின் விருப்பத்தை அவருடைய வாய்மொழியாக நேரில் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்!'' என்றார்.

''தளபதி! தங்கள் விருப்பம் நியாயமான விருப்பம்தான்! அது நிறைவேறும் என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் சக்கரவர்த்தியின் உடல் நிலையும் மன நிலையும் நீங்கள் எல்லாரும் அறிந்தவை. இரவு வந்தால் சக்கரவர்த்தியின் உடல் வேதனையும் மன வேதனையும் அதிகமாகின்றன. மேலும் சிற்றரசர்களுடன் பட்டத்து உரிமையைப் பற்றிப் பேசுவதற்கு முன்னால், சக்கரவர்த்தி செம்பியன்மா தேவியுடன் முடிவாகப் பேசவிரும்புகிறார். அவருடைய மனத்தை மாற்ற ஒரு கடைசி முயற்சி செய்ய விரும்புகிறார். எதன் பொருட்டு என்பது உங்களுக்குத் தெரியும். ஆகையால், நாளைப் பகல் முடிவதற்குள்ளே சக்கரவர்த்தி உங்களையெல்லாம் அழைப்பார். இன்றிரவு நீங்கள் எல்லாரும் கோட்டைக்குள் வந்து அவரவர்களுடைய அரண்மனையில் நிம்மதியாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். கோட்டைக்குள் அரண்மனை இல்லாதவர்களுக்கு வேண்டிய ஜாகை வசதிகள் செய்து கொடுக்கும்படி பெரிய வேளாருக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.....''

மறுபடியும் சின்னப் பழுவேட்டரையர் குறுக்கிட்டு, ''முதன் மந்திரி! எங்களுக்கு ஜாகை வசதிகள் தேவை இல்லை. போர்க்களங்களில் திறந்த வெளியில் இருக்கப் பயின்றவர்கள். சக்கரவர்த்தி எங்களை நாளைக்குத்தான் பார்க்கப் போகிறார் என்றால், இன்றிரவு கோட்டைக்குள் நாங்கள் வர வேண்டிய அவசியம் என்ன?'' என்றார்.

ஆட்டுக்குட்டிக்கு ஒரு டிக்கெட்!

கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த சாம்ராஜ் நகரிலிருந்து தனியார் பஸ்ஸில் நரசிபுரம் சென்று கொண்டிருந்தேன். வழியில் ஆங்காங்கே பல விவசாயிகள் பஸ்ஸில் ஏறினர். வேடிக்கை என்னவென்றால் ஒவ்வோர் இடத்திலும் விவசாயிகள் ஓர் ஆடு, அல்லது கன்றுக் குட்டியுடன் பஸ்ஸில் ஏறியதுதான். பயணிகளுக்கு இது மிகவும் தொந்தரவாக இருந்தபோதிலும், கண்டக்டர் ஆட்டுக்கும் மாட்டுக்கும் கூட டிக்கெட் கிழித்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். விவசாயி கால்நடைக்கும் சேர்த்து டிக்கெட் வாங்கினார்! இப்படிக் கிட்டத்தட்ட 15 — 16 கால்நடைகள் பஸ்ஸில்!

விசாரித்த போது தெரிய வந்த விவரம்: தனியார் பஸ் முதலாளிகள், ''யாரை வேணுமானாலும் ஏத்திக்கிங்க; எப்படியாவது கலெக்ஷன் அதிகரிக்கணும்'' என்று இலக்கு நிர்ணயிக்கிறார்கள். அந்தத் தொகையை எட்டிப் பிடிப்பதற்காக பஸ் டிரைவரும் கண்டக்டரும், கால்நடைகளுடன் சந்தைக்குச் செல்லும் விவசாயிகளை ஏற்றிக் கொண்டு, மக்களுடன் மாக்களுக்கும் டிக்கெட் தருகிறார்கள்!

— சக்தி. ஏ. ஜே. ஜப்பார்.



"உங்களுடைய அரண்மனைகளில் நீங்கள் வந்து தங்காமல் வெளியில் தங்க வேண்டிய அவசியம் என்ன?" என்று கேட்டார் முதன் மந்திரி.

"தளபதி காலாந்தக கண்டர் தஞ்சைக் கோட்டைக்குள் வந்து தங்கப் பயப்படுகிறார் போலும்!" என்றார் சேநாதிபதி.

"பயமா? அது எப்படியிருக்கும்? கருப்பா? சிவப்பா? அதற்குக் கொம்பு உண்டா? சிறகு உண்டா? ஈழத்துப் போர்க்களத்திலிருந்து அவசரமாக ஓடி வந்திருக்கும் பெரிய வேளாருக்கு ஒரு வேளை தெரிந்திருக்கலாம்" என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

ஏது ஏது? இவர்கள இருவரும் முட்டி மோதிக் கொள்ளாமல் தடுக்க முடியாது போலிருக்கிறதே என்று முதன் மந்திரி சிந்தித்துக் கொண்டிருந்தபோது, பெரிய பழுவேட்டரையர், வானவெளியெல்லாம் நிறையும்படி 'ஹூம்' என்று சத்தமிட்டுக் கொண்டு, முன்னால் வந்தார்.

அவரை எல்லாரும் மிகுந்த மரியாதையுடன் கவனித்தார்கள்.

"தம்பி! கொடும்பாளூர் வேளார் பாரி வள்ளலின் வம்சத்தில் வந்தவர். வேளிர் குலத்தினர் வாக்குத் தவறி நடந்ததில்லை. பெரிய வேளார் நமக்குப் பாதுகாப்பு அளிப்பதாகச் சொல்லும் போது, நாம் கோட்டைக்குள் போவதற்கு என்ன தடை?" என்று கேட்டார் பெரிய பழுவேட்டரையர்.

"அண்ணா! நமக்கு இன்னொருவரின் பாதுகாப்பும் தேவையில்லை; வாக்குறுதியும் தேவையில்லை. நம்முடைய் உடைவாள்களும் முப்பதினாயிரம் வீரர்களின் வேல்களும் இருக்கின்றன. இந்தத் தஞ்சைக் கோட்டையின் தளபதி நான். கோட்டை மறுபடியும் என் வசம் வந்தாலன்றி நாம் கோட்டைக்குள் போகச் சம்மதியேன்!" என்றார் காலாந்தக கண்டர்.

சேநாதிபதி வேளார் பெரிய பழுவேட்டரையரைப் பார்த்து, "ஐயா! சக்கரவர்த்தி கட்டளை பிறப்பித்தால் அவ்வாறே செய்யச் சித்தமாயுள்ளேன்!" என்றார்.

"சக்கரவர்த்தியின் கட்டளையின் பேரிலா கோட்டையை இவர் கைப்பற்றினார்?" என்று கேட்டார்.

"இல்லை; வாளின் பலத்தைக் கொண்டு இந்தக் கோட்டையைக் கைப் பற்றினேன்!" என்றார் பெரிய வேளார்.

"வாளின் பலங் கொண்டு திரும்பக் கைப்பற்றுவேன்! இப்போதே சோதித்துப் பார்க்கலாம்!" என்று சின்னப் பழுவேட்டரையர் சொல்லிக் கொண்டே கத்தியின் பிடியில் கையை வைத்தார்.

பெரியபழுவேட்டரையர் தம் தம்பியைக் கையினால் மறித்து, "தம்பி! வாள் எடுக்கும் சமயம் இது வன்று! சக்கரவர்த்தியின் விருப்பத்தின்படி நாம் இங்கே வந்திருக்கிறோம்!" என்றார்.

"அண்ணா! கோட்டைக்குள் புகுந்ததும் இவர் நம்மைச் சிறையிடமாட்டார் என்பது என்ன நிச்சயம்? சக்கரவர்த்தியின் கட்டளையை எதிர்பாராமல் திடீரென்று கோட்டையைத் தாக்கிக் கைப்பற்றியவரை எப்படி நம்பச் சொல்கிறீர்கள்!" என்று கேட்டார் சின்னப் பழுவேட்டரையர்.

"இவரை நம்பித்தானே நம்முடைய பெண்டு பிள்ளைகளையெல்லாம் இந்தக் கோட்டையிலே விட்டு விட்டு நீ வெளியேறினாய்? இளவரசர் மதுராந்தகரையும் விட்டு விட்டுக் கிளம்பினாய்!" என்றார் பெரியவர்.

"அது தவறோ என்று இப்போது சந்தேகப் படுகிறேன். மதுராந்தகருக்கு மட்டும் ஒரு சிறு தீங்கு நேர்ந்திருக்கட்டும், கொடும்பாளூர்க் குலத்தை அடி வேரோடு அழித்து விட்டு மறுகாரியம் பார்ப்பேன்!" என்று இரைந்தார் சின்னப பழுவேட்டரையர்.

இதுவரையில் அலட்சியமாகப் பேசி வந்த சேநாதிபதி பூதி விக்கிரம கேசரிக்கு இப்போது கடுங் கோபம் வந்து விட்டது! அந்த இடத்தில் ஒரு பெரிய விபரீதமான மோதல் அடுத்த கணமே ஏற்பட்டிருக்கக் கூடும்.

நல்ல வேளையாக, அந்தச் சமயத்தில் கோட்டை வாசலில் ஏதோ கலகலப்பு ஏற்பட்டது. எல்லாருடைய கவனமும் அங்கே சென்றது.

சற்று முன்னால் முதன் மந்திரி அநிருத்தர் தம்மைச் சமிக்ஞையினால் அழைத்த ஆழ்வார்க்கடியானிடம் சென்றிருந்தார். அவன் ஏதோ அவரிடம் இரகசியச் செய்தி கூறினான். அதைக் கேட்டு விட்டு அவர் பழுவேட்டரையர்களும் பெரிய வேளாரும் நின்ற இடத்தை அணுகி வந்தார். வரும் போது, சின்னப் பழுவேட்டரையர் மதுராந்தகத் தேவரைப் பற்றிக் கூறிய வார்த்தைகள் அவர் காதில் விழுந்தன.

"தளபதி! இளவரசர் மதுராந்தகரைப் பற்றி என்ன கவலை? அவருக்கு யாராலும் எவ்விதத் தீங்கும் நேரிடாது. சற்று முன்னால் கூட மதுராந்தகத் தேவரும் அவருடைய அன்னை செம்பியன் மாதேவியும் கோட்டைக்கு வெளியே சென்றார்கள். திருக்கோயிலுக்குப் புஷ்பகைங்கரியம் செய்யும் சேந்தன் அமுதனைப் பார்க்கப்



அருள்வாக்கு

அநேகம் பேர் எதை வ்ருத்தியாக (ஜீவனோபாயத் தொழிலாக) வைத்துக் கொண்டிருக்கிறார்களோ, அதையே ஸம்பாத்யமில்லாமல், கொஞ்சம் இலவசமாகவும் செய்ய வேண்டும் என்பது என் ஆசை. முடிகிற தொழில்களில் உத்தியோகஸ்தர்களும் கூட ஃப்ரீ ஸர்வீஸ் பண்ண வேண்டும்.

யல்லபஸே நிஜ கர்மோபாத்தம்
வித்தம் தேந விநோதய சித்தம்

என்று ஆச்சாரியாள் (பஜகோவிந்தத்தில்) சொல்லியிருக்கிறார். அதாவது தனக்கென்று ஏற்பட்ட தொழிலால், என்ன ஸம்பாதிக்கிறாயோ, அதனால் (உடம்பை வளர்த்துக் கொள்வது மட்டுமின்றி தான தர்மங்கள் பண்ணி) உள்ளத்தையும் உயர்த்திக் கொள்' என்கிறார்.

நீ ஒரு டாக்டரா? நீ ஃபீஸ் வாங்கிக் கொண்டு வைத்தியம் பண்ணுவதும் பரோபகாரம்தான். ஆனால் இதில் உனக்கே ஸ்வயோபகாரமான ஆத்ம சுத்தி கிடைக்காது. அதுமட்டுமில்லை. தவிர்க்க முடியாமல் சில பேர் 'ஸிக் லீவு' கேட்கிறபோது நீ பொய் ஸர்டிபிகேட் தரும்படி ஆகியிருக்கலாம். இப்படியே பொய்யாக 'மெடிகல் ஃபிட்னெஸ் ஸர்ட்டிபிகேட்'டும் சில பேருக்குக் கொடுத்திருப்பாய். இதனாலெல்லாம் ஆத்மசுத்தி பெறாதது மட்டுமில்லாமல் அதில் புது அழுக்கும் படிந்திருக்கும். தியாக ஸேவைதான் இந்த அழுக்கை அலம்பிவிட முடியும். ஆகையால் தினமும் ஓர் ஏழைக்காவது இனாமாக வைத்தியம் பண்ணு.

இப்படி அவரவரும் ஏதாவது ஒரு இனுஸில் தனித்த முறையில் தங்கள் தொழிலைக் கொண்டு உபகாரம் பண்ண முடியும். கார்யத்தால், திரவியத்தால் ஒன்றுமே பண்ண முடியாவிட்டாலும், குறைந்த பக்ஷம் திருமூலர் சொன்னாற்போல், "யாவர்க்கும் இன்னுரை" என்றபடி பிரியமாகப் பேசிக் கஷ்டத்தில் ஆறுதல் தருகிற உதவியையாவது பண்ணுங்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

போயிருந்தார்கள்...." என்று முதன் மந்திரி கூறுவதற்குள் காலாந்தக கண்டர் குறுக்கிட்டார்.

"ஆமாம்; தாயும் மகனும் கோட்டைக்கு வெளியே வந்தார்கள். ஆனால் தாய் மட்டுந்தான் கோட்டைக்குள் திரும்பிச் சென்றார்!" என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

"ஆகா! அது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்றார் முதன் மந்திரி.

"முதன் மந்திரி! உங்களிடம் மட்டுந்தான் கெட்டிக்கார ஒற்றர்கள் உண்டு என்று நினைத்தீர்களா? வெளியே வந்த மதுராந்தகத் தேவர் திரும்பக் கோட்டைக்குள்ளே போகவில்லை. அதன் காரணத்தை நான் அறிய வேண்டும்!" என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

முதன் மந்திரியின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. அதே சமயத்தில் கோட்டை வாசலில் "இளவரசர் மதுராந்தகத் தேவர் வாழ்க! வாழ்க!" என்ற கோஷங்கள் எழுந்தன.


எல்லாரும் கோஷங்கள் வந்த அந்தத் திசையை ஆவலோடு நோக்கினார்கள்.

கோட்டை வாசலுக்குள் பிரவேசித்துக் கொண்டிருந்த யானையின் மீது இளவரசுக் கிரீடமும் பிற ஆபரணங்களும் அணிந்த 'மதுராந்தகர்' வீற்றிருந்தார்.

யானைக்குப் பக்கத்தில் மூடு பல்லக்கு ஒன்று ஊர்ந்து சென்றது.

"தளபதி! மதுராந்தகத் தேவர் கோட்டைக்குள் திரும்பிப் போவதற்குச் சிறிது காலதாமதம் நேர்ந்தது. வாணி அம்மையின் மகன் சேந்தன் அமுதன் குதிரையிலிருந்து கீழே விழுந்து படுகாயமுற்றிருக்கிறான். அவனைப் பல்லக்கில் ஏற்றிக் கோட்டைக்குள் அழைத்து வரும்படியாகச் செம்பியன் மாதேவி சொல்லி விட்டு முன்னால் சென்று விட்டார். அன்னையின் விருப்பத்தை மகன் நிறைவேற்றி வைக்கிறார். அமுதனைப் பல்லக்கில் ஏற்றிக் கொண்டு தாம் யானை மீது செல்கிறார். விரைவிலே மகுடாபிஷேகம் நடக்கும் போது, பட்டத்து யானை மீது ஊர்வலம் வரவேண்டியிருக்குமல்லவா? அதற்கு இப்போதே ஒத்திகை செய்து கொள்கிறார்!" என்றார் முதன் மந்திரி அநிருத்தர்.

(தொடரும்)



ராஜாவுக்குள் ஒரு சின்னப்புறா

"யார்ராவன்!"

"நான்தான்."

"நான்தான்னா, யாரு? களணைக் கந்தையா மகனா?"

"ஆமா மாமா!"

"என்ன கருக்கல்ல இந்தப் பக்கம்?"

இவரிடம் என்னத்தைச் சொல்வது. உண்மையைச் சொன்னால் என்ன சொல்வாரோ. இது என்ன கருக்கல்ல வம்பாப் போச்சு என்று நினைக்க ஆரம்பித்து விட்டான். 'வேங்கடநாயகம் வண்டிப் பந்தயம் ஓட்டுவதை நிறுத்தி விட்டாராம்.' ஊரில் எந்த பக்கம் திரும்பினாலும் இதே பேச்சாக இருக்கும் போது தான் வண்டிப் பந்தயம் பார்க்கப் போவதாக அதே வேங்கடநாயகத்திடம் எப்படிச் சொல்வது.....?

இந்த வட்டாரத்தில் வேங்கடநாயகத்தின் பெயர் தெரியாதவர்கள் வேண்டுமானால் இருக்கலாம். ஆனால், பால் குடிக்கின்ற குழந்தை கூட 'காத்தவராயன்' என்றும், 'மதுரை வீரன்' என்றும் அவருடைய காளைகளின் பெயரைச் சொல்லும். காட்டுக் கோட்டை வேங்கடநாயகத்தின் மாடு ஓடுகிறது என்றால் கூனன் கூட நிமிர்ந்து நிற்பான்; பார்வையில்லாதவன் கூடப் பார்க்க வருவான்!

"பூமி சுத்துவதை நிறுத்தினாலும் என் வண்டியிலே சக்கரம் சுத்தறது மட்டும் நிற்காது" என்று சொன்னவரா இப்படிச் சப்தமில்லாமல் நிறுத்தி விட்டார்! அவரில்லாத இந்த விளையாட்டும் ஒரு விளையாட்டா?

வண்டி ஓட்டுவதில் அவருக்கு இருந்த ஒரு கம்பீரம் வேறு யாருக்கும் வர முடியாது. ரத்தக் கலரில் கால் சட்டையும், கைப் பனியனுமாக மீசையை முறுக்கிக் கொண்டு கால்களை மடக்கி வண்டியில் உட்காரும் போது, எட்டு மாதக்காரி பார்த்தாள் என்றால் அப்பவே அவளுக்குச் சுகப் பிரசவந்தான்! அவர் முகத்தில் அப்படி ஒரு கம்பீரம் இருக்கும்.

ஒரு பந்தயத்திலே 'எள்ளு போட்டா எண்ணெய் எடுக்கலாம்' – அவ்வளவு கூட்டம். வேங்கடநாயகம் வண்டியில் ஏறி உட்காருவதற்கும் அவருடைய அப்பா இறந்து விட்டார் என்று செய்தி வருவதற்கும் சரியாக இருந்தது.

"சரி இனி இவர் வண்டி ஓடாது இன்னைக்கி நாமதான் மொதல்" என்று நினைத்துக் கொண்டிருந்த 'வெத்து வேட்டு' வீராசாமிக்கும், மத்தவங்களுக்கும் கொடுத்தாரே ஒரு சாட்டையடி! பஞ்சாயத்தார்கள் விசில் ஊதினதும் "ஓ....கோ" என்றாரே பார்க்கலாம். அவ்வளவுதான், அவருடைய

கம்பத்துக்காரியும், செங்கை செவலையும் விமானத்தைக் கூடப் பின் தள்ளிப் பறந்தன!

அவர் கொடி வாங்கித் திரும்பிய போது, அடுத்து வந்த வண்டி கூட அரை கிலோ மீட்டர் தூரம் இடைவெளி விட்டே வந்தது!

பந்தய மாடு வளர்க்கிறதுலே அவருக்குச் சமமா அவரையேதான் சொல்ல வேண்டும். அவருடைய பிள்ளைகளைக் கூட அப்படி கவனிக்க மாட்டார் வேங்கடநாயகம். பத்து வேலி நிலத்துக்கும், இரண்டு அரவை மில்களுக்கும், இன்னும் எவ்வளவோ சொத்திற்கும், சொந்தக்காரர். இட்ட வேலை செய்ய எட்டுத் திசையிலேயும் ஆட்கள் இருக்கிறார்கள்தான். ஆனால், பந்தய வண்டி ஓட்டுவதையும், காளைகளைக் கவனிப்பதையும் மட்டும் தானே தான் செய்வார்.

வண்டியில் ஓடாத நேரங்களில் அந்த மாடுகளை ஒரு ஈ, காக்கா கூட தொட விட மாட்டார். ஆனால், பந்தயத்தில் ஓடும் போது மட்டும் அதுகளுடைய உடம்பில் குத்து வாங்காத இடமாகக் கொம்பு மட்டும் தான் மிஞ்சும். அவருக்கு இந்த விளையாட்டு மேல் அப்படி ஒரு வெறி! அப்படிப்பட்டவர் பந்தயத்தை நிறுத்தி விட்டார் என்றால் எப்படி நம்புவார்கள்?

அவரைத் தோல்வி ஏதும் இப்படிச் செய்யத் தூண்டியிருக்குமோ...? — இல்லையில்லை! தோல்வி கண்டா பயப்படுவார் வேங்கடநாயகம்!

ஒரு சமயம் அவருடைய வண்டி முதலாவதாக வரவில்லை என்று, பூட்டியிருந்த வண்டியோடு மாடுகளை விரட்டி விட்டு விட்டு, முதலாவதாக வந்த மாட்டை மறு பேச்சுப் பேசாமல் ரூபாய் ஐம்பதாயிரம் கொடுத்து வாங்கி வந்ததை, இந்தச் சுற்று வட்டாரமே ஒரு வாரம் பேசியது! அப்படிப்பட்டவரா வெற்றி — தோல்வி பற்றிக் கவலைப்படுவார்? யாருக்கும் காரணம் விளங்கவில்லை.

வேங்கடநாயகம் வண்டி ஓட்டுவதை நிறுத்தி விட்டார் என்று கேள்விப்பட்ட 'போடி' ஜமீன்தார் மாடுகளை நல்ல விலை கொடுத்து வாங்க வந்திருக்கிறார். "இந்த மாடுகளையெல்லாம் உங்களுக்குச் சும்மா கொடுக்கிறதுலே கூட சம்மதம்தான். ஆனால் இந்தக் காளைகளைப் பந்தய வண்டியில் மட்டும் பூட்ட மாட்டேன்னு ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுங்கன்னு கறாராப் பேசியிருக்கிறார். பெரியவருக்கு ஏதோ ஆகி விட்டதென்று வந்திருந்தவர்கள் 'போடி'க்கு ஓடி விட்டார்களாம்.

ஊர்க் கணக்கு — வழக்குப் பார்க்கும் பொழுது "இந்த வீர விளையாட்டை நிறுத்தியதால்தான் ஊர் வரும்படி குறையுது" என்று கணக்குப் பிள்ளை கூறியிருக்கிறார்.

"எதுய்யா வீரம்? ஏன் நீங்க அட்லேறுறது, மல்யுத்தம் நடத்துறது அதை விட்டுட்டு இந்த வாயில்லாச் சீவன்களை வதைக்கிறதுலேதான் உங்க வீரத்தைக் காட்டணுமோ? இதனாலே எத்தனை கோடி நஷ்டம் வந்தாலும் நான் ஒத்தை ஆளா ஏத்துக்கறேன்யா" எனச் சீறி விழுந்திருக்கிறார்.

அது மட்டும் இல்லாமல், பிராணிகள் வதை தடுப்புச் சட்டத்தைக் காரணம் காட்டி எல்லா இடங்களிலேயும் இந்த விளையாட்டை நிறுத்தி விடலாமா என்று சட்ட ஆலோசனை வேறு செய்கிறாராம்! இதெல்லாம் என்ன கூத்து என்றே புரியவில்லை.

"என்ன நான் கேட்ட கேள்விக்கு வார்த்தையில்லாம ஆகாசத்துல மெதக்கிறே!" — வேங்கடநாயகம் மிரட்டியதும் இவன் நினைவுகளிலிருந்து மீண்டான.

"ம்... ம்... என்ன கேட்டிய? வரிக்குடிக்கு வண்டிப் பந்தயம் பார்க்கப் போறேன் மாமா" என்றான்.

"அட, எழவு மவனே! என்ன இப்ப வண்டிப் பந்தயம் வேண்டிக் கெடக்கு!"

"என்ன நீங்களே இப்படிச் சொல்லிட்டீங்க. அதென்ன மாமா, அசோகருக்குச் சண்டை மேலே வந்த சண்டை மாதிரி நீங்க இந்த வீர விளையாட்டை வெத்தா நெனச்சு நிறுத்திட்டீங்க."

"வக்கா! அப்புடிக் கேள்டா ஒரு கேள்விய! ஒரு பய இதுவரை நாக்கு மேலே பல்லு போட்டு இப்படி கேக்கல... அதுலே பாரு அன்னக்கி மட்டும் அப்படி நடக்கலைன்னா, இன்னைக்கும் நான் அந்தச் சித்ரவதையைச் செஞ்சுக்கிட்டுத்தான் இருப்பேன்."

"அப்படி என்ன மாமா நடந்துச்சு?"

"ஆடியிலே நம்ம ஓட்டக் கோயிலு காளிக்குக் கொடை எடுத்தோமுல்ல; அப்ப என் வேலை ஆள் நாகன் மகன் இறந்தானே ஞாபகம் இருக்கா?"

"நல்லாவே இருக்கு. அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?"

"அதான் சொல்லிக்கிட்டு வரேன்ல்ல அதுக்குள்ள ஏன் முந்திரிக் கொட்டைக் கணக்கா துருத்தறே! அவன் மவனுக்குப் பெரிய நோவு கண்டு ஆஸ்பத்திரியில் கெடந்தான்ல, ஆபரேசனுக்குத் தொகையும் பெரிசாவே தேவைப்பட்டுச்சு. அவன் ஒழைச்ச பணம் நம்மகிட்ட இருந்திச்சா, அதோட கொஞ்சம் சேர்த்துக் கேட்டிருந்தான். நானும் 'சரி, நம்ம டிராக்டரிலே போய்க் குடுத்திடுவோம்'னு இருந்தேன். கடைசி நேரத்திலே பாரு — நம்ம பெரிய பய டிராக்டரை எங்கேயோ எடுத்துக்கிட்டுப் போயிட்டான் அப்புறம் கடைசிப் பஸ் வருகிற நேரம் பஸ்

ளைப் புடுச்சுடுவோம்னு ஓடினேன்டா தம்பி... கொஞ்ச தூரந்தான் — என்ன ஓடியும் பஸ்ஸைப் புடிக்க முடியலை. ஆனா பாரு என்னால தாங்கவே முடியல... நெஞ்சுக் கூட வெடிக்கிற மாதிரி ஒரே படபடப்பு. அப்புறம் நேரத்துல பணம் போகாம அவனுக்கு அப்படி — இப்படி ஆனதெல்லாந் தான் ஒனக்குத் தெரியுமே.''

''அதெல்லாம் சரிதான் மாமா உங்கய் யன் தவறிட்டப்பக் கூட பந்தயம் வெரட்டின வராச்சே நீங்க. அப்படியிருக்க, இது என்ன மொட்டத் தலைக்கும் — மொழங்காலுக்கும் முடிச்சுப் போடுறீய?''

''அப்பத்தாண்டா எனக்குள்ள ஒரு பொறி தட்டுச்சி. நாகன் நமக்கு விசுவாசமா ஒழைச்சவன். ஏன் இன்னும் ஒழக்கக் காத் துக்கிட்டிருந்தவன், பணமும் அவனோடது. அதுவுமில்லாம ஓர் உயிரைக் காப்பாத்த நம்மாலே கொஞ்ச தூரம் ஓட முடியலை. ஆனா அந்த வாயில்லாச் சீவன்கள் யாருக் காக, எதுக்காக, ஒரு நோக்கமும் இல்லாம, எந்தவிதப் பயனும் இல்லாம, ஓடணும்? அதுவும் ரெண்டு நாள் ஒரு பொட்டுக் கூளங் கூட வாயில் வைக்காம ஓடணும்? எங் கழுத்திலே மாலை விழுணுங்கறத்துக்காக, அதுகள் ஏன் தங்கள் கொடலை மா(ௌ)லயாப் போட்டுக்கணும்? இதுலதான் என் வீரம் வெளிப்படுதா? இப்பச் சொல்லு இந்த சித்திரவதை சரிங்கரியா?''

வேங்கடநாயகத்தின் இரும்பு நெஞ்சை மட்டுமே பார்த்திருந்தவன் அவருடைய மூடியிருந்த நெஞ்சுக்குள் இருப்பது தெரிந் ததும் கசிந்து போனான்.



டென்ஷனை வளர்த்த டெஹ்ரி அணை

டெஹ்ரி அணை கட்டப்படுமேயானால் மேற்கு இமயமலையின் சில பகுதிகள், நில அதிர்வுகளால் பாதிக்கப்படும் வாய்ப்பு இருக்கிறது. இதனால் இங்கு கட்டப்படும் அணையே கூட பாதிக்கப்படலாம். இதற்கு விஞ்ஞான ரீதியான ஆதாரமும் உள்ளது. மேலும், அணைப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்தாலும், அந்தப் பகுதியின் கலாசாரமே அழிந்து போகும். இயற்கை அழகு கொஞ்சும் இந்தப் பகுதியின் நில அமைப்பு மாறுபடும்.

இந்தக் காரணங்களால் கடந்த பல வருடங்களாகவே அணை கட்டுவதை எதிர்த்துக் குரல் கொடுத்து வருகிறார் சுந்தர்லால் பகுகுணா. சுற்றுப்புறச் சூழலில் அக்கறை கொண்டவர்கள் இவர் பின்னால் திரண்டு நிற்கிறார்கள்.

இமயமலை கார்வால் மலைப் பகுதியில், பாகீரதி ஆறும், பிலங்கனா ஆறும் சங்கமிக்கும் இடத்தில் அணை கட்டலாம் என்று திட்டம் போடப்பட்டது 1972 — ஆம் ஆண்டில். கிட்டத்தட்ட 800 அடி உயர அணை கட்ட திட்டம் போடப்பட்டது. அணை முழுதும் கட்டி முடிக்கப்பட்டால் ஆயிரம் மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வது மட்டுமல்லாமல் மூன்று லட்சம் ஹெக்டேர் நிலப்பகுதி பாசன வசதி பெறும். அன்று 200 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்ட இந்தத் திட்டத்தை இன்று பூர்த்தி செய்வதானால் 1200 கோடி ரூபாய் செலவாகும். திட்ட அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் மின் உற்பத்தி, பாசன வசதி என்று சொல்லிக் கொண்டு, அணை வேலையைத் துரிதப்படுத்த நினைத்தார்கள்.

ராஜீவ் காந்தியின் தலைமையிலிருந்த அரசு, திட்டத்தைத் தொடர்ந்து நடத்த முடிவு செய்தது. இதனை எதிர்க்க மக்களிடையே ஆதரவு தேடும் பணியில் இறங்கினால் சுந்தர்லால் பகுகுணா.

இதற்கிடையில், தேசிய முன்னணி அரசு பதவிக்கு வந்தது. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு இலாகாவின் அனுமதி இல்லாமல் டெஹ்ரி அணை கட்டப்படுவதால், அதற்கு நிதி உதவி கிடையாது' என்று மத்திய நிதி இலாகா அறிவித்தது. உடனே திட்ட வல்லுனர்களும், அதிகாரிகளும் பகுகுணா, மேனகா காந்தி ஆகியோரை அழைத்து மாநாடு நடத்தினார்கள். அந்தக் கூட்டத்தில் மாற்று யோசனை தெரிவிக்கப்பட்டது. பிரும்மாண்ட அணைக்குப் பதில் மூன்று சிறு நீர்மின் திட்டங்கள் ஏற்படுத்தலாம்'' என்று யோசனைகள் சொல்லப்பட்டன.

புதிய யோசனைகள் ஏற்கப்பட்டால் ஓரளவுக்குச் சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கப்படலாம்; ஆனால் ஏற்கெனவே அணையில் போடப்பட்டுள்ள பல கோடி ரூபாய் மக்களின் வரிப் பணத்துக்குப் பாதுகாப்பு இல்லை. பாகீரதி நதி வெள்ளத்தோடு போக வேண்டியதுதான்!

— தில்லப்பா

இப்போது, விம் ஏறக்குறைய பாதிவிலையிலே...



பேரச் சலுகை அளிக்கும் (கேரிபேக்) தூக்குப் பை.



இப்போது ஏறக்குறைய பாதி விலையில் கிடைக்கிறது நீங்கள் விரும்பும் விம் ... பணமிச்சம் தரும் (கேரி பேக்) தூக்குப் பைகளிலே !

ஒப்பிட்டுப் பாருங்களேன்

பேக்	100 கிராம் விலை
500 கிராம் கேனிஸ்டர்	135 பைசா
2.5 கிலோ கேரிபேக் பை	75 பைசா

உபயோகிப்பிலேயோ மேலும் சிக்கன லாபம் கிடைக்கிறது இதில் உங்களுக்கு. ஒரு துளியளவு விம் உபயோகித்தாலே நன்கு சொறிந்து பிசுக்குகள் விலக என வெளிப்படுகிறது கறைகளுக்காக ... அதிகப் பாத்திரங்களைத் துலக்குகிறது ஒளிமினுக்க.

விரைந்தோடி இன்றே வாங்குவீர் புதிய விம் கேரிபேக் உங்கள் தேவைக்கேற்ற அளவிலே (தேர்ந்தெடுக்க கிடைப்பவை 500 கிராம், 1 கிலோ, அல்லது 2.5 கிலோ பேக்குகள்)

ஒரு துளி விம் தரும் துலக்கம் அதிகப் பாத்திரங்கள் ஒளிமினுக்கும்



தமிழின் சுவை; தமிழே சுவை!

கவிதைக்குள்

ஒரு கவிதை

மீனாட்சியம்மையைச் சிறு பெண்ணாகத் திருமலை நாயக்கர் சபையில் கொண்டு வந்து நிறுத்திய பெருமை உடைய, அருளாளர் குமரகுருபர சுவாமிகள். அவர் வழங்கிய ''மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்'' பாடல்களில் வருகைப் பருவத்தில் அமைந்த ஒரு பாடல் மிகவும் இனிமையும், பக்திச் சிறப்பும் பெற்றது.

அம்மை, உவப்புடன் எழுந்தருளியது அவர் தம் பக்தியின் மேன்மையாலா அல்லது அவர் பாடிய அவ்வழகுத் தமிழ் பாடலுக்காகவா என்று நம்மைத் திகைக்க வைக்கும் ஒப்பற்ற பாடலாகும் அது.

> **''.............. நறைபழுத்த**
> **துறைத் தமிழின் ஒழுகுநறுஞ்**
> **சுவையே''**

என்ற வரி, இப் பாடலுக்கே திலகமாக விளங்குகிறது.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழின், ''நறுஞ் சுவையே'' என்று புலவர் அம்மையை அழைக்கிறார்.

நுட்பமான வடிவங்களுடைய வண்ண வண்ண மின் விளக்குகள் ஒளியினை ஈந்து அழகும், பாராட்டும் பெறலாம். ஆயினும், ''மின்சாரம்'' என்னும் உயிரோட்டம் அவற்றில் பாய்ந்து ஒளிரச் செய்யாவிடில், அவை பயனற்றவையாகி விடுகின்றன. 'தேன்', தன் இனிப்பான சுவையால்தானே உயர்வு பெறுகிறது? இல்லையெனில் அதுவும் சாதாரண நீர் போன்றதாகிவிடுமன்றோ? அது போன்றே, தமிழின் ''ஒழுகு நறுஞ்சுவையே'' என்று அம்மையை அழைத்தலால், உமையம்மையே தமிழின் உயிரோட்டமாக நின்று, அதனைக் கற்றுத் தெளிவோருக்குச் சுவை யூட்டி, மகிழ்ச்சி தந்து அருள் புரிகிறாள் என்ற இப் பாடலின் கருத்து எண்ணி எண்ணி இன்புறத்தக்கது.

ஆம்பிரத்துடன் எழுந்து நிற்கும் மலைகள், கலீரென்று சிரித்துக் கொண்டே, வளைந்து வளைந்து செல்லும் நதிகள், இவையெல்லாம் மனிதனுக்கு என்றென்றும் நிறைவான இன்பத்தை நல்குபவை. அது போன்றே, தமிழ் மொழியைக் கற்பதும், கேட்பதும், பேசுவதும் மனத்திற்கு என்றென்றும் இன்பச் சுவை நல்குவது. அச் சுவையே உமையம்மை எனில், தமிழே உமையம்மை. ''நீ தமிழுக்குச் சுவையாக நின்றாய், 'தமிழ்' என்னும் சுவையாகவும் நின்றாய்,'' என்று உமையை வர்ணித்ததன் மூலம், 'தமிழே தெய்வம்' என்று நம்மை வணங்க வைத்து விட்டார் புலவர் பெருமகனார்.

இப் பாடலுக்கு, உயிர் கொடுத்தது போல, அம்மை சிறு பெண்ணாக ஓடி வந்ததே, இதன் சிறப்பிற்குச் சான்று.

— கோ. வெ. ம. கிருத்திகா,
கோபிசெட்டிபாளையம்.

மங்கையர் மலர்

ஏப்ரல் '96

- குடும்பநல ஆலோசனை செயல்பாட்டுக் குழு

  — மகளிர் துயர் நீக்க மங்கையர்மலரால் துவக்கப்பட்டுள்ள குழுவின் விவரங்கள்

- கையில் குழந்தையோடு போஃபர்ஸ் போராட்டம்

  — சித்ரா சுப்ரமணியம் பேட்டி



- உங்களுக்காகச் சில விவரங்கள்

  — முதுகுவலி தீர சிவசங்கரியின் சிறப்புக் கட்டுரை

- யௌவன கர்வம்

  — மஞ்சுளா ரமேஷ் எழுதும் தொடர்கதை

- ஐந்து நிமிடத்தில் அவசரச் சிற்றுண்டி!

12

வையவன்

இருபத்திநாலு மணி நேரம் தான் ஒரு குற்றம் சாட்டப்பட்ட நபரைப் போலீஸ் லாக்கப்பில் வைத்துக் கொள்ளலாம். கௌதமுக்கு அது தெரியும். தேவைப்பட்டால் மாஜிஸ்டிரேட்டின் விசேஷ அனுமதியோடு அது நீடிக்கலாம். கௌதமுக்கு அதுவும் தெரியும்.

காலையில் அவன் ஸ்டேஷனுக்குப் போகக் குளித்துச் சட்டை மாற்றிக் கொண்டு சைக்கிளைத் தெருவில் இறக்கும்போதே நீலாம்பர முதலியார் குரல் கொடுத்தார்.

''போலீஸ் டேசனுக்கா?''

அவன் வியப்போடு திரும்பினான். இவருக்கு எப்படித் தெரியும்?

அவன் ஆச்சரியத்தைரசித்துக்கொண்டே ''ஆதியை லாக்கப்பிலேர்ந்து இட்டாரத் தானே?'' என்று கேட்டார்.

கௌதம் பேசாமல் தலையசைத்தான்.

''பிரயோஜனமில்லே!''

முதலியார் உதட்டைப் பிதுக்கிக் காட்டினார்.

''ஏன் தாத்தா?''

''நேத்திக்கே தெரிஞ்சிருக்கணுமே!'' அவன் முயற்சி இவருக்குத் தெரிந்திருக்கிறது.

''ஒங்களுக்கு எப்படி.....?'' அவன் திகைப்புக்கு அவர் முற்றுப்புள்ளி வைக்கிற மாதிரி சொன்னார்:

''இது விட்டலாபுரம் தம்பி! நீ வூட்டை விட்டு எறங்கி பஸ் ஸ்டாண்டு போறதுக்குள்ளே நீ எந்த காரியத்துக்குப் போறே, எந்த பஸ்ல ஏறப் போறேன்ற நூஸ் டிரங்கு ரோடுக்குப் பூடும்.''

அவர் சொல்வது உண்மைதான். எல்லா கிராமங்களையும் போல் விட்டலாபுரத்திலும் பொழுதுபோக்குப் பஞ்சம்.

''இப்ப நீ போயி ஒரு புண்ணியமுமில்லே! ஆதியைக் காலம்பற சப்ஜெயிலுக்குக் கூட்டிட்டுப் போய்ட்டாங்க.''

எதிர்ச் சக்திகள் சுறுசுறுப்பாக இயங்குகின்றன என்று பளிச்சென்று புரிந்தது.

அவன் சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி விட்டுத் திண்ணையில் உட்கார்ந்தான்.

இன்ஸ்பெக்டர் இருதயராஜ் நினைவு வந்தது. அவர் விலை போகிறவர் அல்ல. என்ன நடந்தது? ஏன் இந்த அவசரம்? வக்கீலைப் பார்க்கலாமா?

''புரியலியா தம்பி?'' முதலியார் பக்கத்துத் திண்ணையிலிருந்து கேட்டார்.

அவனுக்குப் புரிந்திருந்தது. காட்டிக் கொள்ள விரும்பவில்லை. அதுதான் பாதுகாப்பானது.

''உங்களுக்கு ஏதாவது தெரிஞ்சா சொல்லுங்களேன் தாத்தா.''

''பெரிய கை மோதுது!''

அவன் திரும்பி அவர் முகத்தைப் பார்த்தான்.

''நீ உஷாரா இரு. அவ்வளவுதான் சொல்வேன்.''

சில்லிட வைக்கும் எச்சரிக்கை அது. கௌதம் சாந்தமாகப் புன்னகை செய்தான்.

''என்ன இருந்தாலும் நீ வெளியூர்க்காரன்!''

கௌதம் புன்னகையை மேலும் நீட்டித்தான்.

''சிரிக்கறே, உன் இஷ்டம்!''

முதலியார் அவனை மேலும் ஆழம் பார்ப்பது போல் தோட்டமிட்டார். அவருக்குக் கௌதம் மீது பிரியமுண்டு. அவன் நலனிலும் ஒரு நாட்டமுண்டு.

''கெழம் அநாவசியமா பிகில் ஊதுதுன்னு நெனக்கிறே இல்லே?'' அவரே கிண்டினார்.

''இல்லே தாத்தா.''

''நெஜம்மா சொல்லு!''

''நெஜம்மா!''

அவர் இடுப்பு வேட்டியில் மடித்து வைத்திருந்த பொடி டப்பாவை எடுத்து ஒரு சிட்டிகை ஏற்றிக் கொண்டார்.

''இங்கே ஒண்ணும் பண்ண முடியாது! டவுனுக்குப் போயி வக்கீலைப் பாரு'' பட்டணம் பொடியின் உற்சாகம் அவர் கண்களில் பளிரிட்டது.

''யோசிக்கிறேன் தாத்தா!''

அவனுக்கே வந்த யோசனைதான். ஆனால் முதலியாரிடம் எதிர்காலத் திட்டம் விவரிக்க வேண்டிய அவசியமில்லை. எதிர்ச் சக்தியின் சுறுசுறுப்பு அவனுக்குப் பட்டை தீட்டியது.

அவன் திண்ணையிலிருந்து இறங்கி சைக்கிள் ஸ்டாண்டைத் தள்ளினான்.

''எங்கே போப் போறே?''

''போஸ்ட் ஆபீஸுக்கு. தபால் உண்டான்னு பார்க்கணும்.''

''உஷாரா இரு!''

கௌதம் நன்றிப் புன்னகையோடு தலையசைத்தான்.

உண்மையிலேயே போஸ்ட் ஆபீஸ் போக வேண்டும். அன்றாட அலுவலில் அதுவும் ஒன்று. பம்ப் ஷெட் ரிப்பேரில் ஐம்பது நூறு என்று கிடைக்கிற தொகையை அஞ்சல் நிலையச் சேமிப்பில் போட்டு வை என்பது சவுந்தரம்மாளின் கட்டளை. மீறி மீறி அங்கே வீட்டுச் செலவு செய்து விட்டு அவன்

கண்டிப்பிற்குப் போக்குக் காட்ட ஏதாவது போட்டு விட்டு, பாஸ் புத்தகத்தைக் காட்டு வான்.

இன்றைக்குப் போட வேண்டாம். எடுக்க வேண்டும். சைக்கிள் ஓவராயிலிங்குக்குப் பாக்கி. வக்கீலைப் பார்க்க டவுனுக்குப் போகச் செலவு.

அஞ்சல் நிலையத்திற்கு வெளியே காத்திருந்த கூட்டத்தை விலக்கி ஒரு வி. ஐ. பி. மாதிரி வெளியே வந்தார் போஸ்ட்மேன்.

அவர் பார்வை அவன் மேல் விழுந்தது.

''கௌதம். ஒனக்கு ஒரு தபால் இருக்கு." என்று சொல்லி விட்டு, திண்ணையில் உட்கார்ந்தார். அதற்குள் ஈ மொய்த்த மாதிரி கூட்டம் அவரைச் சூழ்ந்தது. கூட்டம் கலையட்டும்.

கௌதம் படியேறி அஞ்சல் நிலையத்தில் நுழைந்தான். பாரம் வாங்கினான். பாஸ் புத்தகத்தைத் திறந்து இருப்பைப் பார்த்தான். 213 ரூபாய்.

பதின்மூன்றைக் கணக்கில் விட்டு விட்டு இருநூறுக்குப் பாரம் பூர்த்தி செய்தான். சைக்கிள் ஷாப்புக்கு நூறு போனால் மீதி நூறு போதுமா? பார்க்கலாம்.

பாஸ் புத்தகத்தையும் பாரத்தையும் 'கிளர்க்கிடம் நீட்டினான்.

''கொஞ்சம் உட்காருங்க ஸார்!''

வெளியே அவனுக்கு ஒரு தபால் காத்திருக்கிறது.

திரும்ப முனைந்த போது ஒரு கை தோளைத் தொட்டது. நிமிர்ந்தான்.-மூர்த்தி. விட்டலாபுரத்து அரசியல்வாதி. குட்டையைக் கலக்கினால் ஒழிய மீன் பிடிக்க முடியாது என்று முடிவுக்கு வந்தவர்.

அவர் அதிருஷ்டம் நிறையக் குட்டைகள் கலங்கின. மீன்களைப் பிறர் பிடித்துக் கொண்டார்கள். போன ஊராட்சித் தேர்தலில் படாதபாடுபட்டு அவர் வார்டு கவுன்சிலர் என்ற வெற்றுப் பதவி பெற்றதுதான் மிச்சம்.

''எங்க தம்பி, ரொம்ப நாளா ஆளைக் காணோம்?''

''இங்கே தானே தலைவரே இருக்கேன்."

தலைவரே என்று விளிக்கப்பட்டதில் அவருக்குப் பரம திருப்தி. தோள் மேல் கை போட்டு ''உங்கிட்ட ஒண்ணு பேசணுமே'' என்றார்.

கௌதமின் உள்ளுணர்வில் ஒரு சிவப்பு வெளிச்சம்.

''பேசலாமே! போஸ்ட்மேன் ஒரு தபால் இருக்குன்னாரு. வாங்கிட்டு வந்துடட்டா?"

''ஜனம் கலைய இன்னும் நேரமாவும் இதா எதிர்த் திண்ணையிலே உக்காரலாம் வா.''

அவன் அவரை வேறு வழியின்றிப் பின் தொடர்ந்தான். திண்ணையில் உட்கார்ந்ததும் அவர் நேரடியாக விஷயத்திற்கு வந்தார்.



''மாசிலா மர்டர் கேஸ்ல ஆதியைப் புடிச்சிணு பூட்டாங்களாமே. கேள்விப்பட்டேன்!''

''ஆமாங்க தலைவரே!''

''நீ கூட ஆதியை ஜாமீன்ல எடுக்க முயற்சி பண்ணதாச் சொன்னாங்க.'' அவர் பார்வை அவனைத் துருவிற்று.

''முயற்சி பண்ணினேன்! இன்ஸ்பெக்டர் நான் பெய்லபில்னுட்டாரு.''

''அவரு கெடக்கிறாரு! இதெல்லாம் மயிலே மயிலேன்னா எறகு போடற காலமில்லே. போராடணும் தம்பி. போராடணும். கொடி பிடிக்கணும். கோஷ்டம் போடணும். கலெக்டர் ஆபீஸ் முன்னாடி மறியல் பண்ணணும். உண்ணாவிரதம் ஒக்காரணும்.''

சொல்லுகிற ஐட்டங்களில் எதிலாவது கௌதம் மயங்குகிறானா என்று உற்றுக் கவனித்துக் கொண்டே மூர்த்தி மேலும் உற்சாகமானார்.

''தனியா ஒண்டிக் கட்டையா இங்கே எதையும் சாதிக்க முடியாது தம்பி. அதுவும் அக்கிரமத்தைத் தட்டிக் கேட்க முடியாது.''

மூர்த்தி இதை அக்கிரமம் என்று முடிவு கட்டியிருப்பதை கௌதம் அடிக்கோடிட்டுக் கொண்டான்.

''நான் அப்பவே இதை அந்த மாசிலா கையிலே சொன்னேன். அவன் ஏமாளி. கவனிக்கலே. இப்ப என்ன ஆச்சு?''

கௌதம் போஸ்ட்மேனைச் சுற்றியுள்ள கூட்டம் சிறிது கரைந்ததை இங்கிருந்தே நோட்டமிட்டான்.

''எதுக்கும் ஒரு கட்சிப் பாதுகாப்பு. தொண்டர்கள் சப்போட் வேணும் தம்பி.''

பாவம் மூர்த்தி என்று நினைத்தான். அவர் நகரங்களுக்குப் போக வேண்டியவர். ஒருவேளை இவரை விட வல்லவர்கள் அங்கிருக்கலாம். அப்போது என்ன செய்வார்?

மனம் எண்ணத்திற்கு எதிர் அலை எழுப்பியது.

எனவே நீதியும் நியாயமும் அரசியலின் கருணைப் பிச்சை இருந்தாலொழிய உயிர் பிழைப்பதற்கில்லை என்கிறாரா? முகா முக்கு எதிர் முகாம் போடு. கூக்குரல் கொடு. கொடி பிடி. கயிறு இழு!

ஒவ்வொரு நியாயத்துக்கும் நீதிக்குமா? ஆமாம். சாத்தியமா? முடிந்தவரை. முடியாவிட்டால்? விட்டுத் தள்ளு. அடுத்த முறை பார்த்துக் கொள்வோம். வாய்ப்புக்கென்ன, உருவாகிக் கொண்டே இருக்கும். பாவம் மூர்த்தி! இந்த விஷயத்திலாவது மேடை வெளிச்சத்துக்கு வரத் துடிக்கிறார். இந்த தடவையும் மீன் இவருக்குக் கிடைக்காது.

மனசுக்குள் அவருக்கு 'பெப்பே' சொல்லும் ஆசை உந்தியது. தொடர்ந்து ஒரு விவரிக்க இயலாத சோகம். மூர்த்திக்காக வல்ல. ஊரும் உலகமும் ஓடும் ஓட்டத்திற்காக.

கௌதம் மனத்தின் கடிவாளத்தைத் தொட்டான். சோகம் மகானுபாவர்களுக்கு உரியது.

இன்னும் நான் அத்தனை முதிரவில்லை. கொடியும் கோஷமும் மூர்த்தியின் பிறப்புரிமை. நான் ஒரு போட்டி அல்ல.

எனக்கு வேண்டியது ஆதியின் விடுதலை. அந்த ஊமைத்தாயின் ஆனந்தக் கண்ணீர். ஓடும் காலத்தின் தேர்ச் சக்கரம் விலை மதிக்க முடியாத இந்த இரண்டை நசுக்கி விடாமல் மீட்டுக் கொண்டால் போதும். இவ்வளவு சுயநலமா? அது தெரியாது. தெரிந்தது. என் எதிரே நீளும் பாதையில் எனக்கு எதிரே நிற்கிற பாத தூரம். உடனடி தூரம். உருத்தெரியும் தூரம். இதுதான். இவ்வளவு கிட்டப்பார்வையா? நோ கமெண்ட்ஸ்.

தூரத்திலிருந்து அவனைப் பார்த்த போஸ்ட்மேன் அருகில் வரச் சொல்லி, சமிக்ஞை செய்தார்.

''வர்றேன் தலைவரே. போஸ்ட்மேன் கூப்பிடறாரு'' உதவி வேணும்னா ஒங்ககிட்டே வராமயா போய்டுவேன்?''

அவன் மூர்த்திக்கு — அவரது அரசியல் அழைப்புக்கு — நன்றி — வேண்டாம்! சொல்கிறாற் போல் கைகூப்பி விட்டு எழுந்தான்.

மூர்த்திக்குச் சப்பிட்டு விட்டது.

தீபால் கவர். மணிலா உறை. கூட்டுறவுச் சர்க்கரை ஆலை முத்திரை குத்தியிருந்தது.

''என்னா கௌதம் தித்திப்பான செய்தியா?'' போஸ்ட்மேன் கேட்டதை நாலைந்து பேர் கவனித்தனர். அவன் கவரை மீண்டும் திருப்பிப் பார்த்தான். புல்மேடு போய் அங்கிருந்து ரீ—டைரக்ட் ஆன சிவப்பு மசி.

''சர்க்கரை ஆலையிலேர்ந்துதான் வந்திருக்கு.''

''உடைச்சுப் பாரு. தித்திப்பா இருந்தா தித்திப்பு வாங்கிக் குடு'' என்றார் போஸ்ட்மேன்.

உடைத்தான். ஜூனியர் கெமிஸ்ட் பத

''ஏம்பா என்னையே அப்படி உற்றுப் பார்க்கிறே?''

''உங்களை நான் அடையாளம் பார்த்துக்கிறேன்... அடுத்த முறை நீங்க உட்கார்ற டேபிள்லே சட்னி, சாம்பார் தூக்கை வைக்க மாட்டேன்...!''

— அ. தெய்வசிகாமணி.



விக்கு நேர்முகத் தேர்வு.

''இண்டர்வியூ.''

''என்னிக்கு?''

''அடுத்த வாரம்.''

''வேலை கெடைச்சுடும்பா. என்னை மறந்துடாதே'' என்றார் போஸ்ட்மேன். அவர் எப்போதும் அப்படித்தான் விளையாடுவார்.

''உங்களுக்கு ஸ்வீட் பாக்கியை நான் எப்ப தீர்க்கப் போறேனோ?''

''வட்டி வேணும்னா போட்டு வாங்கிக்கறேன்'' சுற்றிலும் நாலு பேர் சிரித்தனர்.

சேவிங்ஸிலிருந்து இருநூறு ரூபாயை வாங்கிக் கொண்டு அவன் சைக்கிள் கடையில் பாக்கியைக் கொடுத்து விட்டு வீட்டுக்குப் போனான்.

டவுன் அதிக தூரம். சைக்கிளில் போக முடியாது. சைக்கிளை வீட்டில் ஏற்றி விட்டு, தான் வர இரவு கூட ஆகலாம் என்று சவுந்தரம்மாளிடம் சொல்ல வேண்டும். தவறினால் அநாவசியமாகக் காத்திருப்பாள்.

சைக்கிளை மிதிக்கும் போது இண்டர்வியூ கவரை எடுத்து, பாக்கெட்டில் வைத்தான்.

இது மாதிரி எத்தனையோ இண்டர்வியூ. திறமை. பட்டம். முதல் வகுப்பு. டென்னிஸ். சான்றிதழ்கள். இவற்றை விடச் சிபாரிசுக்கும் லஞ்சத்திற்குமே முன்னுரிமை. தெரிந்த கதைதான்.

தேதியை நினைவுபடுத்திக் கொண்டான். அடுத்த திங்கள். அதற்குள் ஆதி விவகாரம் முடியுமா? பார்க்கலாம். இழுத்துக் கொண்டு போனால், இண்டர்வியூ முக்கியமில்லை.

எதுவுமே முக்கியமில்லை.

அவன் சாலையிலிருந்து பிரிந்து பாவடி வீதி திரும்பினான். ஒரு டகர வளைவில் வீடு தெரிந்தது. வாசலில் ஒரு புல்லட் நின்றது. துணுக்குற்றுக் கவனித்தான். துளசிங்கத்தின் புல்லட்தான்.

நிதானமாகச் சைக்கிளை மிதித்துக் கொண்டு சென்று வாசற்படி எதிரில் இறங்கினான்.

வீட்டுக்குள்ளேயிருந்து தெரு நடையில் யாரோ ஒரு புது மனிதன் — இளைஞன் வந்தான். பின்னால் சவுந்தரம்மாள்.

''தோ வந்துட்டுதே, உனக்கு நூறு ஆயிசு கௌது'' என்று மனமாரச் சொல்வது போல் சிரித்தாள் சவுந்தரம்மாள்.

''என்ன பெரியம்மா?''

''இவரு அன்னவாசல். மணியக்காரு மச்சான்.''

''வணக்கம்!'' வந்தவன் கை தூக்கினான். பதிலுக்குக் கௌதமும்.

''என்ன விஷயம்?''

''துளசிங்கம் ஐயா ஒங்களைக் கையோட கூட்டிட்டு வரச் சொல்லி வண்டியிலே அனுப்பிச்சாரு.''



''என்னங்க, யோகாசனம் பண்ணினது போதும். இழுத்த மூச்சை விடுங்க; ஒரே புழுக்கமா இருக்கு...''

→ ராதா வாகதேவன்.

வந்தவன் முகத்தையே பார்த்துக் கொண்டு ''என்னையா?'' என்று நம்பாத மாதிரி கேட்டான் கௌதம்.

''ஒங்களைத்தாங்க.''

''என்ன விசேஷம்?''

''மோட்டார் பம்ப் ரிப்பேர் ஆயிடுச்சு.''

கௌதம் ஒரு கணம் யோசித்தான்.

''அப்படியா...? நான் அவசரமா டவுனுக்குப் போகணுமே!''

''இது கொஞ்சம் அர்ஜண்டுங்க!''

''டவுன் வரிக்கும் போய்ட்டு வந்துடறேன். அது ரொம்ப அர்ஜண்டு. அவர்கிட்டே சொல்லுங்க. சாயங்காலமா நானே வர்றேன்.''

''சார் வந்து...''

''ப்ளீஸ். அவ்வளவு அர்ஜண்ட் இல்லைன்னா நான் நீங்க வண்டி போட்டு வந்ததுக்கு வராம போயிடுவனா... அவர்கிட்டே சொல்லுங்களேன். சாயங்காலம் வர்றேன்.''

''சரி... சாயந்திரம் வருவீங்க இல்லே?''

''நிச்சயமா... டவுன்ல வேலை முடிஞ்சதும் நானே வர்றேன்.''

சற்று ஏமாற்றத்துடன் புல்லட் புறப்பட்டது.

''என்ன தம்பி?'' என்று ஆச்சரியமாகக் கேட்டாள் சவுந்தரம்மாள்.

''வந்து சொல்றேன் பெரியம்மா. வர ராத்திரி ஆனாலும் ஆவும்.''

அவன் சைக்கிளை வீட்டுக்குள் ஏற்றினான்.

ஐந்து நிமிடத்தில் பஸ் ஸ்டாண்டில் காத்திருக்கையில் தெருவில் போவோர் வருவோர் எல்லாம் அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்து நடப்பது புரிந்தது. சில புன்னகைகள். சில வெறித்த பார்வைகள்.

விட்டலாபுரத்தில் நேற்று வரை இருந்த ஒரு பரிச்சய சௌஜன்யம் சற்று மாறி விட்டிருப்பது புலப்பட்டது.

நீலாம்பர முதலியார் எச்சரிக்கிறார். குருமூர்த்தி கட்சி சேரச் சொல்கிறார். துளசிங்கத்திடமிருந்து புல்லட்டில் ஆள் வருகிறது.

அவன் இண்டர்வியூவைப் பற்றி நினைத்தான். இதெல்லாம் என்ன? சோதித்துப் பார்த்தல்களா? எனக்கு நீ முக்கியம் என்று பயந்து கொண்டே சொன்ன நித்யாவின் குரல் உள்ளே ஒலித்தது. வந்து நின்ற பஸ்ஸில் ஏறினான் கௌதம்.

(தொடரும்)

பாலம்



பாலுக்கும் காவல்; பூனைக்கும் தோழன் — கதையமைத்து இயக்கியிருக்கும் புதுமுகம் கார்வண்ணன்.

மெஷின் கன் உள்பட போர்க் கருவிகளைக் கையகப்படுத்திக் கொண்டிருக்கும் நக்ஸலைட் ரக கோஷ்டியொன்று உள்நாட்டு மந்திரியொருத்தரைக் கடத்திப் போய்ப் பாலத்துக்கு நடுவில் காரோடு சிறை வைத்திருக்கிறது. கூட்டத் தலைவன் சில கோரிக்கைகளை முன்வைத்து, அவை நிறைவேற்றப்பட்டால்தான் மந்திரி விடுபடுவார், இன்றேல் கொலைபடுவார் என்று கெடு வைத்துப் போலீசுக்குச் சவால் விடுகிறான். இந்த அடாவடித்தனத்தை எதிர்க்கும் காவலர்களின் கடமையுணர்வைக் காட்டும் போதே போராளித் தரப்பில் எழும் அனுதாபத்தையும் நியாயப்படுத்தி, எது சரி என்று திட்டமிட்ட முடிவை எட்ட முடியாத தத்தளிப்பையும் டென்ஷனையும் முடுக்கிவிட்டு, ஓர் இரண்டு மணி நேரம் ஸஸ்பென்ஸில் சிறைவைத்திருக்கிறார்கள். மேற்கத்தித் தாக்கம்.. ஊக்கப்படுத்தலாமா? யோசிக்க வேண்டும்.

பாத்திரத்துக்கேற்ற ரௌத்ரமும் கெட்டிக்காரத்தனமும் கொட்டுவதற்குப் பாந்தமான பருவமும் உருவமும் அந்த முரளிக்கு.

தாங்கள் மேற்கொண்டிருக்கும் இந்த நடவடிக்கைகளை ட.வி.யில் ஒளிபரப்ப ஏற்பாடு செய்ய வேண்டும் என்று காவலரை மடக்க, அவர்களும் வேறு வழியின்றி அதற்கு ஏற்பாடு செய்வதும் முரளி உருக்கப் பிரசாரமாய், 'உங்கள் குடும்பத்தினருக்கு இப்படியொரு நிலைமை என்றால் என்ன செய்வீர்கள்?' என்று கேட்பதாய் இடம் பெறுவதெல்லாம் சாத்தியமா என்பது வேறு விஷயம்.

அதுவரை நடந்த கதை பற்றிக் கருத்துச் சொல்வது போல் அசலாகவே நாலு கட்சிப் பிரமுகர்களை மனம் விட்டுப் பேச வைத்துக் காட்டியிருக்கிறார்களே அது புதுமை. அவர்களில் குறிப்பாக, சோவின் காரசாரமான கருத்துக்கள் ஓர் உலுக்கு உலுக்குகிறது.

பிரெய்ன் வாஷ் செய்வதில் நக்ஸலைட்டுகளுக்கு இளைத்தவர்கள் அல்ல போலீசார் என்பதை அனுபவ முதிர்ச்சி பெற்ற நம்பியார் எத்தனை இதமாய்க் காட்டியிருக்கிறார்! சாமர்த்தியமாய்த் தலைவர் முரளியை ஓர் அரை மணி நேரம் அப்புறப்படுத்தி விட்டு, அவரது சகாக்கள் ஒவ்வொருவரிடமும் சென்று அவரவர் குடும்ப நிலை குறித்து உருக்கம் காட்டிப் பேசி, அவர்களை நிராயுதபாணிகளாக்கித் தன் வசப்படுத்திக் கொள்கிறாரே — யதார்த்தம்.

போலீசார் ஆகட்டும்; போராளிகள் ஆகட்டும் அவரவர் பேச்சிலே நியாயம் காட்டிப் பேசும் போது அவரவர் பக்கம் சாய்ந்து கொள்ளத் தோன்றும் அந்த வசனங்களில் 'அண்ணா' தனம் தெரிகிறதே என்று பார்த்தால் — வசனம்! சி. ஏ. என். பரிமளம்!

பிற்பகுதியில் பெண் போலீசின் ஆளை மயக்கும் அரை நிர்வாணமும், தேவையில்லாத ஓட்டல் காபரேவும் செருகப்படாமல் இருந்திருந்தால் ஓர் ஆர்ட் பிலிமுக்கான மரியாதை கிடைத்திருக்கும்.

வித்தியாசமான புதுமைச் சித்திரம். சிவப்பு வர்ணம் தூக்கலாய்த் தெரியும் மாடர்ன் ஆர்ட்.

— பி. எஸ். எஸ்.

விபரங்கள் இலவசம் இலவசம்



கடலில் திசை தெரியாமல் தவிப்பவர்களுக்கு ''கலங்கரை விளக்கு'' ஒளி தந்து வழி காட்டும் அதுபோல் வாழ்வில் வளம் காணத் துடிப்பவர்களுக்கு முன்னேற்றத்திற்கான வழிகளை நாங்கள் கூறுகிறோம்.

பள்ளிக்கூடத்தில், கல்லூரியில் படித்து விட்டு ஆங்கிலத்தில் இலக்கணப் பிழையின்றி பேச முடியாமல் தவிக்கிறீர்களா ?

சாதாரண தொழிலாளியாக இருந்துகொண்டு ஆங்கில அறிவை எப்படியாவது படித்து முன்னேற வேண்டும் என்று நினைக்கிறீர்களா ?

எல்லோரும் ஆங்கிலத்தில் பேசும்போது நம்மால் நாலு வார்த்தை கூட பேச முடியவில்லையே என்று ஏங்குகிறீர்களா ?

படிக்கக்கூடிய காலத்தில் படிக்காமல் தற்போது தொழில் or வியாபாரத்தில் ஈடுபட்டு இனி எப்படி படிக்க முடியும் என்று ஆழ்ந்த யோசனையில் மூழ்குகிறீர்களா ?

கவலையை விடுங்கள் முன்னேற்றத்திற்கான

எளிய வழிகள் இதோ :

எளிய முறையில் தமிழ் மூலம் தபாலில் ஆங்கிலம் பயிலுவதற்கான சிறந்த பயிற்சியை இந்தியாவிலேயே தலைசிறந்த ஆங்கில கல்வி நிறுவனமாகிய...

''தி அமெரிக்கன் இன்ஸ்டிட்யூட்'' ஏற்று பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு மிகச் சிறந்த பயிற்சி அளித்து வருகிறது. பல்வேறு ஆங்கில பேராசிரியர்களே இப்பயிற்சியை பாராட்டியுள்ளனர் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

நீங்கள் செய்யவேண்டியது ஒரு போஸ்ட் கார்டில் உங்கள் முகவரியை எழுதி தி அமெரிக்கன் இன்ஸ்டிட்யூட், எல்லீஸ் நகர், மதுரை-16, என்ற முகவரிக்கு அனுப்புங்கள். இலவச விபரங்கள் வந்து சேரும்.

இது தவிர தமிழ் மூலம் தபாலில் கணக்கர் பயிற்சி பெற்றால் ஒவ்வொரு ஊரிலும் கணக்கர் வேலைக்கு ஏராளமானவர்கள் தேவைப்படுவதால் இதில் மாதம் ரூ. 2000 வரை சம்பாதிக்க வாய்ப்புண்டு, எளிய சுயமான வேலை வாய்ப்பு.

தமிழில் தபால் மூலம் சிறப்பாக ஆங்கிலம் பயில்வதற்கும், தமிழில் தபால் மூலம் கணக்கர் பயிற்சி பெறவும் உடனே தபால் கார்டில் எழுதவும்.

தி அமெரிக்கன் இன்ஸ்டிட்யூட்,

P.B. No. 16, எல்லிஸ் நகர், மதுரை-16.


ஏழாவது இரவு
23
கதை:
அபர்ணா நாயுடு
சித்திரம்:
இரவு முழுவதும் செய்திக்காகக் காத்திருந்தார் இன்ஸ்பெக்டர் முரளி. வரவில்லை. மறுநாள் விடிந்த பிறகும் அதே நிலை நீடித்த போது கவலை பிறந்தது.
தம் திட்டப்படியே எல்லாம் நடக்கும், நடந்து வருகிறது என்கிற தன்னம்பிக்கையில் ஒரு சூத்திரதாரியைப் போலப் பின்னணியில் இயங்கிக் கொண்டிருந்தது தவறோ என்கிற எண்ணம் முதல் முறையாக எழுந்தது.
காலை கடந்து நடுப்பகல் ஆன போது பதற்றப்படத் தொடங்கினார். சட்டென்று எந்தவொரு நடவடிக்கையையும் முடிவு செய்யவோ, மேற்கொள்ளவோ இயலாமல் மேலதிகாரிகளின் அவசர உத்தரவுகள் அடிக்கடி வந்து அவரை அங்கும் இங்கும் அலையச் செய்து கொண்டிருந்ததில் தவித்துப் போனார்.
எல்லாம் முடிந்து ஓய்வு கிடைத்த போது, மாலையாகி விட்டது. முதல் முறையாகப் பிரச்னை பற்றித் தம் உதவியாளனிடம் பேசினார்.
செங்கல்பட்டுக்கு அனுப்பின ஆளு கிட்டேயிருந்து தகவலே இல்லை. கிணத்துல கல்லுப் போட்ட மாதிரி இருக்கு.
நாகமே நேரில போனாரா?
அப்படித் தான் திட்டம். ஆனா அதுக்கு முன்னால போன் வரணும். அதுதான் வரவே மாட்டேங்குது.
நேத்து ராத்திரியிலிருந்து இதுவரை போன் வரலைன்னா..
சிக்கல் ஏற்படச் சந்தர்ப்பமே இல்லை. ஆனால் காலதாமதம்.. ஏன் அப்படி?
போனுக்காக இனிமேலும் காத்திருக்கறதுல அர்த்தம் இல்லை. புறப்பட்டுப் போயிடலாமா?







வேகமாக வெளியே வந்தார்.

கூடவே நடந்த உதவியாளனை, 'வர வேண்டாம்' என்று கூறிவிட்டுத் தாம் மட்டும் ஜீப்பில் புறப்பட்டார்.

சென்னைத் தெருக்களில் ஜீப் வேகமாகச் சென்ற போது அவர் நெஞ்சில் யோசனைகள் முட்டி மோதின.

பல பகுதிகளைக் கடந்து புதிதாக உருவாகியிருந்த அந்தப் பேட்டையை அடைந்ததும் வேகத்தைக் குறைத்தார். தெருவைத் தேடி, வீட்டைக் கண்டுபிடித்து, வண்டியை நிறுத்தி, இறங்கிக் கதவையடைந்து பஸ்ஸரை அழுத்தினார்.

திறந்ததும் சொன்னார்.



வெல்லமை தூரமேயோ?

23

அமைதியாக முகத்தை நிமிர்த்தி அரவிந்தின் அண்ணனை 'என்ன?' என்பது போலப் பார்த்தாள் வந்தனா. இந்த விவ காரத்தில் எனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை என்பது போல் சற்றுத் தள்ளிக் கைகளைக் கட்டிக் கொண்டு நின்றிருந் தான் கோபி.

சிவராம் உணர்ச்சிவசப்படாமல் நிதான மாக, ''இதோ பாரும்மா — நீ எதைப் புரிஞ் சுக்கத் தவறிட்டேன்னு சொல்றேன். முதல்ல உட்கார்'' என்றார்.

வந்தனா தனியாக இருந்த நாற்காலி யில் அமர்ந்தாள்.

''என் தம்பி செய்தது நியாயம்னு வாதம் செய்யறதுக்காக இங்கே நான் வரலைம்மா. நீ செய்துக்கிட்டிருக்கிறது விவேகமில் லைன்னு சொல்றதுக்காகத்தான் வந் தேன்.''

''பாதிக்கப்பட்டவங்க போலீஸ்ல புகார் கொடுக்கிறது எந்த வகையில் விவேகம் இல்லாத செயல்னு எனக்குப் புரிய லையே?''

''ஒரு காரியம் செய்யறதுக்கு முன்னால ரொம்ப யோசிக்கணும்மா. நீ உனக்கு ஏற் படற பாதிப்புக்களைப் பத்தியோ — உன் பேர் அனாவசியமாக் கெட்டுப் போறதைப் பத்தியோ லட்சியம் பண்றதா இல்லை. அதுவே ஒரு வீம்பான துடிப்பு. அபத்தம். இருந்தாலும் அது உன் குணம்னு விட்டுட லாம். இந்த வழக்கினால் பெரிய பாதிப்பு யாருக்குத் தெரியுமா?''

''தெரியும்! உங்க தம்பிக்குத்தான். நிச்ச யமா ஜெயில் தண்டனை கிடைக்கும்.''

''உன்னை மாதிரியே அவனும் பைத்தி யக்காரத்தனமா ஒரு வீம்புல இருக்கான்மா. உனக்கு அன்றைக்கு நடந்து முடிஞ்சிட்ட அந்த ஒரே ஒரு சம்பவம் மட்டும்தான் மனசுல இடறிக்கிட்டே இருக்கேயொழிய... அதுக்கப்புறம் எவ்வளவு சம்பவங்கள் நடந் துடுச்சு தெரியுமா? அரவிந்த் கிட்டத்தட்ட மனநோய் வந்தவன் மாதிரி ஆயிட்டான். ஆபீசுக்கே போகலை. வழக்கு நடக்கட்டும். எனக்குத் தண்டனை கிடைக்கட்டும் — அதை நான் மனப்பூர்வமா ஏத்துக்கறேன்னு பிடி வாதமாப் பேசறான்மா. தப்பை உணர்ந்துட் டான். உன் கோபம் நியாயம்னு உணர்றான். உன் தன்மானம் சரின்னு புரிஞ்சுக்கிறான். இந்த வழக்குல தப்புக்கான தண்டனை தனக்குக் கிடைக்கிறதைப் பத்தி அவனுக் குக் கொஞ்சமும் பயமில்லை. என்ன சொல் றான் தெரியுமா? — எனக்குத் தண்டனை கிடைச்சா வந்தனா திருப்தியடைவா. அவ ளோட திருப்திக்காக நான் எதையும் சந்திக்கிறேன்னு சொல்றான்.''

வந்தனா மெல்லச் சிரித்து, ''வசனம் நல்லாவே இருக்குன்னு சொல்லுங்க,'' என் றாள்.

''ஒருத்தன் கெட்டவன்னு ரொம்ப சீக் கிரம் புரிய வைச்சிடலாம். ஆனா ஒருத் தன் நல்லவன்னு புரிய வைக்கிறது ரொம்பச் சிரமம்மா. எது சொன்னாலும் ஏத்துக்கிற மனநிலைல நீ இல்லை. அரவிந்த் மேல்



பட்டுக்கோட்டை பிரபாகர்

உள்ள வன்மம் மாறாம இருக்கே.''

வந்தனா மௌனமாகத் தன் விரல்களைப் பார்த்துக் கொண்டாள்.

''வந்தனா, ஒண்ணு கேக்கறேன். தப்பா நினைச்சுக்காதேம்மா. அரவிந்த் தனிமையிலே உன்கிட்டே தப்பா நடந்துக்க முயற்சி செஞ்சான். அதுதானே உன் ஆத்திரத்துக்கெல்லாம் அடிப்படைக் காரணம்?''

''ஆமாம்.''

''வழக்குல அரவிந்துக்குத் தண்டனை கிடைச்சாச்சுன்னு வைச்சுக்கலாம். உடனே அந்தச் சம்பவம் இல்லைன்னு ஆயிடுமா? உன் மனசிலே பதிஞ்ச அந்த நிகழ்ச்சி அழிஞ்சு போயிடுமா?''

''எல்லா ஆண்களையும் போலத்தான் பேசறீங்க! வடு அழியாதுதான். அதுக்காகத் தனக்கு ஏற்பட்ட கொடுமைக்கு நீதி கேட்டு ஒரு பெண் முறையாப் போராடறது தப்பா?''

''சரி, விடும்மா. நீ வேகம் குறையாம இருக்கே. என்ன பேசினாலும், எப்படிப் பேசினாலும் எடுபடாதுன்னு நினைக்கிறேன். சின்ன நெருப்பா இருந்தால் சாக்கு போட்டு அணைச்சிடலாமேன்னு வந்தேன். நெருப்பு பெரிசா இருக்கு. எத்தனை சாக்கு போட்டாலும் அதுவும் சேர்ந்து பத்திக்கிட்டு எரியறப்ப என்ன செய்ய முடியும்?''

''இப்ப நான் என்ன செய்யணும்னு எதிர்பார்த்து வந்தீங்க?'' என்றாள், வந்தனா லேசான எரிச்சலுடன்.

''அதைச் சொல்றதில அர்த்தம் இருக்கிறதா எனக்குத் தெரியலைம்மா. ஆனாலும் சொல்லிட்டே போயடறேன். நீ விளையாட்டா இந்த வழக்கை ஆரம்பிச்சியோ, இல்லை சீரியஸா ஆரம்பிச்சியோ, வழக்கு வழக்குதான். அரவிந்த் வக்கீல் வைச்சுக்கிறதா இல்லை. சொல்லிப் பார்த்துட்டேன். கத்தறான். யாரும் அவனை நெருங்கிப் பேசற நிலைமையில இல்லை. அவனைச் சுயஇரக்கம் அணுஅணுவாச் சித்திரவதை செஞ்சுக்கிட்டு இருக்கு. அதைவிடப் பெரிய தண்டனை, சட்டம் கொடுத்துட முடியாதும்மா. அவன் உணர்றதும், உருகறதும் நாடகம்னு நீ பிடிவாதமா நம்பினா அதுக்குப் பதில் சொல்ல முடியாது. வேணும்னா நீ வந்து அவனைப் பார்க்கலாம். ஆனால் நீ வர மாட்டே. நான் ஏன் வரணும்னு வீம்பு பேசுவே. அப்படியே வந்து பார்த்தாலும் நாடகம்னுதான் வலுக்கட்டாயமா நம்புவே. ஆனா... அவன் வாழ்க்கையே சிதைஞ்சு போயிடும்மா...'' என்றபோது சிவராமின் குரல் உடைந்து போனது.

மேனேஜர் அவரைத் தொட்டு, தம் கையில் இருந்த ஃபைல்களைக் காட்டினார்.

''எது சொன்னாலும் ஏத்துக்கிறதில்லைன்னு நிக்கிற பொண்ணுகிட்டே இதைச் சொல்லி மட்டும் என்ன ஆகப் போகுது?'' என்றார் விரக்தியுடன் சிவராம்.

''என்ன சார் அது?'' என்றான் கோபி தூரத்திலிருந்து.


''பேப்பர்ல விஷயம் வந்ததிலேர்ந்து கம்பெனியோட பேரே ரிப்பேராய்டுச்சி தம்பி. ஷேர் மார்க்கெட்லே எங்க கம்பெனி ஷேர் படுத்துடுச்சு. கடன் தர்றதாச் சொன்ன பேங்க்ஸ் தயங்கறாங்க. கடன் கொடுத்தவங்க நெருக்கறாங்க. இந்த விவகாரத்திலே நிறுவனமே ஆட்டம் கண்டிருக்கு. இதோ பாருங்க...''

சிவராம் காட்டிய பத்திரிகைக் குறிப்புக்களைக் கோபி பார்த்தான். வந்தனா அதிக சுவாரஸ்யமில்லாமல் எட்டியிருந்தே பார்த்தாள்.

''இந்தக் கம்பெனியை நம்பி நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இருக்காங்க. இந்த வழக்குல அரவிந்துக்குத் தண்டனை கிடைச்சு அவன் ஜெயிலுக்குப் போனா அவங்க வாழ்க்கை எல்லாம் கூடப் பாதிக்கும்மா,'' என்றார் மானேஜர்.

''உங்க அரவிந்த் ஒரு கொலையே செஞ்சிட்டார்னு வச்சிக்கங்க. அடடா, இவரை நம்பித் தொழில் நிறுவனம் இருக்கே. இவ்வளவு தொழிலாளர்கள் பாதிக்கப்படுவாங்களேன்னு சட்டம் பார்க்குமா சார்? கொலைக் குற்றத்துக்கு மரண தண்டனை விதிக்குதே சட்டம். அதுங்கிட்டே போய் உன் தண்டனையால ஒரு பொண்ணு விதவையாகிடுவாளேன்னு கெஞ்ச முடியுமா?'' என்றாள் வந்தனா.





"கதை எழுதிட்டு அட்ரஸை மட்டும் என் பையனை விட்டு எழுதச் சொன்னது தப்பாயிடுச்சி!"

"ஏன் என்னாச்சு?"

"எப்படியும் திரும்பித்தான் வரப் போவுதுன்னு எல்லாத்தையும் பழைய பேப்பர்காரன் விட்டு அட்ரஸுக்கே அனுப்பித் தொலைச்சிட்டான்!"

— நீடாமங்கலம் ஜே. பி.

விருட்டென்று எழுந்து கொண்டார் சிவராம்.

"வாய்யா, போகலாம். பாறை பூமியில பயிர் நடறத்துக்கு முயற்சி செஞ்ச நம்மைத்தான் நொந்துக்கணும்" என்றவர் கோபி பக்கம் திரும்பி, "தம்பி, ஒரு நிமிஷம் இப்படி வாங்க" என்றார்.

கோபி சிவராமிடம் வந்தான்.

"உங்க தங்கையோட பேச்சு வாதத்துக்கு நல்லா இருக்கு. ஆனா நடைமுறை வாழ்க்கையில இவ்வளவு பிடிவாதம் கூடாதுப்பா. சிரமம்! அவளுக்கும் சிரமம். மத்தவங்களுக்கும் சிரமம். இந்தப் பெண்ணைப் போய் எப்படி அவ்வளவு உருகி உருகி என் தம்பி நேசிக்கிறான்னு எனக்குப் புரியலை" என்றார் சிவராம்.

"சின்ன வயசிலேர்ந்தே அப்படித்தான் சார். எங்கப்பா சரியில்லை சார். அவரோட செயல்கள் இவ மனசுல பதிஞ்சு போய்... பொதுவா ஆம்பிளைங்கன்னாலே ஒரு வெறுப்பை வளர்த்துக்கிட்டா. இதை விவகாரமாக்க வேணாம், வெளிச்சத்துக்குக் கொண்டு வரவேணாம்னு நானும், எங்கம்மாவும் எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டோம். கேட்கலை. ரொம்ப வற்புறுத்தினா வீட்டை விட்டு வெளியிலே போறேங்கறா. பிடிவாதக்காரியா இருக்கா. நான் பேசிப் பார்க்கிறேன் சார்," என்றான் கோபி.

"அங்கே அவனும் இதைவிடப் பெரிய பிடிவாதக்காரனா இருக்கான். விபரீதம் புரியாம உணர்ச்சிவசப்பட்டுக்கிட்டிருக்கான். மத்தவங்க வாழ்க்கைக்காக, கம்பெனி சரிஞ்சிடாம இருக்கிறதுக்காகவாவது அரவிந்த் மேல் குற்றம் நிரூபணமாகாமே வெளில வர்றது நல்லது. பெரிய வக்கீல்கள் தயாரா இருக்காங்க — இந்தக் கேசை உடைக்க. இவ ஒத்துழைக்கணுமே அதுக்கு. நான் பேசிப் பார்க்கிறேன் அவன்கிட்டே. என்ன ஆகப் போகுதுன்னு எதுவும் புரியலை."

சிவராம் வேதனையோடு பேசிவிட்டுப் புறப்பட்டுச் சென்றதும், வந்தனா தன் அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

கோபி யோசனையாய் நகர, சமையற்கட்டின் வாசலில் அமர்ந்திருந்த அம்மா, "எல்லாத்தையும் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன். எவ்வளவு பெரிய மனுஷன் வந்து எப்படிக் குறுகிப் பேசிட்டுப் போறார்? இவ லட்சியம் பண்றாளா பார்த்தியா? எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு... இப்படி ஒரு பொட்டைக் கழுதையை ஏன்தான் பெத்தேனோன்னு இருக்கு." என்றாள்.

கோபி வந்தனாவின் அறை வாசலுக்கு வந்து கதவைத் தட்டினான். வந்தனா திறந்து, "என்ன?" என்றாள்.

கோபி கைகளைக் கட்டிக் கொண்டு, "என்ன தீர்மானிச்சே?" என்று கேட்டான்.

"எதைப் பத்தி கோபி?"

"இவ்வளவு நேரம் இங்கே என்ன கீரி—பாம்பு சண்டையா நடந்திச்சு?"

"என்ன சொல்ல வர்றே நீ ....? தெளிவாச் சொல்லு கோபி."

"நாளைக்குக் கோர்ட்லே நீ என்ன சொல்லப் போறே?"

"புகார்ல என்ன சொன்னேனோ, அதைத்தான்."

"முடிவு பண்ணிட்டியா?"

"இது இன்னிக்குச் செய்த முடிவில்லையே...?"

"இவ்வளவு பேர் சொல்றதுக்கெல்லாம் மதிப்பே கொடுக்க மாட்டியா, நீ? நான் சொல்றேன். அம்மா சொல்றாங்க. பெரிய மனுஷன் வந்து சொல்றார். உனக்கு என்ன இரும்பு மனசா?"

"நான் என்ன செய்யணும்னு சொல்றே?"

"இப்பவும் எதுவும் கெட்டுப் போகலை வந்தனா. உன் பிடிவாதத்தைக் கொஞ்சம் மூட்டை கட்டி வச்சிட்டு வழக்கை வாபஸ் வாங்கிடு."

"எதுக்காக?"

"அரவிந்தைத் தண்டனையிலிருந்து காப்பாத்தறதுக்காக. நீ வாபஸ் வாங்கிட்டா வழக்கு வலுவிழந்துடும்."

"எதுக்காக அரவிந்தைக் காப்பாத்தணும்?"

"முதல் பாயிண்ட் — அவர் தப்பை உணர்ந்துட்டார். ரெண்டாவது பாயிண்ட்— அவரை நம்பி நிறையக் குடும்பங்கள் இருக்கு."

"அப்படின்னா யார் வேணும்னாலும்

எந்தத் தப்பை வேணும்னாலும் செய்துட்டு அப்புறம் உணர்ந்துட்டாப் போதும். அப்ப டித்தானே? அதிலேயும் தப்பு செஞ்ச நபரை நம்பிப் பல குடும்பங்கள் இருந்தால் அவரை மன்னிச்சிடலாம்.''

''ச்சீ! எப்படித்தான் நீ ஒரு அரக்கி மாதிரி ஆனியோ?''

''அரக்கி! புதுப் பட்டமா எனக்கு? சரி. வேற ஏதாவது சொல்லணுமா நீ?''

''அவனைத் தண்டிக்கிறதால உனக்கு என்ன லாபம்?''

''எல்லா செயல்லயும் தனி நபர் லாபம் பார்க்கக் கூடாது கோபி. இந்தச் சமூகத்திற்கு என்ன லாபம்னு பார்க்கணும். பொம்பளைங்க மானம் சம்பந்தப்பட்ட குற்றங்கள்லா அவங்க பேர் கெட்டுடுமேன்னு வழக்குப் போடாம மனசுக்குள்ளேயே புழுங்கிப் புழுங்கி எவ்வளவு பேர் வதைபடறாங்க! அவங்களுக்கெல்லாம் ஒரு தைரியம் வர வேணாம்? பொம்பளைதானேன்னு சீண்டிப் பார்க்கிறது இனிமே முடியாது போலிருக்கேன்னு ஆம்பளைங்க பயப்பட வேணாம்? என் வழக்கு இதுக்கெல்லாம் ஒரு ஆரம்பமா இருக்கட்டுமே?''

உதடுகள் துடிக்க ஏதோ சொல்ல வந்த கோபி, சட்டென்று திரும்பி நடந்தான் வேகமாக.

வந்தனா தன் கட்டிலில் விழுந்தாள்.

என் பிடிவாதம் எல்லோருக்கும் தப்பாகப் படுகிறதே! குட்டக் குட்டக் குனியும் பெண் சமுதாயம் ஒரு சந்தர்ப்பம் வரும்போது நிமிர நினைத்தாலும் — எதையாவது சொல்லிக் குனிய வைக்கவே பார்க்கிறார்களே...

வந்தனாவுக்குள் மற்றொரு வந்தனா மெல்லச் சிரித்தாள். ஓசைகள் இன்றி அவளுக்குள்ளேயே அவள் பேசிக் கொண்டாள்.

'வந்தனா, உன் தார்மீகக் கோபம், எழுச்சி எல்லாம் சரிதான். ஆனால் ஒரு பிரச்னையை வலுவாகத் தொட்டு விட்டோம் — தொட்டதில் இருந்து எப்படிப் பின் வாங்குவது என்கிற வீம்பு உனக்குள்ளே அதிகம். மற்றவர்கள் எடுத்துச் சொல்கிற சில நியாயங்களும், மனிதாபிமானக் கோரிக்கைகளும் உனக்குப் புரியாமல் இல்லை. என்னவோ பெண் சமுதாயத்திற்கே நீதான் தலைவி என்பது போலவும் — பெண்கள் எல்லோருமே சதா கண்ணீரில் மிதப்பவர்கள் என்றும் நீயாகச் சித்திரம் வரைந்து மாட்டிக் கொண்டு — அதைக் கழற்ற மறுக்கிறாய்! இப்போது என்ன முடிவு எடுக்கப் போகிறாய்?'

— (அடுத்த இதழில் முடியும்)

தேவிலால் ராஜினாமா



* பிரதமரின் தலைவலி



* நிதானப்போக்கு

* எஸ். ஷ்பைகதின், காஞ்சி.

? குல்திப் நய்யாருக்குக் கிடைத்துள்ள பதவி பற்றி?

! சுதந்திரக் குரலுக்குத் தாற்காலிகத் தடை!

* தேவிகா, ஜம்பை.

? தமிழ் நாட்டில் காங்கிரஸ் வளருதா, தளருதா?

! அடிதடி தகராறு வளருது; உருப்படியான, கொள்கைரீதியான மாற்றுக் கட்சியாகச் செயல்படாததால் மக்களிடையே செல்வாக்கு தளருது!

* உமார்த்தி, கோவை.

? தங்களுக்கு மிகவும் பிடித்த ஹைக்கூ கவிதை?

! ஹைக்கூ பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஆனால் 'ஹை'யாகக் (உச்சமாக) கூவும் கவிதை ஒன்று தெரியும்: ''வீட்டுக்கு ஒரு மரம் வையுங்கள், சரி;
முதலில் குடியிருக்க ஒரு வீடு கொடுங்கள்!''

* அ. ராஜப்பா, பொகலூர்.

? தேவிலால், அத்வானி — இருவரில் யார் முன்கோபக்காரர்?

! நிதானப் போக்கும், ஒழுங்கு முறையில் பற்றுதலும், பழுத்த ஜனநாயகவாதியுமான அத்வானியுடன் தேவிலாலை ஒப்பிடத் துணிந்த உம்மை... சரி, இந்த முறை விட்டு விடுகிறேன்!

* டி. சீனிவாசன், சென்னை — 79.

? 'காஷ்மீர் கவர்னர், பாகிஸ்தானுக்கு ஆதரவாகச் செயல்படுகிறார்' என்று கூறிக் கண்டித்துள்ளாரே, ராஜீவ்?

! இதே ஜக்மோகன் முன்னர் காஷ்மீரில் ஆளுநராக இருந்த போது, படிப்படியாக அபாயகரமான நிலைமைகள் உருவாகி வருவதைப் பத்தி பத்தியாக எழுதி அனுப்ப, அவற்றை அலட்சியப்படுத்தி, தூசிப் போர்வையில் தூங்கச் செய்தவர் அன்றையப் பிரதமர் ராஜீவ். இதற்காக நாம் ராஜீவைக் கண்டிக்கும் போதுகூட, அவரைத் 'தேசத் துரோகி' என்பது போல் குற்றம் சாட்டிப் பேச மாட்டோம்.

* ராம்கோபால், சென்னை.

? சரியான அறுவை ஜோக் ஒன்று சொல்லுங்களேன், கேட்டு ரொம்ப நாளாச்சு...

! ஹியூமர் கிளப்பில் காதில் விழுந்தது: ''நீங்க இடது கையால் எழுதுவீங்களா, வலது கையால் எழுதுவீங்களா?''
''இரண்டுமில்லை; பேனா, அல்லது பென்சிலால்தான் எழுதுவேன்!''

* கிஷோர், திருச்சி — 21.

? ரயில்வே பட்ஜெட்டின் வேகம் என்ன?

! பயணக் கட்டணம், ஸ்லீப்பர் கட்டணம் ஆகிய இரண்டையும் உயர்த்தி, சுற்றுலா சுணங்கிப் போகச் செய்திருக்கிறார். ஐயோ பாவம், ஒருமைப்பாடு! நாட்டைச் சுற்றிப் பார்க்கும் ஆர்வமே போச்சு! முதல் வகுப்பு, ஏ. ஸி. வகுப்பு முதலியவற்றின் கட்டணம் பயங்கரமாக ஏறியுள்ளது. 'பணக்காரர்களைத்தானே பாதிக்கும்' என்று எண்ணாதீர்கள்! இந்த வகுப்பில் சொந்தப் பணத்தில் யாரும் பயணம் செய்வதில்லை! கம்பெனி கணக்கு, அல்லது அரசுக் கணக்குத்தான். இதனால் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பண்டங்களின் விலை உயர ஒட்டு மொத்தமாக அவற்றைத் தாங்கப் போவது சராசரி மக்களான நீங்களும் நானும்தான்! போதாக் குறைக்கு சரக்குக் கட்டண உயர்வு நேரடியாகவே விலைவாசி உயர வகை செய்யும். மாமியாரை வழியனுப்பி வைத்துக் கூட இனி யாரும் மகிழ முடியாது! பிளாட்



* ஆவேசப் போராட்டம்



* ''கண்ணீரில் எழுதிய காவியம்!''

நாடகம் பற்றி..?



* பாலிஸ்தாருக்கு ஆதரவா?



* விலைவாசி உயர்வின் வேகம்

ஃபாரம் டிக்கெட் விலை ஏறிவிட்டதே! எந்த அரசு வந்தாலும் போனாலும், தெளிவான பொருளாதார நோக்கு இல்லாதவரை மக்களுக்கு விடிவு காலமும் இல்லை! ஆக, மொத்தம், ரயில்வே பட்ஜெட்டின் வேகம், விலைவாசி உயர்வின் வேகம்!

* ஏ. ஜஹ்பர் காதர், சென்னை.

? **துணைப் பிரதமர் ராஜினாமா மூலம் பிரதமருக்குத் தலைவலி ஆரம்பமா? தீர்ந்து விட்டதா?**

! 'தீர்ந்து விட்டது என்று நினைக்க முடியாமல், திரும்ப வந்து ஒட்டிக் கொண்டு விட்டாரே! அவருடைய ராஜினாமாவுக்கான காரணங்கள் பல அபத்தமாக இருக்கின்றன. (உ-ம்) 'கிராமப்புறப் பின்னணி உள்ளவர்களைத்தான் அயல்நாட்டுத் தூதர்களாக நியமிக்க வேண்டும் என்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது? அவருடைய உண்மையான கவலை, மகன் சௌடாலா பற்றியும் அவரது முதல்வர் பதவி குறித்தும்தான். மேஹம் தொகுதியில் மறு தேர்தலுக்கு அவரே வேண்டுகோள் விடுத்த பிறகு, ராஜினாமாவில் அர்த்தமேயில்லை. மக்களின் தீர்ப்புக்குக் காத்திருக்க வேண்டியதுதானே! நல்ல வேளை, பிரதமர் வி. பி. சிங் அவருக்கு எழுதியுள்ள பதிலில் எதையும் விட்டுக் கொடுக்கவில்லை. உறுதியாக இருப்பதையே காண்கிறோம். தேவிலால் தமது பலங்களை உணர்வதுடன் பலவீனங்களையும் புரிந்து கொண்டு அதற்கேற்ப அனுசரித்து நடப்பது அவருக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது.

* வண்ணை கணேசன், சென்னை — 11.

? **'பெண்களின் கண்ணீரால் எழுதப்பட்ட காவியமே இந்த பட்ஜெட்' என்று குமரிஅனந்தன் கூறியிருப்பது பற்றி?**

! தமிழக பட்ஜெட் பற்றிய அவரது வர்ணனை சரியானதே. ஜி. ராமானுஜமும், 'கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காக அல்ல; வருவாயைப் பெருக்கவே மலிவு விலைச் சாராயம் என்பதை பட்ஜெட் உறுதிப்படுத்துகிறது' என்று கூறியுள்ளார். ஆக, பெண்களின் கண்ணீரால் எழுதப்பட்டது தமிழக பட்ஜெட் என்பது உண்மையானாலும், குமரி கூறியது போல், அது 'காவியம்' என்பதும் மெய்யே. ஏனெனில், பலமுனை விற்பனை வரி ரத்து, அன்றாடத் தேவைப் பொருள்கள் பலவற்றின் மீது வரி ரத்து போன்ற பல ஆக்கபூர்வமான அம்சங்கள் பட்ஜெட்டில் உள்ளன. சமுதாய நலப் பார்வை; தொழில் வளர்ச்சி — வேலை வாய்ப்புப் பெருக்கத்துக்கான தொலை நோக்குப் பார்வை ஆகிய இரண்டிலுமே கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. பல காலத்துக்குப் பிறகு தமிழக பட்ஜெட் தயாரிப்பில் சிறப்பான சிந்தனை செயல்பட்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது.

* அ. முஸ்தபா, தக்கோலம்.

? **ஏப்ரல் முதல் தேதி ஏமாறுகிறவர் யார்? ஏமாற்றுபவர் யார்?**

! ஏப்ரல் முதல் தேதி மட்டுமென்ன, ஒவ்வொரு நாளுமே — தான் ஏமாந்து கொண்டிருக்கிறோமே, டீ. வி. நிகழ்ச்சிகளைப் பார்த்து! தரம் ஒருபுறம் இருக்க, போன வாரம் ஒளிபரப்பான பகுதியையே மீண்டும் ஒளிபரப்புகிறோம் என்று கூடவா நிலையத்தினருக்குத் தெரியாது? 'தேவலாம், சுமாராக இருக்கிறது' என்று ரசிக்கக் கூடிய சக்தி — 90 — யைக் கூட 'சே' என்று வெறுக்கும்படி செய்து விட்டார்கள், போங்கள்!

* ர. ஜெய்குமார், பொள்ளாச்சி *

? **வாழப்பாடியாரின் ஆவேசப் போராட்டத்தினால் பாதிக்கப்படுவது யார்?**

! வைஜயந்திமாலா தவிர இதர தமிழக காங்கிரஸ் தொண்டர்களே! தேவையே இல்லாத போராட்டம்! தேவையே இல்லாத அரசின் அடக்கு முறை! தேவையற்ற சிறைவாசம்! சிறைக்குள்ளே தேவையற்ற சில் விஷமம்! இப்போதெல்லாம் எதற்கெடுத்தாலும் அபிப்பிராய வாக்கெடுப்பு நடக்கிறது. தமிழக அரசோ அல்லது தமிழக காங்கிரஸோ, மறைமலை நகர் வாசிகளிடையே வெகுசுலபமாக ஓர் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தி, அதன் அடிப்படையில் இந்தப் பிரச்னைக்கு விடைகண்டிருக்கலாம்.

*** ரூ. 20 பரிசு பெறுபவர்:**

ர. ஜெய்குமார்,
452, காந்திபுரம்,
பொள்ளாச்சி — 6.

நீங்கள் சௌத் இந்தியன் பாங்கைப் பொறுத்தவரை கூட்டத்தில் ஒருவரல்ல


ஆம், சௌத் இந்தியன் பாங்கு உங்களுக்கு நல்குவது தனிப் பட்டதொரு சேவை. வஜ்ர நிதி, கல்பக நிதி, ஜூபிளி காஷ் சர்ட்டிபிகேட், வீடு கட்ட கடன் — இவை இதன் பிரத்தியேகத் திட்டங் -கள். இன்று இது ''மக்கள் பாங்கு'' என்று அறியப்படுமானால்



இது அனைவரிடமும் செலுத்தும் அக்கறைதான் காரணம். ஒவ்வொருவரிடமும், உங்களிடமும்.

The South Indian Bank Ltd

Regd. Office: Trichur



அது என்ன, 370?

காஷ்மீர் பிரச்னையில் அடிக்கடி அடிபட்டுக் கொண்டு இருப்பது அரசியல் சட்டப் பிரிவு 370. 'நாங்கள் இந்தப் பிரிவை நீக்க மாட்டோம்' என்று ராஜீவுக்கு உறுதி அளிக்கிறார் வி. பி. சிங். ஜனதா தளத்தின் தோழமைக் கட்சியான பாரதிய ஜனதாவோ, '370ம் பிரிவு அரசியல் சட்டத்திலிருந்து நீக்கப்பட வேண்டும்' என்று சொல்லி வருகிறது. 370ம் பிரிவு என்னதான் சொல்கிறது? விளக்குகிறார் பி. ஹெச். பாண்டியன் :

நமது அரசியல் சட்டம், எல்லோருக்கும் பொதுவானது. ஆனால் அரசியல் சட்டத்தின் 370 – ஆம் பிரிவின் படி, காஷ்மீர் மாநிலத்துக்குமட்டும்சட்டத்திருத்தங்களைச் செய்ய முடியும்; விதிவிலக்குகளை அளிக்க முடியும். நமது நாட்டின் சட்ட திட்டங்கள், விதிமுறைகள் ஆகியவை காஷ்மீர் மாநிலத்துக்கு எந்தெந்த விதத்தில் பொருந்தும் அல்லது பொருந்தாது என்ற விவரமான உத்தரவு ஒன்றை 1954 – இல் ஜனாதிபதி பிறப்பித்திருக்கிறார்.

''எல்லைப்புற மாநிலமாக இருப்பதாலும், அந்நியர் ஊடுருவச் சாத்தியங்கள் இருப்பதாலும் மாநிலத்தின் சில பகுதிகள், இந்திய அரசின் கட்டுப்பாட்டில் இல்லாததாலும், காஷ்மீர் பிரச்னை ஐ. நா சபைக்கு அடிக்கடிச் செல்வதாலும், இந்த மாநிலத்துக்கு விசேஷத் தகுதி வழங்கி, சட்டதிட்டங்களையும் அந்த மாநிலத்தின் தேவைக்கேற்ப மாற்றியமைக்க வேண்டும்'' என்று அரசியல் நிர்ணய சபையில் தீர்மானிக்கப்பட்டது. அந்த அடிப்படையில் செய்யப்பட்ட மாற்றங்கள் காஷ்மீரைக் கிட்டத்தட்ட சுயாட்சி பெற்ற மாநிலமாக ஆக்கிவிட்டது. சொல்லப் போனால் நாட்டுக்குள் ஒரு நாடாக காஷ்மீர் விளங்கிக் கொண்டிருக்கிறது. சில அம்சங்களைப் பார்ப்போமா?

காஷ்மீர் சட்டசபை, நாடாளுமன்றம் போல் வலுப்பெற்றுள்ளது.

நமது நாட்டு எடை அளவுச் சட்டம், சினிமா தணிக்கைச் சட்டம் ஆகியன காஷ்மீருக்குப் பொருந்தாது.

காஷ்மீரில் உள்ள புராதனக் கலைச் செல்வங்களைப் பாதுகாக்க, மைய அரசுக்கு உரிமை கிடையாது.

பொதுமக்கள் நன்மையைக் கருதி அங்குள்ள தொழிற்சாலைகளை மத்திய அரசு எடுத்துக் கொள்ள முடியாது.

மைய அரசு போடும் தடுப்புக் காவல் சட்டம் காஷ்மீருக்குப் பொருந்தாது. தடுப்புக் காவல் சட்டப்படி யாரையாவது



* நாட்டுக்குள் ஒரு நாடு!



* பி. எச். பாண்டியன்

கைது செய்ய வேண்டுமென்றால் ஜனாதிபதி தனிப்பட்ட உத்தரவு போட வேண்டும்.

நிதி நிலையை ஆதாரமாகக் காட்டி அந்த மாநிலத்தில் அவசரநிலை கொண்டுவர முடியாது. உள்நாட்டுக் குழப்பம் இருந்தால் அவசர நிலை கொண்டு வரலாம். ஆனால் குழப்பம் நிலவுவதாகத் தீர்மானிக்கும் உரிமை காஷ்மீர் சட்டமன்றத்துக்குத்தான் உள்ளது.

இந்தியக் குற்ற இயல் சட்டம், இந்தியக் குற்ற இயல் நடைமுறைச் சட்டம், சாட்சிகள் சட்டம், முதலியவை காஷ்மீர் மாநிலத்தைப் பொறுத்தவரை பொருந்தாது. இதுபோன்ற சட்டங்களை உருவாக்கிக் கொள்ள காஷ்மீர் சட்டமன்றத்துக்கே அதிகாரம் இருக்கிறது.

காஷ்மீர் மாநிலத்தின் எல்லைகளைக் கூட்டவோ, குறைக்கவோ வேண்டுமென்றால், மாநில அரசின் ஒப்புதல் பெற வேண்டும்.

நிலங்களை வாங்குவது அல்லது விற்பது குறித்துப் பாராளுமன்றம் போடும் எந்தச் சட்டமும், காஷ்மீருக்குப் பொருந்தாது.

சி. பி. ஐ. மற்றும் மத்திய அரசின் புலனாய்வு ஏஜென்ஸிகளின் அதிகார எல்லைக்குள் காஷ்மீர் இல்லை.

காஷ்மீர் பள்ளத்தாக்கில் வேலை வாய்ப்பு சம்பந்தப்பட்ட எந்தச் சட்டத்தையும் காஷ்மீர் சட்டமன்றம்தான் இயற்ற வேண்டும்.

மத்திய அரசுப் பட்டியலில் உள்ள விஷயங்கள் மீது நாடாளுமன்றம் சட்டங்கள், அல்லது திருத்தங்கள் இயற்றினால் காஷ்மீர் மாநிலத்துக்கு அவை பொருந்தாது. ஜனாதிபதி தனிப்பட்ட உத்தரவுகள் போட வேண்டும்.

நாடாளுமன்றத்துக்கு விஞ்சிய அதிகாரம் (**Residual Power**) என்று இருக்கிறது. அரசியல் சட்டத்தில் இடம் பெறாத விஷயங்களுக்குக் கூடச் சட்டம் போடும் உரிமை. இந்த அதிகாரத்தின் மூலம் நாடாளுமன்றத்துக்குக் கிடைக்கிறது. ஆனால், காஷ்மீர் மாநிலத்தைப் பொறுத்தவரை இந்த விஞ்சிய அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒன்றும் செய்ய முடியாது.

கவர்னர்களை நியமிக்கும் போது மத்திய அரசு மாநிலங்களைக் கலந்து ஆலோசிப்பதில்லை. ஆனால் காஷ்மீர் கவர்னரை மாநில அரசின் சம்மதத்தின் பேரில்தான் நியமிக்க முடியும்.

காஷ்மீர் மாநிலத்தில் உள்ள உயர்நீதி மன்ற நீதிபதியை மாற்றுவதென்றாலோ அல்லது வேறு வெளி மாநில நீதிபதியை அங்கு போடுவதென்றாலோ, மாநில அரசின் ஒப்புதல் பெற வேண்டும்.

மாநில அரசுகளுக்கு வழிகாட்டும் உரிமை நாடாளுமன்றத்துக்கு உண்டு. இது காஷ்மீர் மாநிலத்துக்கு மட்டும் செல்லுபடியாகாது!

'இவ்வளவு உரிமைகள், இவ்வளவு சலுகைகளா? காஷ்மீர் தனி நாடா?' என்றெல்லாம் கேள்விகள் கேட்காதீர்கள். 'காஷ்மீர், இந்தியக் கட்டமைப்புக்குள் உள்ள ஒரு மாநிலம்' என்று அரசியல் சட்டம் உறுதி கூறுகிறது!

பேட்டி: **ப்ரியன்.**

முகமூடி அணிந்தவர் யார்?



* வரதராஜனிடம் பரிசு பெறுகிறார் அருணா

விடை:


வரதராஜன்தான்!

'க்ளு'க்களுக்கு விளக்கம்: சட்டசபையில் டபின் டீ.ஆர். வரதராஜன் எம். எல். ஏ. இருக்கிறார். வரதராஜன் 'கல்யாணத்துக் குக் கல்யாணம்' டி. வி. தொடரில் நடித்திருக்கிறார்.

ஏற்பாடு தொகுப்பு: **மௌலி**

படம்: **யோகா**

ஒரு போஸ்ட் கார்டு போதும்!...



உங்களுக்கும் உங்களது முன்னற்றத்திற்கும் இடையில் இப்பொழுது உள்ள தூரம் ஒரு போஸ்ட் கார்டு தான் என்று நாங்கள் கூறினால் அது சற்று மிகையாகத் தோன்றும். ஆனால் உண்மை அதுதான்.

நீங்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஆங்கில மொழியில் போதிய பயிற்சியின்மை ஒரு தடையாக இருந்திருந்தால்........

மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேசும் போது அதை ஓரளவு புரிந்து கொண்டும், அதற்கு ஆங்கிலத்திலேயே பதிலளிக்க முடியவில்லையே என்ற குறை உங்களிடம் குடி கொண்டிருந்தால்,

பல புத்தகங்களைப் படித்தும் ஆங்கிலத்தில் பேச முடியவில்லையே என்ற சலிப்பு உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்,

நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை இப்பொழுது அடைய ஒரே ஒரு போஸ்ட்கார்டுபோதும்...ஆமாம்!

ஆங்கிலத்தில் இலக்கணப் பிழையின்றி கடிதங்கள் கட்டுரைகள் எழுத வேண்டும், தயக்க மின்றி சரளமாகப் பேசவேண்டும் என்ற உங்களது விருப்பத்தை ஒரு போஸ்ட் கார்டில் எழுதி தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்று போற்றப்படும் விவேகானந்தா கல்வி நிலையத் திற்கு இன்றே அனுப்புங்கள்.

நீங்கள் மேற்கொள்ள வேண்டிய பயிற்சியைப் பற்றியும் மற்ற தகவல்களையும் உடனே உங்களுக்கு அனுப்பி வைப்பார்கள்.

வீட்டிலிருந்த படியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இந்த எளிய பயிற்சி முறையை நீங்கள் மேற்கொள்ளலாம்.

“நேர்முகப்பயிற்சியும் உண்டு.”

என்ன?.....எங்கே கிளம்பி விட்டீர்கள்? போஸ்ட் கார்டு வாங்கத்தானே?

உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சி துவங்கிவிட்டது.

நீங்கள் கடிதம் எழுத வேண்டிய முகவரி

விவேகானந்தா கல்வி நிலையம்
9, மேட்லி ரோடு,
தி. நகர், சென்னை - 17.

NAGA

பத்திரிகைகளுக்குத் தந்த முதல் அறிக்கையில், இந்திரா காங்கிரஸ், தி. மு. க. ஆகியவற்றின் பணபலத்தைக் குறிப்பிட்டார், எல். ஆர். ஊழல் நாற்றமடிக்கும் பெர்மிட் – லைசென்ஸ் ஆட்சியைச் சாடினார். பிறகு பழைய காங்கிரஸும் சுதந்திராவும் சேர்ந்து 59 லட்சம் வோட்டுக்களைப் பெற்றுள்ளதையும், தி. மு. க. வும் அதன் தோழமைக் கட்சிகளும் 76 லட்சம் வோட்டுக்கள் பெற்றிருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

இருளிலிருந்து மீண்டு வரப் போராடினார் ராஜாஜி. ''எவ்வளவு கஷ்டங்களைச் சந்திக்க நேர்ந்தாலும் ஆச்சாரியன் பாடபோ னையை நிறுத்தாமல் தொடரத்தான் வேண்டும்'' என்று பத்திரிகை பேட்டி ஒன்றில் குறிப்பிட்டார். தேர்தல் முடிவுகள் வெளியாகி இரண்டே தினங்களில் அவர் நிஜலிங்கப்பாவுக்கு எழுதிய ஒரு கடிதம், தோல்வி கண்டு சோர்வடையாத அவர் மனநிலையையும், மேலும் ஒரு நீண்ட போராட்டத்தை எதிர்நோக்க அவர் சித்தமாக இருந்ததையும் உணர்த்துகிறது! நம்ப முடியாத அளவு வியப்பு தரும் அந்தக் கடிதத்தின் சில வரிகள்:

''இனி நமது பணி மக்களிடம்தான் நடக்க வேண்டும்; நாடாளுமன்றத்தில் அல்ல. காந்திய காங்கிரஸின் ஆரம்ப நாட்களில் இளைஞர்களும் யுவதிகளும் அணிவகுத்து நின்றது போல், இப்போது நாம் தொண்டர் படை திரட்ட வேண்டும். இள வயதினர் தேச பக்தியுடன் ஆர்வமாக இருக்கிறார்கள். இப்போது நமது எதிரி சர்வாதிகாரம். பிரிட்டிஷாருடன் போராடியது போல், இப்போது சர்வாதிகாரத்தை எதிர்த்து நாம் போராட வேண்டும்.''

'இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு நடக்கப் போகும் யுத்தத்தின் போது நாம் இருப்போமா இல்லையா?' என்பது பற்றிய சிந்தனையே ராஜாஜியின் கடிதத்தில் காணோம்! இன்னும் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அவருக்கென்ன 97 வயதுதானே ஆகியிருக்கப் போகிறது!

ராஜாஜி எதிர்த்தது இந்திரா காந்தியை மட்டுமல்ல. சில மருந்துகள் நோயைக் குணப்படுத்துவதை விட அதிகமாக, உடலுக்குத் தீங்கு செய்கின்றன என்பதால் எதிர்த்தார். பட்டாணிக்குச் செயற்கை நிறம் ஊட்டுவதை எதிர்த்தார். டெட்டனஸ் ஊசி போடுவதில் கவனக் குறைவை எதிர்த்தார். பிரெஞ்சு அணு ஆயுதச் சோதனையையும் எதிர்த்தார்.

குருவாகவும், மக்கள் நலனுக்குக் காவலராகவும், ஆட்சியில் உள்ளோருக்கு மாறுபட்ட கருத்துக் கூறி ஜனநாயகப் பணியாற்றுஇறவராகவும், பார்வையாளராகவும், விமர்சகராகவும் விளங்கினார். மதியழகனுக்குத் தவறைத் திருத்திக் கொள்ளுமாறு ராஜாஜி எழுதிய ஒரு குறிப்பு:

''அன்புள்ள மதியழகன், ஒரு மனிதன் தனக்குள்ள நிலத்தைத் தனது மூன்று பிள்ளைகளுக்கும் இரண்டு பெண்களுக்கும் பிரித்துக் கொடுப்பானேயானால், அல்லது இயல்பான அன்பு – பாசம் காரணமாக அன்பளிப்பாக வழங்குவானேயானால் அது பினாமியாகாது; சட்ட விரோதமும் அல்ல. சட்டம் தெரிந்த அட்வோகேட் ஜெனரல் இருக்கிறார். அவரைக் கேட்டுப் பாருங்கள்.''

இந்திரா காந்தியின் மகன் மோட்டார் கார் தயாரிக்க லைசென்ஸ் பெற முயற்சி செய்வதாகத் தெரிய வந்தபோது:

''ஜெர்மனியைச் சேர்ந்த ஃபோக்ஸ் வாகன் நிறுவனம் சிறிய, மலிவான கார்களை – அதைவிட முக்கியம் – சிறந்த கார்களை இந்தியாவில் தேவைப்படுவோருக்கு விற்கத் தயாராக இருக்கும் போது அதை ஏன் நமது அரசு ஏற்றுக் கொள்ளக்கூடாது? சிறிய அல்லது பெரிய கார்களை உற்பத்தி செய்கிற ஆபத்தான சாகசங்களில் மக்களின் வரிப்பணம் செலவாகக் கூடாது.''

தென்னாப்பிரிக்காவிலிருந்து வரும் கிரிக்கெட் அணியுடன் இங்கிலாந்து அணி ஆடச் சம்மதிக்காது; ஆட்டத் தொடர் ரத்தாகும் என்ற செய்தி வெளியான போது:

''பிரிட்டிஷ் மக்கள் நல்ல கிரிக்கெட் பார்க்கக் கூடிய வாய்ப்பை ஏன் இழக்க வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. நிறவேற்றுமை என்பது ரொம்பக் கெட்ட விஷயம்தான். ஆனால் நிறவேற்றுமை பார்ப்பவர்கள் நல்ல கிரிக்கெட் ஆட முடியும். ஒரு சாராரின் மோசமான உள்ளங்களையும் கொள்கைகளையும் மாற்றி, அவர்களை உயர்த்துவது என்பது அவர்களைப் பகிஷ்கரிப்பதாலோ ஒதுக்கி வைப்பதாலோ நடக்காது!''

''முன்பு சர்க்கா சுற்றிக் கொண்டிருந்தோம்; இப்போது சூதாட்டச் சக்கரம் நாடெங்கும் சுழல்கிறது'' என்று கூறி வருந்திய ராஜாஜி, 'அரசாங்கமே லாட்டரி நடத்துவது, அரசியல் சாசனப்படி முறையான

இந்திராவின் புகழ் உச்சத்தில்!



* பாகிஸ்தானிடமிருந்து பங்களாதேசத்தை விடுவித்த போது: ''இந்தியாவின் பிரதமருக்குத் தொடர்ந்து அருள்புரியுமாறு இறைவனைப் பிரார்த்திப்போம்.''

தாகுமா?' என்பதற்கு உச்ச நீதி மன்றத்தின் கருத்தைக் கோரிப் பெறுமாறு ஜனாதிபதி வி. வி. கிரியை வற்புறுத்தினார். அரசு லாட்டரி நடத்துவதை நியாயப்படுத்த முயன்ற கருணாநிதியின் கூற்றைப் பரிகசித்தார்: ''பள்ளிக்கூடங்களுக்கும் மருத்துவமனைகளுக்கும் உதவ லாட்டரி பணம் உபயோகமாகிறது என்ற வாதம் அரசாங்கம் லாட்டரி நடத்துவதை நியாயப்படுத்திவிடாது. அடுத்தாற்போல், விபசார விடுதிகளிலிருந்து கிடைக்கும் பணம் கூட இப்படி நல்ல காரியங்களுக்குப் பயனாவதாக அரசு வாதாடலாம்!''

கிழக்குப் பாகிஸ்தானில் நடந்த அக்கிரமங்கள் ஸி. ஆரின் இதயத்தை வேதனைப்படுத்தின. ''யாஹ்யாகானுக்கும் அவரது தளபதிகளுக்கும் என்னவாகி விட்டது?'' என்று கோபமாகக் கேட்டார் அவர். ''அவர்கள் தங்கள் உன்னதமான மதத்தின் மீது நம்பிக்கை இழந்து விட்டார்களா? பொது அறிவை முற்றிலும் பறி கொடுத்து விட்டார்களா?''

அடக்குமுறை, அகதிகளை வெளியேற்றியது. செப்டம்பர் இறுதிக்குள் 90 லட்சம் அகதிகள் இந்தியாவுக்கு வந்துவிட்டனர். நாளொன்றுக்கு 30,000 பேர் என்ற விகிதத்தில் வந்தனர். கடைசியில் டிசம்பர் 71 — இல் இந்திய ராணுவம் பங்களாதேஷ் படையுடன் இணைசேர்ந்து, பாகிஸ்தானைத் தாக்கியது. ஒரு சில தினங்களில் பங்களாதேசம் விடுதலை பெற்றது. முஜிபுர் ரஹ்மானுக்கு மகத்தான வரவேற்புக் கிடைத்தது. இந்திரா காந்தியின் புகழ் உச்சத்துக்கு உயர்ந்தது. கிழக்குப் பகுதியில் நோக்கம் நிறைவேறி விட்ட படியால், மேற்குப் பகுதியில் ஒரு தலைப்பட்சமாக — எதிராளியின் ஒப்புதலை எதிர்பார்க்காமல் — தாமே பெருந்தன்மையுடன் போர் நிறுத்தத்தை அறிவித்தார் இந்திரா. அச்சமயம் இந்தியா மேற்கிலும் வெற்றிமேல் வெற்றி பெற்று முன்னேறி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ராஜாஜி எழுதினார்:

''நமது தளபதிகளும் முப்படையினரும் அற்புதமான வெற்றியை அடைந்திருக்கிறார்கள். இந்த வெற்றியின் மத்தியில் நாம் அடக்கமாக இருப்போம். இந்தியாவின் பிரதம மந்திரிக்குத் தொடர்ந்து அருள் புரியுமாறு இறைவனைப் பிரார்த்திப்போம். ரொம்பவும் தைரியமாகப் போர் நிறுத்தத்தை எதிராளியின் ஒப்புதலை எதிர்பாராமல் தானாகவே அறிவித்த இந்திரா காந்தியின் நல்லெண்ணம் வீண் போகாது.''

வாழ்த்த வேண்டிய நேரத்தில் இந்திராவை வாழ்த்த ராஜாஜி தவறியதே இல்லை.

சுதந்திரக் கட்சியின் தேய்மானம் தேர்தலுக்கு முன்பே தொடங்கிவிட்டது. குஜராத்தில் நடந்த ஓர் உபதேர்தலில், சுதந்திரக் கட்சி வேட்பாளரை எதிர்த்துக் காங்கிரஸ் சார்பில் **எஸ். கே.** பாட்டீலை ஆதரித்ததற்காக, அன்றே கே. எம். முன்ஷி தாக்குதலுக்கு உள்ளானார். அவர் — முன்ஷி — படிப்படியாகச் சுதந்திரக் கட்சியிலிருந்து விலகிச் சென்று விட்டார். இது 1969 — இல் நடந்தது எனில், 1971 தேர்தல் தோல்விக்குப் பிறகு, பல மாநிலங்களில் கட்சிக்காரர்களும் தலைவர்களும் பிரிந்து போய்க் கொண்டேயிருந்தனர். ''தலைமைப் பதவியில் இருப்பவர் தோல்விக்குப் பொறுப்பேற்று ராஜினாமா செய்ய வேண்டும்; பொறுப்பை வேறு ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும்'' என்று கூறி, மசானி, ராஜினாமா சமர்ப்பித்தார். மசானியின் கூர்மையான, தெளிவான மதியையும் வாதத்திறனையும் நிர்வாக ஆற்றலையும் உணர்ந்திருந்த ஸி. ஆர்., பதவியில் நீடிக்குமாறு அவரை வற்புறுத்தவே முயன்றார்:

''கட்சி மறைந்து விடாமல் காப்பாற்ற உங்களைத் தவிர வேறு யாருமில்லை. உங்கள் சக்தியையும், ஆழ்ந்த கவனத்தையும் இன்னும் ஒரே ஓர் ஆண்டு கட்சிக்குக் கொடுங்கள். பிறகு கடவுள் விட்ட வழியாகட்டும்.''

மசானி வருத்தத்துடன் ஆனால் உறுதியாகப் பதிலெழுதி, தம்மால் பதவியில் நீடிக்க முடியாது என்று சொல்லிவிட்டார்.

(தொடரும்)

‘குண்டிலும் குழியிலும்தான் தேடவேண்டும்!’

* இவ்வாரக் கல்கியில், தாரா பதில் அளித்த பதினாறு கேள்விகளுள் சென்னை வாசகர்களின் கேள்விகள் மட்டும் ஒன்பது இருந்தன! மற்றவர்களையும் கவனிங்க சார்!

சங்கராபுரம், கே. மகேஷ்.

* கட்சியில் டிக்கட் மறுக்கப்பட்ட போதும், மனம் தளராமல், துணிவோடு தேர்தலில் நின்று, பொது மக்களின் ஆதரவைப் பெற்று, வெற்றி பெற்றதோடு, கலைஞரே வியக்குமளவிற்குத் தம்மை ஆளாக்கிக் கொண்ட, கமலக் கண்ணனை, நாமும் பாராட்டியே தீர வேண்டும்!

கும்பகோணம், எஸ். கே. மூர்த்தி.

* அகிலா கார்த்திகேயன் எழுதிய நையாண்டிக் கதை படித்து ஏற்பட்ட சந்தேகம்: அரசியல் நாகரிகம் இருக்குமிடம் குண்டா? குழியா?

திருச்சி — 21, கிஷோர்.

* பஸ்களில் ஏற்படும் பிரச்னைக்கு, காரணமானவர்களை வைத்தே அலசி, தீர்வு காண முயன்றுள்ளீரே! பாராட்டக் கூடிய வித்தியாசமான ஒரு முயற்சி. அது சரி, கண்டக்டர்களையும் கலந்துரையாடலில் சேர்த்துக் கொண்டிருக்கலாமே!

தூத்துக்குடி, ஸ்பிக் நகர் ரவி.

* சென்ற இதழ் சிறுகதைகள் யாவும் நற்பாடங்களாய் விளங்கின. தலைப்புகளும் அதற்கேற்றாற் போல் — ‘வெளிச்சம்,’ ‘தேடல்,’ ‘திருப்பணி’ — முத்து முத்தாக அமைந்துவிட்டன.

சென்னை — 84, உஷா நாராயணன்.

* எந்த பிரதி உபகாரமுமில்லாமல், ‘யாம் பெற்ற இன்பத்தை இவ் வையகமும் பெறுக’ என்பது போல, தாம் கற்ற ஆழ்நிலை தியானத்தை, கிராம மக்களிடையே பரப்பி, அதன் மூலம் நன்மை செய்து வரும் ஜனார்த்தனம் ஒரு வித்தியாசமான மனிதர்தான். மேலும் அவருடைய செயலுக்கு ஒத்துழைப்பு நல்கி வரும் நண்பர்களும் கற்றுக் கொள்ள முன்வந்து பயன் பெறும் கிராம மக்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்தான்!

புதுவை — 3, புதுச்சேரி நாகி.

* ‘தியானம் பழகும் கிராமங்கள்’ கட்டுரை படித்தேன். தியானத்தைப் பற்றிய பல பயன்களைப் பட்டியலிட்டதோடு மட்டுமல்லாமல் தியானம் என்பது என்ன என்பதையும் என் போன்றோருக்கு உணர்த்திய கல்கியின் பணி போற்றுதலுக்குரியது.

பாபநாசம், ப. விஜயா.

* வி. பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசின் நூறு நாட்கள் ஆட்சி மக்களுக்கு நம்பிக்கை

வட்டமேஜை

ஊட்டும் விதத்தில் அமைந்துள்ளது. தலையங்கத்தில் குறிப்பிடாத செய்தி வி. பி. சிங் ஜனதா தள அமைப்பின் தலைவர் பதவியை ராஜினாமா செய்தது. ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்படவில்லையென்றாலும் உயர் பதவியை உதர முன் வந்த அவர் செயல் பாராட்டப்பட வேண்டியதாகும்.

கோவை — 38, சி. சுந்தரேசன்.

* தலையங்கம் வி. பி. சிங் என்ற தனிநபரிடம் உள்ள நல்ல அம்சங்களைப் பாராட்டி எழுதப்பட்ட ஒன்றாகத்தான் தெரிகிறதே தவிர பிரதமர் வி. பி. சிங்கின் அரசியல் நடவடிக்கைகளை விமர்சித்ததாகத் தெரியவில்லை. ஒவ்வொரு பிரச்னைக்கும் ஒரு கமிட்டி அமைத்ததைத் தவிர இதுவரை வேறு என்ன சாதித்துள்ளார் பிரதமர்? நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள்! எந்தப் பிரச்னையேனும் ‘நிச்சயம் தீரும்’ என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாக உறுதியான நடவடிக்கை ஏதேனும் எடுக்கப் பட்டுள்ளதா? ‘இல்லை’ என்பதே கசப்பான உண்மை!

கும்பகோணம், எஸ். வெங்கடேசன்.

* மிஸ்டர் க்ளீன் — ராஜீவன் மேல் ஊழல் கறை படிய மூன்றாண்டுக் காலம் பிடித்தது. ஆனால் நூறு நாட்களுக்குள் ஜனதா தளத்தின் 'Value based Politics' தேவிலால் குடும்பத்தினால் சோதனைக்குள்ளாகிவிட்டது.

சென்னை — 13, த. ஜெயராமன்.

* துப்பறியும் நாவலைப் படித்தது போல் இருந்தது, மோகன்தாஸ் கூறிய செய்திகள்.

கல்லிடைக்குறிச்சி, இரா. சண்முகசுந்தரம்.

* கல்கி 11.3.90 இதழில் சென்னையில் உருவாகியுள்ள காமாட்சி கோயில் பற்றி ஆர்வத்துடனும் பக்தியுடனும் படித்தேன். கட்டுரையும் புகைப்படங்களும் வெகு சிறப்பாக இருந்தன. ஆனால் சென்னையில் ஏகாம்பரேசுவரர் கோயில் அமைந்த வரலாறு பற்றி ஆரம்ப வரிகளில் கூறப்பட்டுள்ளவை சரியல்ல. ஆலங்காட்டு பிள்ளை என்பவர் காஞ்சிபுரம் சென்று காமாக்ஷி அம்மனை வழிபட்டு வந்ததாகவும் அவர் உடல்நலக் குறைவினால் போக முடியாமல் சோகமுற்ற போது அன்னை கனவில் தோன்றி, ‘‘நான் உனக்காகச் சென்னையம்பதியிலேயே எழுந்தருளுகிறேன்’’ என்று, குறிப்பிட்ட இடத்தையும் கட்டிக் காட்டியதாகவும் அங்கு ஆலங்காட்டுப் பிள்ளை காமாட்சி அம்மனுக்கு மட்டுமின்றி அப்பன் ஏகாம்பரநாதனுக்கும் ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தார் என்பதாகவும் வரலாறு.

வி. எஸ். ஸ்ரீகுமார்.
அபிராமி அந்தாதி கல்வெட்டுக் கமிட்டி தலைவர்.
6, ஏகாம்பரேஸ்வரர் அக்ரஹாரம்,
சென்னை — 3.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.



மின்னலடிக்குது அதிவெண்மை
மிஞ்சிவெளுக்குது ஒரு துளி ரின்.
SUPER POWER
RIN
STRIKES WHITER
WASHES MORE
மாபெரும் சக்தி ரின்
லீவரின் தரமான தயாரிப்பு


Registered as Newspaper in Sri Lanka
NEW
Rexona
FOR SOFT AND GLOWING SKIN
Rexona
நகதக தங்கப் பட்டுடன்
தழுவுது தங்கப் பட்டுடல்
இப்போது, தூய தேங்கா-
யெண்ணெய் வளம் செறிந்து வரும்
புதிய ரெக்ஸோனா : உங்கள் மேனிக்கு
தங்கப் பட்டுமென்மை, பட்டொளி
மெருகு, மோகனப் புதுமணம்,
புது வடிவம், உமதாசை தீர்க்கும்
அனைத்துகுண சோப் புது ரெக்ஸோனா.
புதிய
ரெக்ஸோனா
பொன்னுன மென் பட்டு மேனி மெருகுக்கே.
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு
தூய தேங்காயெண்ணெய் செறிந்த